PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWA[illegible] CHETTIAR
PA[illegible]

வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்
Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

திருவள்ளுவர் நூல் நிலையம்

கழக வெளியீடு—உ0௬.

# கழகத் தமிழ்ப் பாடம்

## ஆறும் புத்தகம்

(முதற் பாரம்)

❋

ஆசிரியர் :
திருவள்ளூர், வெஸ்லியன் மிஷன் ஹைஸ்கூல்
தலைமைத் தமிழாசிரியராயிருந்த
திருவாளர். S. சகதேவ முதலியார்.

❋

:: திருநெல்வேலி, தென்னிந்திய ::
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை

பதிப்புரிமை] 1937 [விலை அணா 7

*1st Edition : Dec. 1937*

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., :
TINNEVELLY, & MADRAS.

Dec. 1937

The Jupiter Press, Madras.

# முகவுரை

தமிழ்மாணவர்கள் தமிழ்மொழியைச் செம்மையும் இனிமையு முறப் பேசவேண்டும்; திருத்தமுந் திறமையும் பெற எழுத வேண்டும்; தமிழ்மொழியிலுள்ள உயரிய நூல்களிற் பழகி உட் கருத்துக்களையும், நுட்ப நுணுக்கங்களையும், அழகு நயங்களையும் அறிந்துணர்ந்துகொள்ள ஆவலும் ஊக்கமு முடையவர்களாக வேண்டும்; வெவ்வேறு கலையறிவுகளை யூட்டும் பற்பல நூல்களிற் காணப்படும் உண்மைகளையும் உயர்பொருள்களையுங் கண்டு தெளிந்து அறிவிற் பெருகவேண்டும். இச் சிறந்த நோக்கங்களு டனேயே இக் கழகத் தமிழ்ப்பாடப் புத்தக வரிசை எழுதப்பட் டிருக்கின்றது.

இதன்கண் ஒவ்வொரு பாடத்தின் அடியிலும் பயிற்சி எழுதிச் சேர்க்கப்பட்டிருப்பதோடு நூலிறுதியில் செய்யுட்பாடக் குறிப்புக்களும் அருந்தொடர் மொழிப் பொருளகராதியும் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இவ் வாறாம் புத்தகத்துக்கு நண்பர் திரு. அ. நடராசபிள்ளை அவர்களும், நண்பர் திரு. காழி. சிவ. கண்ணுசாமிபிள்ளை, பி.ஏ., அவர்களும் முதற்கண் எழுதித்தந்த பாடங்களை அவ்விருவரும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரும் கேட்டுக்கொண்ட படி யான், மேற்படி கழகத்தார்வழியாக முன்னரே வெளிப்படுத்தியுள்ள 4-வது, 5-வது பாடப் புத்தகங்களுக்கேற்பத், திருத்தியும் புதுக்கியுஞ் செப்பஞ் செய்தும், புதிய சில பாடங்களை எழுதிச் சேர்த்தும் முறைப்படுத்தி இதனை வெளியிட்டுள்ளேன். இதற் குரிய பாடங்களின் ஒரு பகுதியை எழுதித் தந்துள்ள மேற்படி நண்பர்களிருவருக்கும் எனது நன்றி எழுமையு முரியதாகும். இதனைப் பதிப்பிக்கும்போது, காழி. சிவ. கண்ணுசாமிபிள்ளை அவர்கள் விளக்கப்படங்கள் அமைத்ததற்குக் குறிப்புக்கள் தந்தும், பிழைதிருத்தம் பார்த்து முதவியது பாராட்டுதற்குரியது.

சேலை, திருவள்ளூர்,
7—12—37.

சகதேவன்.

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| க. | கடவுள் வாழ்த்து | ... | 1 |
| உ. | கரும்பின் வரலாறு | ... | 2 |
| ௩. | காலைக்கடன் | ... | 6 |
| ௪. | சிறுவர் விளையாட்டு | ... | 10 |
| ௫. | தேனீ | ... | 15 |
| ௬. | இராக்காலம் | ... | 20 |
| எ. | நல்லொழுக்கம் | ... | 21 |
| அ. | ஒழுக்கம் | ... | 26 |
| ௯. | காவிரியும் மேட்டூர் அணைக்கட்டும் | ... | 28 |
| க0. | இத்தாலி | ... | 32 |
| கக. | இரவிவர்மா | ... | 36 |
| கஉ. | வெனிஸ் வணிகன் | ... | 40 |
| க௩. | மக்கட்பேறு | ... | 49 |
| க௪. | மாணிக்க நாயக்கர் | ... | 51 |
| க௫. | பேராசை பெருங்கேடு | ... | 56 |
| க௬. | சமயத்தலைவர்கள் | ... | 63 |
| கஎ. | திருக்குறள் (ஓர் உரையாடல்) | ... | 69 |
| கஅ. | திருவள்ளுவமாலை | ... | 75 |
| க௯. | சிவப்பிரகாசர் | ... | 76 |
| உ0. | நீர்மேற் செலவு | ... | 80 |
| உக. | நயவஞ்சக நரி | ... | 85 |
| உஉ. | மார்த்தாண்டன் மணம்புரிதல் I | ... | 92 |
| உ௩. | ஷை II | ... | 98 |
| உ௪. | செய்யுட்பாடம்: தனிப்பாடல்கள் | ... | 107 |
| | ,, நன்னெறி | ... | 109 |
| | செய்யுட்பாடக் குறிப்புக்கள் | ... | 113 |
| | அருந்தொடர்மொழிப் பொருளகராதி | ... | 115 |



சகுந்தலை துஷ்யந்தனுக்குச் செய்தி விடுத்தல்—இரவிவர்மா.

உ

கடவுள் துணை

# கழகத் தமிழ்ப் பாடம்

## ஆறாம் புத்தகம்

---

### க. கடவுள் வாழ்த்து

க. அருந்துணையே! அறமுடையார்க் ககமுருகி
நினைத்தடியா ரழைக்கும் போது
வருந்துணையே! மதிபொருத்தி வஞ்சனையில்
லாதுழைப்பார் மதிக்குங் கூலி
தருந்துணையே! சகலருக்குந் தகைபொருந்த
அருள்நீதி தழைக்குந் தெய்வப்
பெருந்துணையே! பெருநிதியே! இடங்காலம்
இறப்பில்லாய்! பிறப்பில் லாயே!

உ. எய்யாத வாழ்வுமிகல் வையாத
நெஞ்சுமுயிர் எவைக்கு மின்னா
செய்யாத தன்மையுநின் செய்யவடித்
தொண்டரிடஞ் சிறக்கு மன்பும்
பொய்யாத நாவுமுயிர் கொய்யாத
கையுமுன்பொற் புகழைப் பாடும்
மெய்யான உடைமையுமே அய்யாநீ
தந்திடயான் விரும்பு வேனே.

—தி. இலக்குமண பிள்ளை.

## உ. கரும்பின் வரலாறு

"மாணவர்களே! நான்தான் கரும்பு. உங்களுக்கு எப்பொழுதும் இனிமையை யூட்டி இன்புறச் செய்கிறவன் நானே. என் வரலாறோ மிகவும் விரிவானது. என்னைப் பற்றிப் பலரும் சிறப்பாகப் பேசிக்கொள்வர். ஒரு நாட்டின் கைத்தொழில்களிற் சிறந்தது எது என்று வினவுவீர்களானால், **சர்க்கரைத் தொழில்** என்று பலர் கூறுவதை நீங்கள் கேட்பீர்கள்.



கரும்பு

நான் மிக்க செல்வத்தைக் கொடுக்கக் கூடியவனாதலால், என்னைப் பலர் உவந்து போற்றுகின்றனர். நீர்வளம் நிறைந்த செழுமையான நிலங்களே எனக்கு விருப்பத்தைத் தருவனவாகும். தோட்டங்களிலும், வயல்களிலும் நான் செழுமையாக வளருவேன். நான் நிறைய நீர் உண்பவனாதலால், என்னிடத்தில் நீரை மிகுதியாகத் தேக்கிவைப்பார்கள். நாணலும் பேய்க்கரும்பும், மூங்கிலும், நானும் ஓரினத்தவர்கள். எங்களைத் தமிழ்நூலாசிரியர்கள் புல்வகையிற் சேர்த்தனர். ஆனால், நான் ஆடுமாடுகள் தின்னும் புற்போன்றவனல்லன் என்பதைமட்டும் உங்

களுக்கு நினைவூட்டுகிறேன். நான் தேவருலகத்திலிருந்து கொண்டுவரப்பட்டவன். சிறப்புற்ற கடையெழு வள்ளல் களில் ஒருவனான **அதிகமானின்** முன்னோர்கள் என்னைத் தேவருலகினின்றும் இங்குக் கொண்டுவந்தனர்.

நான் வள்ளல்கள் தோன்றிய குலத்தாரால் கொண்டு வரப்பட்டவன்; ஆதலால், என்னை அணு அணுவாக நறுக்கி னும், நான் உலகத்தார்க்கு இனிய பயன் தருவேன்; அது கரு தியே நான் பல கணுக்களைக் கொண்டிருக்கிறேன். என்னை வளர்ப்பதும் ஓர் அருமையான காரியமன்று. என்னைச் சிறு சிறு துண்டுகளாய் வெட்டி வயல்களிலோ, தோட்டங்களிலோ மண்ணில் நட்டு உழவர்கள் நீர் பாய்ச்சுவாராயின், நான் தழைத்துக் கழைத்து வளருவேன். ஒன்றிரண்டு கணுக்கள் நிலமட்டத்திற்குமேல் தெரியுமாறு வரிசையாக நட்டுவிடல் வேண்டும். நிலத்தில் நடப்பட்டு மறைந்துள்ள கணுக்கள் தோறும் சல்லி வேர்கள் கிளம்பும்; மேலுள்ள கணுக்கள் தோறும் தளிர்கள் தோன்றித் தழைக்கும். என் நுனிப் பகுதிக்குக் **கோந்தாழை** என்று பெயர். என் இலைகள் தாழைமடலைப்போல நீண்டனவாக இருக்கும். நான் பூத்து உலர்வது முண்டு. நான் நன்கு வளரவேண்டுமானால், உழவர்கள் எனக்கு மாதம் ஒருமுறை கொத்திக்கொடுத்து வாரம் இருமுறை நீர் பாய்ச்சுதல் வேண்டும்.

நான் கிளைத்து அடர்த்தியாய்ப் பலவாக வளர்கின்ற காரணத்தினாலே, என்னிடத்தில் நீங்கள் அச்சமின்றி வரு தற் கியலாது. என் இலைகள் கூர்மையாய்ச் சுரசுரப்பானவை; தருப்பையைப் போல் அறுக்கக் கூடியவை. ஆதலினாலேயே, மக்கள் அவ்வப்போது அவற்றைக் கழித்துவிடுகின்றனர்; நான் முற்றிய பிறகு, என்னை வெட்டிக் கட்டாகக் கட்டிக்

கொண்டு செல்வர். நிலத்திலுள்ள என் வேர்க்கட்டைகளோ நிலத்தோடு சேர்த்து உழப்பட்டு உரம் ஆக்கப் பெறும்.

நான் வெட்டப்பட்டபின் எங்கே போய்ச் சேருகிறேன் என்பதை நினைக்கும்பொழுது எனக்குச் சற்று நடுக்கமாகவே இருக்கிறது. இருந்தாலும், என்னால் பலர்க்கு உண்டாகும் நன்மையை நோக்கி, நான் எனக்கு வரும் இடுக்கண்களை ஒரு பொருட் படுத்துவதில்லை. பெரியோர்கள், பிறர் தங்கட்கு எவ்வளவு துன்பஞ் செய்யினும், அவர்கட்கு இன்பமே புரிவர்; அவர்களைப் போன்று நானும் நடக்க எண்ணியே, என்னை மக்கள் வெட்டிக் கட்டுக் கட்டாகக் கட்டிக் கரும்பாலையிலிட்டுக் கசக்கிய போதும், நான் அவர்களுக்கு இனிய சாற்றினையே கொடுத்து வருகிறேன். அவர்கள் என் யாக்கையைக் கோதென வீசினும் அதனையும் நான் அவர்களுக்கு எருவாகப் பயன்படுமாறு செய்து மகிழ்கிறேன்.

இந்நாட்டில் திருவெண்ணெய்நல்லூர், இராசமகேந்திர வரம், பீமன்பட்டணம், அஸ்கா முதலிய நகரங்களிலும், மைசூர் நாட்டில் அட்டகிராமம் என்ற ஊரிலும் என்னையும் என் இனத்தவர்களையும் கசக்கிச் சாறு பிழியும் ஆலைகள் பல இருக்கின்றன. பிழிந்த சாற்றைக் காய்ச்சிக் கட்டியாக்கி வெல்லமாகவும், சர்க்கரையாகவும் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

என்னை வேழம் என்றும், கன்னல் என்றும், கழை என்றும், இக்கு என்றும், வேறுவேறு பெயர்களால் மக்கள் அழைப்பர். இந்துக்கள் என்னை ஒரு மங்கலப் பொருளாகக் கொள்கின்றனர். அவர்கள் **பொங்கல்** பண்டிகையிலும் வேறு சில சிறிய பண்டிகைகளிலும் என்னைக் கடவுளுக்குப் படைபொருளாக வைத்துப் படைப்பர். பல தெய்வங்களி

லும் என்னை விரும்பி யேற்று மகிழுந் தெய்வம் பிள்ளையா ரென்ற விநாயகர் என்றுங் கூறுவர்.

தமிழர்கள் இயற்கையை விரும்புபவர்கள். அவர்கள் எப்பொருளையும் இயற்கையில் அமைந்த வண்ணமே நுகர எண்ணுபவர்கள். அதனாலன்றோ அவர்கள் என்னைச் சிதையாது கடவுளுக்குப் படைத்தும், பின் அப்படியே கறித்துச் சுவைத்தும் இன்புறுவர்? சர்க்கரையாக உண்பதிலும் கரும்பாகச் சேர்த்துக் கொள்வதே இயற்கைமுறைப்படி உடல்நலம் தருவதாகும் என்று தேர்ந்த அறிஞர் கூறுவர். இதை அறிந்துதான் இயற்கை விலங்குகளில் தலையாயதாகிய யானை என்னை விரும்பி முறித்துத் தின்னுகிறது போலும்!

என் பெருமையைக் கண்டும் கேட்டும் அழகிற்கே உருவாகிய மன்மதன் என்ற தேவனும் என்னையே வில்லாகக் கொண்டானென்றால், என் பெருமையை நான் இன்னும் எடுத்துச்சொல்லவும் வேண்டுமோ!"

## பயிற்சி

1. சீர்வளம், வள்ளல், அவ்வப்போது, உரம், இடுக்கண், பயன் படுத்தல், மங்கலம், படைபொருள், நுகர்தல், கறித்தல், சுவைத்தல்.
2. கரும்பு என்னுஞ் சொல்லுக்கு வேறுமொழிகள் காண்க.
3. அவர்கள், எரு, எப்பொழுது, யாறு, யார், உழவர், ஆக்கை அதனால், அன்றோ, இதனை, இடு, அழகு, பொன்னு, புதீனு— பருத்த எழுத்துக்கள் எவ்வகை எழுத்துக்கள்?
4. கரும்பு தன்னை ஒரு பெரியோன் என்று சொல்லிக் கொள்கின்றது—இஃது எப்படி?

## ௩. காலைக்கடன்

காலைநேரமே மக்கள்வாழ்க்கையிற் பெரிதும் பயன்படும் வேளையாகும். அவ்வேளையில், ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய முதன்மையான கடமைகள் சில உள. அவற்றை ஒவ்வொருவரும் அறிந்து கையாளவேண்டுவது இன்றியமை யாததாகும்.

விடியற்காலத்திற் படுக்கையை விட்டு எழுதல்வேண்டும். விடியற்காலமாவது ஞாயிற்றின் தோற்றத்திற்கு முந்திய நேரமாகும்; இது **வைகறை** எனவும்படும். **ஔவையார்** என்ற தமிழ்மூதாட்டியாரும், "வைகறைத் துயிலெழு" என்று கூறியுள்ளார். அஃதாவது, பகலவன் தோற்றத்திற்கு முன் படுக்கைவிட்டு எழுதல்வேண்டும் என்பதாம்.

அங்ஙனமன்றி, கதிரவன் தோற்றத்திற்குப் பின்னும் துயிலுதல் நோயாளியின் செய்கையாகும். நோயில்லா ஒருவனும் பரிதியின் தோற்றத்திற்குப்பின் நாடோறும் உறங்கி வருவானாயின், அவன் விரைவில் நோயாளியாவான்.

இரவில் அயர்ந்து தூங்கி விடியற்காலத்தில் எழும் ஒருவனுடைய கருத்துக்கள் மிகத் தெளிவாக இருக்கும். அவன் செய்யும் வேலைகள் செம்மையாக முடிவுறும். மாணவர் சிலர் இரவில் நெடுநேரம் முயன்று படித்தும், பாடம் வரப் பெறாது சோர்ந்து படுத்துறங்குகின்றனர். உறங்கினவர் விடியற்காலையில் எழுந்து அப்பாடத்தினை மீண்டும் படிக்கச் சிறிது நேரத்திலேயே அப்பாடம் வரப்பெறுகின்றனர். எனவே, கல்விப் பயிற்சிக்கு வைகறைத் துயிலெழுதல் மிகவும் இன்றியமையாததாகும் என்பது தெளிவாகின்றதன்றோ?

எழுந்தவுடன் படுக்கையில் அமர்ந்தபடியே எல்லாம் வல்ல இறைவனை வணங்கல் வேண்டும். அவ்வணக்கம்

இறைவனை எண்ணியோ, அவன் பெருமைகளைத் தொகுத்துக் கூறும் அறிஞர்தம் செய்யுட்கள் இரண்டொன்றைப் பாடியோ செய்யப்படலாம். எழுந்தவுடன் எண்ணும் எண்ணம் தூய்மையுடைய தொன்றா யிருத்தல் வேண்டும்; அவ்வா றிருப்பின் நாள்முழுதும் அஃது உள்ளத்தில் தூய எண்ணமே குடிகொள்ளுமாறு செய்யும்.

இறைவனை நினைந்தபின், படுக்கைவிட் டெழுந்து நீர் கொண்டு முகமுதலியவற்றைக் கழுவிக் கொள்ளல் வேண்டும். அடுத்தபடியாக, நிழல்காட்டுங் கண்ணாடி, நற்காட்சிகள் கொண்ட ஓவியம் முதலியவற்றைப் பார்ப்பது நலமாகும். இதனால், உள்ளநிலை ஒழுங்கு பெறுவதுடன் உடல்நிலையும் மேன்மையுறும். நாட்டுப்புறங்களில் வாழ்வோர் உறங்கி யெழுந்தவுடன் தம் வீட்டினையடுத்த தோப்புகட்குச் செல்லல் வேண்டும்; அவ்வாறு சென்று, நற்காட்சிகளைப் பார்ப்பதும், பறவைகளின் இன்னிசைக் குரல்களைக் கேட்பதும் அவர் தம் உடல்நிலை உள்ளநிலைகளை ஓங்கச்செய்யும் முறைகளாம்.

பின்னர், முதனாள் உண்ட உணவுச்சக்கையினை வெளிப்படுத்திவிடுதல் வேண்டும். இது காலைக்கடன்களுள் இவ்வுலக நல்வாழ்க்கைக்கு இன்றியமையாத தொன்றாகும். ஏற்ற காலத்தில் இக்கடனாற்றத் தவறுவதனாலேயே பலர் நோய்கட்கு ஆளாகின்றனர். இனி, நகரங்களில் வாழ்வோர் அதற்கென ஏற்படுத்தியுள்ள விடுதிகளில்மட்டுமே இக் கடனை யாற்றிக்கொள்ளுதல் வேண்டும்; தெருக்களையும் தெருச்சந்துகளையும் பாழ்படுத்துதல் கூடாது. நாட்டுப் புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் வாழ்வோர் விடியற் காலத்தே வெளியே ஒருகல் தொலையாவது நடந்து சென்று, ஒதுக்கிடங்களில் இக்கடன் கழித்தல் நேரிதாம். இவ்வாறு

செய்வதால், காலையில் வீசும் தூயகாற்றினை உட்கொள்ளலாம்; இயற்கைக் காட்சிகள் பல காணலாம்; பறவைகளின் இன்னொலி கேட் டின்புறலாம். இவற்றான் உடல்நலமும் வளர்ச்சியடையும். காலைக்கடன் கழித்தவுடன் ஏற்ற முறையில் உடற்பயிற்சி செய்வது சீரிதாம்.



காலைவேளை

பிறகு, ஆல், வேல் முதலியவற்றின் குச்சியினாலாவது, கரிசலாங்கண்ணி போன்ற பல்நோய் தடுக்கும் பச்சிலையினாலாவது, நல்ல பற்பொடி கொண்டாவது, சிறந்த பற்பசையாலாவது பற்களை நன்கு துலக்கி நாக்கழுக்கையும் போக்கவேண்டும். இளஞ்சூட்டுநீர் கொண்டாயினும் தண்ணீரிலாயினும் தலை முழுகி உடலழுக்கைப் போக்குதல் அடுத்தபடி செய்யவேண்டிய கடமையாம். நீராடுதல் பொதுவாக உடற்கும், சிறப்பாக மூளைக்கும் நன்மை பயக்கும். வேனிற்காலத்தில் ஆறு

குளம் முதலிய நீர்நிலைகளில் மூழ்கிக் குளித்தலே சிறந்ததாம். உழவுமுதலிய தொழில்களை மேற்கொள்ளும் உழைப்பாளிகள் வேலைமுடிவில் நீராடுதல் நலமாகும்.

நீராடியபின், தூய்மையான ஆடைகளை உடுத்து, இறைவன் வழிபாடு இயற்றுதல் வேண்டும். அவ்வழிபாடு கோயிலிலாவது, பூசையறையிலாவது அல்லது ஒரு தனியிடத்திலாவது செய்யப்படுதல் வேண்டும். நேரஞ் சிறிதளவாயினும், மனவொருமைப்பாட்டுடன் செய்யப்பெறும் கடவுள்வழிபாடே சிறந்தது.

பிறகு எளிதில் செரிக்கத்தக்க சிற்றுண்டி உட்கொண்டு அந்நாளிற் செய்யப்போகும் தொழிற்குரியவற்றை ஆராய்ந்து சிந்தித்தல் வேண்டும். மாணவர்கள் காலைநேரத்தில் தங்கள் பாடங்களைப் படித்தறிதல் நற்பயன் தரும். மனத்தெளிவுடன் அவர்கள் அப்பொழுது ஓதும் பாடங்கள் ஒவ்வொன்றும் அவர்கள் மனத்தே பசுமரத்தாணி போல நன்கு பதியும். படிக்குங்கால், பெருங்குரல் கொண்டு படித்தல்கூடாது. மெல்லிய குரலிலாவது, வாய்திறவாமல் அமைதியாகவாவது பாடங்களைப் படித்துப் பொருளை நெஞ்சகத்தே நிறுத்துவது நேர்மையாம். பிறர்க்கு இடர்ப்பாடின்றிப் படிக்கத்தக்க தனிப்பட்ட இடவசதி கிடைத்தால் சில பாடங்களை உரத்துப் படித்தலும் நலமே. முன்னிரவு படித்த பாடங்களை நினைவிற்குக் கொண்டுவருதலும், அன்றைக்கு வேண்டிய பாடங்களிற் பயிலுதலும் காலைநேரத்தில் மாணாக்கர் மேற்கொள்ள வேண்டிய கடமைகளாம்.

## பயிற்சி

1. **கையாளல், துயிலெழுதல், வைகறை, குடிகொள்ளல், ஓவியம், கடனாற்றல், பச்சிலை, வழிபாடு, பசுமரத்தாணி, இடர்ப்பாடு.**

2. சூரியனுக்கு வேறு பெயர்கள் என்ன?

3. வல்லெழுத்துக்களினாலேயே ஆக்கப்பட்ட சில தமிழ்ச்சொற்களை எடுத்துக் காட்டு.

4. காலைமுதல் மாலைவரையில் நீ செய்யுங் கடமைகளை வரிசையாகக் குறித்துக் காட்டு.

---

## ௪. சிறுவர் விளையாட்டு

மக்கள் உடல்நலத்திற்கு விளையாட்டானது மிக இன்றியமையாத தொன்றும். சிறுவர்கட்கோ அஃது அவர்கள் உடலையும் உயிரையும் ஒருங்கு வளர்க்கும் உயர்வானதொன்றெனச் சொல்வது மிகையாகாது. விளையாட்டு இக்காலை புதுப்புது முறைகளில் பல வகையாகக் கையாளப்பட்டு வருகின்றது. ஆயினும், அக்காலத்து நம் நாட்டுச் சிறுவர்கள் கையாண்ட விளையாட்டுக்கள் சிலவற்றை ஆராய்வோம்.

அக்காலத்துச் சிறுவர்கள் உப்புக்கோடு, கிட்டிப்புள்ளு, பம்பரம், குண்டு, சடுகுடு, பந்து எனப் பல ஆட்டங்களைக் கையாண்டு வந்தார்கள். அவற்றுள், உப்புக்கோடாவது உப்பளங்களிற் காய்ச்சிக் குவிக்கப்பட்டிருக்கும் உப்பினைக் காவல்கள் பலவற்றையுங் கடந்து சென்று, மக்கள் கவர்ந்து வருவதைக் குறிப்ப தொன்றாகும்.

இவ் விளையாட்டு விளையாடுமிடத்துக் கோடு கிழித்துக் கொள்ளப்படும். பெரும்பாலும் இது நிலவோடு கூடிய இராக்காலத்தே விளையாடப்படு மாகையால் கோடுகள் நீர்த் தாரைகளால் போடப்படும். மாலைவேளையாயின், புழுதி கூடிய தரையில் கால்களால் கோடுகள் வரைவதும் உண்டு. கெட்டித்தரையில் மண்வெட்டியால் கொத்தியுங் கோடுகள் போடப்படும். காவலர் நிற்குங் குறுக்குக் கோடுகள் விளை

யாட்டில் கலந்துகொள்பவர்களின் தொகைக்குத் தக்கபடி கூட்டியோ குறைத்தோ வரைந்து கொள்ளப்படும். இரு குறுக்குக் கோடுகட்கு மத்தியில் உள்ள இடம் ஆடுவோர் களின் கால்களால் இரண்டு எட்டுக்கள் (தாண்டுகள்) கொண்ட



உப்புக்கோடு

வளவு அகன்றிருக்கும். குறுக்குக் கோடுகட்குத் தட்டுகள் எனவும் பெயர் உண்டு. மேற்கண்ட உப்புக் கோட்டிற்குக் கட்சிக்கு ஐவராகப் பதின்மர் வேண்டும். ஒரு கட்சியார் உப்பைக் காக்கும் ஆயக்காரர்களாகத் தடுத்து நிற்பார்கள். அவர்களில் நால்வர் குறுக்குக்கோடுகள் நான்கிலும் காத்து நிற்பார்கள். ஒருவர் அவர்களுக்குத் தலைவராக இருந்து எல்லாக் கோடுகளிலுஞ் சென்று கண்காணித்து வருவார். அவர்க்குக் கிளியென்றும் பெயர். அவர் குறுக்குக்கோடுகள் சுற்றுப்புறக்கோடுகள் நடுக்கோடுகளாகிய எல்லா இடங்கட்

கும் செல்லுதற் குரியர். கூடுமாயின், ஒரு கோட்டிலிருந்து மற்றொரு கோட்டிற்குப் பறந்து செல்லுமாறுபோல், அவர் தாண்டிப் பாய்தலுஞ் செய்வர். உப்பெடுக்கச் செல்வோராகிய காய்களையும் எடுத்துத் திரும்புவோராகிய பழங்களையும் பற்ற முயல்வதால் இவர்க்குக் கிளி என்ற பெயர் கொடுக்கப் பட்டுள்ளது. மற்றைக் காவலர் நால்வரும் தத்தம் கோடுகளில் நின்று உப்பெடுக்கச் செல்வோரையும், எடுத்து மீள்வோரையும் தடுத்துநிற்பார்கள். கிளியும், முதற்காவலரும், நான்காம் காவலரும் மிகத் திறமை வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

இனி, மற்றொரு கட்சியார் உப்புக் கவருவோராக நிற்பார். இவருள்ளும் தலைவர் ஒருவர் உண்டு. இவர்கள் முதற் கோட்டின் காவலரையும் கிளியையும் ஏமாற்றி உள்ளே செல்லப் பலவழியில் முயல்வார்கள். முயலுங்கால், காவலராலோ கிளியாலோ தொடப்பட்டால், தொடப்பட்டவர்கள் ஆட்டத்தினின்று விலகித் தனியேபோய் நின்றுகொள்ளுதல் வேண்டும். காவலரும் கிளியும் உப்புக்கவர வருவோரைத் தடுத்துத் தொடமுயலுங்கால் தம்மெல்லையாகிய கோட்டிலிராது வெளியிற்போக நேர்ந்தால், அவரும் ஆட்டத்தினைவிட் டகற்றப்பெறுவர். இம் முறையாகத் தடுத்துக் கொண்டிருக்கும் நான்கு காவலரையுங் கடந்து ஏமாற்றி உள்ளே செல்வோர் உப்பை வாரிக்கொண்ட பழமாகக் கருதப் படுவர். உப்புக்குப் பதிலாக அங்குள்ள மண்ணைச் சிறிது ஒரு கையில் வாரிக்கொள்ளல் மரபு.

இங்ஙனம் உப்பு வாரப்பெற்றவுடனே கிளியும் நான்காம் காவலரும் உப்பெடுத்தோர் திரும்பும் வழியினை அடைத்து நிற்பர். உப்பெடுத்தோர் கிளியினையும் தட்டுக் காவலரையும்

ஏமாற்றி நான்கு தட்டுக்களையுந் தாண்டி வந்துவிடுவாராயின், வெற்றியடைந்தவராகக் கருதப்படுவர். அவ்வாறின்றி உப்பெடுத்து வருபவர் தட்டுக் காவலர்களாலோ, கிளியினாலோ அடிக்கப்பட்டுவிட்டால், அவர்கள் தோல்வியுற்றதாகக் கருதப்படுவர். இதுவே ஆட்ட முறை.

இம் முறையாக இவ்வாட்டம் முடிய இரண்டு அல்லது மூன்றுமணி நேரங்கூடப் பிடிப்ப துண்டு. இவ்வாட்டத்தினை ஆயுதமில்லாமற் செய்யப்படும் சிறிய போரென்றே சொல்லலாம். இதனை இளைஞரேயன்றி வலுவுடைய பெரியோரும் ஆடுதலுண்டு. இஃது உடற்கு நலந்தரும் பழங்கால ஆட்டங்கள் பலவற்றுள் மிகச் சிறந்ததொன்றாகும்.

இனி, கிட்டிப்புள்ளு என்ற ஆட்டமானது நீளக் குச்சியொன்றால் சிறு துண்டுக் குச்சியொன்றினைத் தட்டிச் செல்லவிட்டு ஆடுவதாகும். இதுவும் இளைஞர்களால் கட்சி பிரித்து மிக ஊக்கத்துடன் ஆடப்படும். கோலி என்னும் குண்டு, பம்பரம் ஆகியவற்றைக் கொண்டு ஆடும் ஆட்டங்கள் இளஞ்சிறார்கள் உள்ளத்தைக் கவர்வனவாம். ஆனாலும் அவை உடற்பயிற்சிக்குச் சிறந்த ஆட்டங்கள் அல்லவாகலின், பெரியோர் இவற்றை வெறுப்பர்.


கோலி விளையாட்டு

பந்தாட்டம் நம் நாட்டில் நெடுங்காலமாக இருந்து வருகிறது. இவ்வாட்டம் பேய்ப்பந்து, பிள்ளையார்பந்து, எறிபந்து, அடி

பந்து எனப் பலவகைப்படும். இவற்றுள் அடிபந்து என்ற ஆட்டம் ஒன்று பெண்களுக்கும் உரியதாகும். செல்வர்கள் வீட்டில் வேலையின்றி வாழும் பெண்மக்கள் இதனைப் பெரிதும் விரும்புவர். பெண்மக்கள் இவ்வாட்டம் ஆடிவந்த வகையினைப்பற்றிப் பழைய நூல்களிற் பரக்கக் காணலாம்.



துடுப்புப் பந்தாட்டம்

இப்பொழுது, இப் பந்தாட்டத்தில் மேல்நாட்டாரால் நம் நாட்டிற்குப் புதிய முறைகள் பல கொண்டுவரப்பட் டிருக்கின்றன. உதை பந்து, கோற் பந்து, துடுப்புப் பந்து என்பன அவற்றுட் சிலவாம். அக்காலத்துப் பெற்றோரும் ஆசிரியரும் இளைஞர்களை ஆடக் கூடாதெனப் பலவகையில் அடக்கி வந்தனர். இளைஞர்களோ அவர்கள் அடக்குமுறையினை மீறி மறைவாக ஆடிவந்தனர். ஆடுவது இளைஞர்கட்கு இயல்பும் இன்றியமையாததும் என அறிந்த இக்காலப் பெரியோர்கள் அவ்வாட்டங்களைப் பள்ளியிலேயே ஆடச்செய்து அவற்றிற்

காகப் பெரும்பொருள்களைச் செலவிட்டுவருகின்றனர். அம் மட்டுமோ? இவ்வாட்டங்கள் காரணமாகப் பலர் நாடுவிட்டு நாடுசென்று நாட்கள் பலவற்றையுங்கூடக் கழிக்க முன்வருகின்றனர்.

### பயிற்சி

1. உடல்நலம், நீர்த்தாரை, கண்காணித்தல், அடக்குமுறை.
2. பழைய காலத்தின் எவ்வகை வழக்கை உப்புக்கோடு என்னும் விளையாட்டு நினைப்பூட்டுகின்றது ?
3. சினை, குணம், தொழில் ஆகிய இவைகளைக் காட்டும் பெயர்ச் சொற்கள் சில காண்க.
4. நீ கண்டிருக்கும் ஒரு போட்டி விளையாட்டைப்பற்றிச் சில குறிப்புக்கள் கொடு.

---

## ரு. தேனீ

நாம் வீட்டில் அடிக்கடி காணும் ஈக்கள் ஒருவகை; தேனீக்கள் வேறொரு வகையாகும். வீட்டில் காணப்படும் ஈக்கள் பெரும்பாலும் தீநாற்றமுள்ள இடங்களையே தேடிச் செல்லும்; தேனீக்களோ, நறுமணமிக்க மலர்களையே நாடிச் செல்லும். முந்தியன தூய்மையல்லாப் பொருள்களையே தின்னும்; தம் முட்டைகளைக் குப்பை கூளங்களில் இடும்: பிந்தியன மலர்களிலுள்ள தேனினையே குடிக்கும்; முட்டைகளைக் கூடுகட்டிக் கூட்டிலேயே இடும்.

தேன்கூட்டின் அமைப்பு கண்டார் வியக்கும் தகைமையது. “ஆயிரம்பேர் கூடி அழகாகக் கட்டிய அரக்கு மாளிகை,” என்று தேன்கூட்டைப் பற்றிச் சொல்வதுண்டு; தேனீக்கள் தம் கூட்டை அவ்வளவு அழகாகக் கட்டிமுடிக்

கின்றன. தேன்கூடு முழுவதும் பல அறைகளாக அமைக்கப்பட்டுள்ளது. அவ்வறைகளெல்லாம் ஒரே அளவினவாயன்றிப் பல்வேறு அளவினவாய் அமைக்கப்பட்டுக் காணப்படும். அவ்வறைகளில் ஆயிரக்கணக்கான ஈக்கள் தேனைச் சேர்த்து வைத்து வாழ்கின்றன. அவ்வீக்களுக் கெல்லாம் தலைமையான ஈ ஒன்று உண்டு. அது பெண் ஈயாகும். அதற்கு ஈயரசி என்று பெயர். அதுவே பல முட்டைகளையிட்டு, ஈக்களின் கூட்டத்தைப் பெருக்குவது. அஃது இளவேனில் (சித்திரை, வைகாசி மாதங்கள்) காலத்தில்தான் முட்டையிடும். அதனிடம் மற்றைய ஈக்களெல்லாம் பணிவாக நடந்துகொள்ளும். அவ்வீயரசி இருக்கும் அறை தேன் கூட்டின் நடுவே அமைந்திருக்கும். அவ்வறை மற்றைய அறைக ளெல்லாவற்றிலும் பெரியதாயு மிருக்கும்.

ஈயரசியே யன்றி, தேன்கூட்டில் வேறு இருவகையான ஈக்களும் வாழ்கின்றன. அவை ஆண் ஈக்கள், வேலைக்கார ஈக்கள் எனப்படும். ஆண் ஈக்கள் ஈயரசியைவிட உருவத்திற் சற்றுச் சிறியவாய்க் காணப்படும்; அவற்றிற்குப் பெண் ஈக்களுக் கிருப்பனபோன்று கொடுக்குமில்லை, மெழுகினை யுண்டாக்குங் கருவியுமில்லை. அவை தேன் சேர்த்தலின்றி, எப்பொழுதும் சோம்பேறிகளாகவே காலங்கழிக்கும். மழைக் காலத்தில் அவை மற்றைய ஈக்களாற் கூட்டைவிட்டு வெளியேற்றப்படும்.

இனி, வேலைக்கார ஈக்களோ ஆண் ஈக்களைவிட உருவத்திற் சிறியனவாகும். அவை எப்பொழுதும் வேலை செய்துகொண்டே இருக்கும். அவற்றில், சில மெழுகை உண்டாக்கும்; சில அம்மெழுகினைக்கொண்டு கூடுகட்டும்; சில அக்கூட்டினை அறைகளாக வகுத்து ஒழுங்குசெய்யும்;

சில தேன் தேடும்பொருட்டு வெளியே செல்லும்; சில சிற்றீக்களின் உணவாகிய பூந்தாதுகளைக் கொண்டுவரும்; சில தேன் நிறைந்த பூக்கள் எங்கே யுள்ளனவென்று தேடி யறிந்துவரும்; சில தேன்கூட்டைக் காவல் செய்யும். இவ் வேலைக்கார ஈக்களெல்லாம் பெண் ஈக்களே என்று கூறப் படுகின்றது.

தேனிறால் அல்லது தேன்கூட்டை ஒரு சிறிய நகர மென்றே சொல்லலாம். பெரிய தேன்கூடொன்றில் எண்ப தாயிரம் ஈக்கள்வரை சேர்ந்து வாழும். தேன்கூட்டிலுள்ள அறைகள் ஒவ்வொன்றும் அறுமுடக்கி (அறுகோண) வடிவ மாக அமைந்திருக்கும். அக்கூடு முழுவதும் ஒருவித மெழு கினாலே ஆக்கப்பட் டிருக்கும். அம்மெழுகு தேனீயின் உடலிலிருந்து வெளிவரும் ஒருவகைப் பிசினேயாகும். தேனீ ஒவ்வொன்றுங் குடிக்குந் தேனின்அளவுக்குத் தக்க வண்ணம் பிசின் குறைவாகவோ, மிகுந்தோ வெளிப்படும். பிசின் வேண்டியபொழுது, தேனீக்கள் ஒன்றன் காலை மற் றொன்று பின்னிக்கொண்டு, கூட்டிலிருந்து தலைகீழாகத் தொங்கும்; அப்பொழுது, அவற்றின் வயிற்றிலுள்ள அடிப்பையிலிருந்து பிசின் சுரந்து வெளிவரும்; வெளிவந்த அப்பிசின் காற்றி லுலர்ந்து உறைந்துவிடும்; தேனீக்கள் அத னைத் தம் உமிழ்நீரோடு சேர்த்தெடுத்துக் கலந்துகொள்ளும். அதுவே தேன்மெழுகு என்றும், மெழுகு என்றுங் கூறப் படும்.

வேலைக்கார ஈக்கள் பெண் ஈக்களே யாயினும், அவை முட்டை யிடுவதில்லை. ஈயரசியொன்றே முட்டையிட வல்லது. முட்டை யிடுவதற்குமுன் ஈயரசி தேன்கூட்டிலுள்ள அறை களை யெல்லாம் நன்கு ஆராய்ந்து பார்த்துக்கொள்ளும். பெரிய அறையில் அஃது இடும் முட்டைகளிலிருந்து இளவரசி

களாகிய ஈக்கள் தோன்றும்; அதன்பின், அதற்கடுத்து அளவிற் சற்றுச் சிறிய அறைகளில் இடும் முட்டைகளிலிருந்து ஆண் ஈக்கள் தோன்றும்; அதன் பின்னர், மிகச்சிறிய அறைகளில் அஃது இடும் முட்டைகளிலிருந்து வேலைக்கார ஈக்கள் தோன்றும். இளவரசி ஈக்கள் பெரும்பாலும் ஒன்று அல்லது இரண்டு என்ற அளவிலே தோன்றுவது இயல்பு. அங்ஙனமன்றி அவை பலவாக நேர்ந்தால், ஈயரசி அவற்றிற் சிலவற்றைக் கொன்றுவிடும். ஒரு கூட்டில் தங்குவதற்கு இடமின்றி, ஈக்களின் கூட்டம் மிகுந்துவிட்டால், மிகுந்த ஈக்கள் ஒன்றுசேர்ந்து ஈயரசியாகத் தகுந்த இளவரசி ஈயொன்றினை அழைத்துக் கொண்டு வெளியே சென்றுவிடும். சென்ற அவை தனியே வேறொரு கூடு கட்டத் தொடங்கும். ஒரு கூட்டிலிருந்த ஈயரசி இறந்துவிட்டால், இளவரசி ஈக்களிலிருந்து ஒன்று ஈயரசியாக மாறிக்கொள்ளும். அவ்விதம் ஈயரசியாகத் தகுந்த இளவரசி ஈக்கள் இல்லாவிட்டால், வேலைக்கார ஈக்களெல்லாம் ஒன்றுசேர்ந்து, தம்மில் ஓர் ஈயினைத் தேர்ந்து எடுத்துக்கொள்ளும். பின்பு, அவை அதற்குத் தனிப்பட்ட ஒருவகை உணவுப்பொருளைக் கொண்டு வந்து கொடுத்து, அதனை ஈயரசியாக மாறும்படி செய்யும்.

முட்டையிலிருந்து ஈக்கள் முதலிற் புழுக்களாகவே வெளிவரும். அப்பொழுது, வேலைக்கார ஈக்கள் அவற்றிற்கு உணவு கொடுத்து, அவற்றைக் காப்பாற்றும். சில நாட்கள் சென்றவளவில், அப்புழுக்கள் நிறைந்த அறைகள் வேலைக்கார ஈக்களால் மூடப்பட்டுவிடும். அப்புழுக்கள் சில நாட்கள் அவ்வறைகளிலிருந்து உருவம் மாறி, இறகு முளைத்துக் கூட்டை விட்டு வெளிவர முயலும். அப்பொழுது வேலைக்கார ஈக்கள் அறைகளின் வாயிலைத் திறந்துவிட்டு அவை வெளிவர உதவிசெய்யும்.

ஒரு பெரிய தேன்கூட்டில் சற்றேறக்குறைய நூற்றிருபது பவுண்டு (நாற்பத்தைந்து படி) தேன் சேர்க்கப்பட்டிருக்கும். நம் நாட்டில் மறைநிலா நாளாகிய அமாவாசையன்றோ அல்லது அதற்கு முதனாளோ தேனெடுப்போர் தேன்கூட்டிலுள்ள தேனை எடுத்துவிடுவர். இல்லாவிட்டால் ஈக்கள் கூட்டிலுள்ள தேனை அருந்திவிடுமாம். இங்ஙனம் மக்கள் தேனைக் கைக்கொள்வது கருதியன்றோ நம் பெரியார்,

> "உடாஅது முண்ணாதும் தம்முடம்பு செற்றும்
> கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
> வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட!
> உய்த்தீட்டுந் தேனீக் கரி"

என்ற செய்யுளை உவமையாகக் கூறி, பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைக்கும் கேடுகெட்ட மானிடரை இடித்துக் கூறுகின்றனர்!

## பயிற்சி

1. நறுமணம், குப்பைகூளம், வியத்தல், பூந்தாது, உமிழ்நீர், மறைநிலா, அமாவாசை, செற்றல், ஈட்டுதல், கரி, கேடுகெடுதல், இடித்துக்கூறல்.
2. தேன்கூட்டை ஒரு சிறிய நகரமென்றே சொல்லலாம்—இதனை விளக்கிக் காட்டு.
3. வல்லினமெல்லின எழுத்துக்களாலாய மொழிகள் சிலகாண்க.
4. "உய்த்தீட்டுந் தேனீக் கரி"—இதன் கருத்தை விளக்கு.



## ௯. இராக்காலம்

ஞாயிறு மறைந்தது ; நண்ணுபேர் அமைதிய
மாயிரு ஞாலமேல் மதியொளி பொழிந்தது ;
மின்னின விண்மீன் ; துன்னின நள்ளிருள் ;
மன்னின மனைதொறும் மாவொளி விளக்கம் ;
குவிந்தன தாமரை ; அவிழ்ந்தன குமுதம் ;
மல்லிகை முல்லை மலர்ந்து கமழ்ந்தன ;
கூகை குழறின ; கூத்தொலி கேட்டன ;
*கோகம் ஒடுங்கின ; குலவின சகோரம் ;
வேலை செய்குநர் †ஏலவலி பெற்றனர் ;
களவு விரும்புநர் அளவில்களி எய்தினர் ;
ஏழையேம் போலியர் இன்ப முற்றனர் ;
இறுதிக் காலத் துறுதி காட்டுவோய் !
வாழிய இரவே ! வாழிய !
ஊழி ஊழி இவ் வுலகில் மேவியே.

—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்.

---

* கோகம் - சக்கரவாகப் புள். † ஏலவலி - மிக்க வலிமை.

## பயிற்சி

1. ஞாயிறு, நண்ணுதல், ஞாலம், மதி, துன்னுதல், நள்ளிருள், கமழ்தல், கூகை, கோகம், குலவுதல், சகோரம், எல, களி, இறுதி, உறுதி, ஊழி, மேவுதல்.
2. இறுதிக் காலத் துறுதியாவது யாது?
3. பொருள் முதலிய எல்லா வகைப் பெயர்ச்சொற்கட்கும் உதாரணங்கள் காண்க.
4. இராக்காலத்தில் உலகின்கண் இயற்கையாகவும் செயற்கையாகவும் நடந்தேறுவன எவ்வெவை?

---

## எ. நல்லொழுக்கம்

ஒழுக்கம் என்பது மக்கள் ஒருவருக்கொருவர் நடந்துகொள்ளும் முறை அல்லது நடக்கை. நல்லொழுக்கம் என்பது நல்ல நடக்கை. நல்ல நடக்கையாவது உலகத்தோர் ஒப்பிய நடையாகும். பிறரால் உயர்ந்தோர் என மதிக்கப்பெற்றுக் காலஞ்சென்ற பெரியோர்களும், காலஞ்செல்லாது உயிருடன் இருப்பவர்களாகிய பெரியோர்களுமே உலகத்தோர் எனப்படுவார்கள்.

நல்லது, கெட்டது என்ற இரண்டுங் கலந்திருப்பதே இவ்வுலக இயற்கை. நெடுநாட் பழக்கத்தினாலும், தேர்ந்த அறிவினாலுமே இது நல்லது, அது கெட்டது எனப் பிரித்தல் கூடும். நம் முன்னோர்களாகிய பெரியோர்கள் அவ்வாறே அரிதில் முயன்று பல நூல்கள்வாயிலாய் நன்மைதீமைகளைப் பிரித்துக் காட்டியுள்ளார்கள். அவர்கள் அங்ஙனம் பிரித்துக் காட்டியுள்ளதைப் பண்டைய நூல்களில், இன்றுங் காணலாம். அவர்கள் நல்லனவெனக் குறித்த பழக்க வழக்கங்களைப் பின்பற்றுதலே நல்லொழுக்கம்; தீயனவெனக் குறித்த

வற்றைப் பின்பற்றுதல் தீயொழுக்கம். பொதுவாகக் கூறின், ஒழுக்கம் என்பது எந்நாட்டினருக்கும் ஒருபடித்தாகவே இருக்கும். உண்மையுரைத்தல், அன்புடைமை, கள்ளாமை,



புத்தர் வேள்வி ஆடுகளைக் காப்பாற்றல்

கொல்லாமை, பயனிலகூறுமை போன்றவையெல்லாம் எந்நாட்டினரும், எவ்வினத்தவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நல்லொழுக்கத் துறைகளல்லவோ ?

நல்லொழுக்க முடையவனிடம் சிறந்த பல நற்குணங்கள் காணப்படும். அவன் பிறரிடத்து அன்புள்ளவனாக இருப்பான்; உண்மைக் குறைவிடமாவான்; தன்னைவிட அறிவிலும் ஆண்டிலும் முதிர்ந்தவர்களிடத்தில் அடக்க வொடுக்கமாக நடந்துகொள்வான்; பொறுமைக்குப் புகலிடமாகப் பொலிவான்; ஈ யெறும்புக்குக்கூடத் துன்பம் நேர்வதைக் காண இசையான்; பிறர் துயரம் நீக்கத் தன்னுடல் பொருள் உயிர் அனைத்தையுந் துறக்க இசைவான். கபில வஸ்துவை ஆண்ட சுத்தோதனரின் மகனான கௌதம புத்தர் உயிர்கள் படும் துன்பத்தைக் காணப் பொறுமல் துறவறம் பூண்டார் என்பது சரித்திர உண்மை யன்றோ?

ஒழுக்கமுடையவனாய் இருத்தற்கு அறிவு மிக இன்றியமையாததாகும். அறிவைப் பெறுதற்குக் கல்வி வேண்டும். கல்வி நிறைய இருத்தலுடன், உலகத்தோடு ஒத்து நடக்கும் உயரிய நடை வேண்டும். கல்வியில்லாவிட்டாலும், ஒருவன் பெரியோர்பால் பழகிய பழக்க மிகுதியால் ஒழுக்க முடையவனாய் இருத்தலுங் கூடும். கல்வி வேண்டுங்கால் முயன்று படித்துக்கொள்ளுதற்குரிய தொன்று; ஒழுக்கமோ இளமையிலிருந்தே பின்பற்றப்பட்டு வருவதற்குரிய தொன்றாம். ஒருவன் சிலகாலம் ஒழுக்கந் தவறினும் அவன் பல்வகையிற் கெட்டலைவது திண்ணம். ஆகவே, ஒழுக்கம் கல்வியினுஞ் சிறந்தது.

ஒருவன் உயர்குலத்திற் பிறந்திருப்பதால்மட்டும் நன்கு மதிக்கப்படுவா னல்லன். உயர்குலத்தோடு ஒழுக்கமும் இருந்தால்தான் அவன் உண்மையாக மதிக்கப்படுவான். ஒழுக்கமில்லாமல் உயர்குலப் பிறப்புமட்டும் ஒருவனுக்கு இருந்தால், அவன் இழிகுலத்தவனாகவே எண்ணப்படுவான். ஒருவன் குலத்தில் இழிந்தவனானாலும் ஒழுக்க முடையா

னேல், அவனே உயர்குலத்தவனென்று பெரியோரால் மதிக்கப்படுவான். எனவே, குலத்தினும் ஒழுக்கமே சிறந்தது. 'ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று,' என்று பெரியோர்கள் கூறியது இதுபற்றியேயாம்.

பொறாமை, பேராசை, வெகுளி, தீச்சொல் என்ற நான்கும் தீயொழுக்கத்தின்பாற்படும். இவற்றை விலக்கி நடப்பதே நல்லொழுக்கம் ; அதுவே அறமுமாம்.

பொறாமையுடையவனிடம் ஏராளமான பொருள் இருந்தாலும், அவனுக்கு மனநிறைவு இராது. தன்னினும் பொருள் மிகுதியுடைய பிறரை நினைத்து அவன் பொறாமைப் படுவான். இவ்வாறு அவன் பொறாமை கொள்வதால், பிறரைக் கெடுக்கக் கருதுவான். அதனால், அவன் உள்ளம் தீய வழியிற் செல்லும். செல்லவே, நல்லொழுக்கத்திலிருந்து விலகுவான். ஆகவே, அவ்வாறு அவன் விலகுவதற்குப் பொறாமை காரணமாக இருத்தல் காணலாம்.

அப்பொறாமையோ, அவா வொன்றையே அடிப்படையாகக் கொண்டதாகும். அவா என்பது பிறருடைமையைத் தனதாக்கிக்கொள்ள நினைக்கும் பேராசையே. ஒருவனுடைமையை மற்றொருவன் தனதாக்கிக்கொள்ள நினைப்பதும் முயல்வதும் நேர்மையாகா. நேர்மையாகா வழியிற் செல்வது தீயொழுக்கமாம். ஆகவே, ஒழுக்க முடையவனிடம் அவா என்பது அணுகுதல் கூடாது.

பிறர் உடைமையைத் தனதாக்கிக்கொள்ளு முயற்சி முற்றுப்பெறாவிட்டால், ஒருவனுக்கு வெகுளியுண்டாதல் இயல்பு. வெகுளியாவது மனக்கொதிப்பால் உண்டாகும் சினமாம். சினமாகிய கோபம் மிகவும் கொடியது. அது சீரிய அறிவை நீக்கி, மறத்தொழிலைச் செய்ய வற்புறுத்தும் ;

முகப் பொலிவை விலக்கும்; உள்ளத்தின் உவகையை ஒழிக்கும். எனவே, அதுவும் நல்லொழுக்கத்தினைப் போக்கும் கொடும்பகைவனேயாகும்.

வெகுளி பிறந்தபோது, அதனின்றும் தீய சொற்கள் தோன்றும். தீய சொற்களோ மிக்க துன்பத்தை விளைவிக்கும். தீய சொற்கள் சொன்னவனும் துன்புறுவான்; சொல்லப் பட்டவனுந் துன்புறுவான். ஆதலின், தீய சொற்கள் தீயினுங் கொடியன. தீயினாற் சுடப்பட்ட உடற்புண் சில நாட்களில் ஆறிவிடும்; ஆனால், தீயசொற்களாற் சுடப்பட்ட மனப்புண்ணோ எக்காலும் ஆறாது. நினைக்குந் தோறும், நினைக்குந்தோறும் அது மிகுந்த துன்பத்தையே கொடுக்கும். அஃது ஆறும் நாளே கிடையாது என்றே கூறிவிடலாம். இத்தகைய தீயசொல் தீய வொழுக்கத்தினையே சேருமாகலின், அஃதும் கொள்ளற்பால தன்றாம்.

ஒவ்வொருவருக்கும் அவர்தம் உயிரே உலகிற் சிறந்த பொருள். எனினும், ஒழுக்கத்தில் தலைநின்றோர் அவ்வுயிரையும் அவ்வொழுக்க மழிய வருமிடத்து மாய்த்துக்கொள்வர். அவர்களுக்கு உயிரினும் ஒழுக்கமே தலைசிறந்தது. ஆகையால் நல்லொழுக்கம் உயிரினும் அருமையாகப் பாதுகாக்கப்படல் வேண்டும்.

## பயிற்சி

1. வாயில், பண்டை, ஒருபடித்து, புகலிடம், பொலிதல், உயரிய, வெகுளி, மனநிறைவு, அடிப்படை, நேர்மை, மறத்தொழில், உவகை, மனப்புண், தலைசிறத்தல்.
2. உலகத்தோர் எனப்படுவார் யாவர்?
3. மெல்லின இடையின எழுத்துக்களாலாய மொழிகள் சில காண்க.
4. ஒருவன் நல்லொழுக்க முடையவன் என்பதற்கு அடையாளங்கள் எவை?

## அ. ஒழுக்கம்

1. இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

2. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று.

3. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

4. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

5. அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

6. ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

7. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

8. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

9. ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

10. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

11. களவினா லாகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும்.

12. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

13. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனுல் வரும்.

14. பிறர்க்கின்ன முற்பகற் செய்யின் தமக்கின்ன
பிற்பகல் தாமே வரும்.

15. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி(து)
இன்னுயிர் நீக்கும் வினை.

## பயிற்சி

1. சொல்லிழுக்குப்படுதல், சோகாத்தல், ஒறுத்தல், பொன்றுந் துணை, அழுக்காறு, சாலுதல், ஒன்ஞர், வழுக்குதல், ஏதிலார், மன்னுதல், ஒத்தது, செத்தாருள் வைத்தல், அழிபசி, உழி, ஆக்கம், ஆவது போலக் கெடுதல், பொய்யா விளக்கு, முற்பகல், பிற்பகல், இன்னுயிர்.

2. (க) பகைவரைக் காட்டிலும் எவ்வாறு பொருமை கொடியது?
   (உ) மக்கட்குத் தீங்குண்டாகா வழி யெது ?
   (ங) தீயவை தீயைவிடக் கொடியவாவது எப்படி ?
   (ச) செத்தாருள் வைக்கப்படுபவர் யாவர் ? ஏன் ?
   (ரு) பொருள் சேர்த்துவைக்கும் வழிகளிற் சிறந்தது எது ? எப்படி ?
   (சு) பொய்யாமை விளக்காவது எவ்விதம் ?
   (எ) பிறிதினுயிர் நீத்தலைவிடத் தன்னுயிர் நீத்தல் மேல்—முன்னதன் தீமையும் பின்னதன் நன்மையும் எவை ?

3. வல்லினமே கலக்காத மொழிகள் ஆறு காண்க.

4. இப்பாடத்தின் குறட்பாக்களுள் ஏதாவது மூன்றின் கருத்துக்களை உனக்குத் தெரிந்த கதைகளால் விளக்கிக்காட்டு.



## ௯. காவிரியும், மேட்டூர் அணைக்கட்டும்

ஒருநாடு செழிப்பினை யடைவதற்கு இன்றியமையாதன கைத்தொழிலும் வேளாண்மையுமேயாம். வேளாண்மை செழிப்புறுதற்கு நல்ல நிலமும், நிரம்ப நீரும் வேண்டும். நீர் நிரம்ப வேண்டுமேயாயின், மலைகளிலிருந்து தோன்றி வற்றாதோடும் வளமுள்ள யாறுகள் வேண்டும். ஆகவே, நல்ல நீர்ப்பாய்ச்சல்களுக்குத் தக்க ஆறுகளை யடுத்துள்ள வளமுள்ள நிலங்களிலேயே வேளாண்மை நடைபெறும். ஆற்று நீர் சென்றுபாயாத மேட்டு நிலங்களுக்கு ஆறுகளின் குறுக்கே அணையிட்டுத் தேங்கிய நீரைக் கால்வாய்களின் வழியே கொண்டுபோதல் வேண்டும்; அவ்வாறு கொண்டு போகும் நீரும் சிலகாலங்களில் கிடைப்பது அருமையாய்

விடும். அங்ஙனம் நேரிடுங் காலத்திற் பயன்படுத்திக் கொள்வதற்கென ஆற்றின் நீரை ஓரிடத்தில் கட்டிவைப்பது நலமாகும். அக்காலத்தில் நம் முன்னோர்கள் நீரினை ஏரிகளில் கட்டிவைத்துக்கொண்டிருந்தார்கள். இக்காலத்தும் அம்முறை பல இடங்களிற் கையாளப்பெற்று வருகின்றது. ஆனாலும், அம்முறை கோடை காலத்தில் நீர் வறட்சியினால் கோரிய பயனைத் தருவதில்லை. ஆகவே, ஆறுகளிலேயே அணைக்கட்டுக் கட்டி நீரைத் தேக்கிவைக்கும் முறை தொன்றுதொட்டுக் கையாளப்பட்டது. அவ்வித அணைக்கட்டுகள் நமது நாட்டில் பலவுள.

உலகத்திலுள்ள எல்லா அணைக்கட்டுகளிலும் மிகப் பெரிதாக மதிக்கப்படும் அணைக்கட்டொன்று நமது மாகாணத்தில் அண்மையிற் கட்டப்பட்டுள்ளது. அதற்கு **மேட்டூர் அணைக்கட்டு** என்று பெயர். இந்த அணைக்கட்டு ஆறாண்டுக் காலத்தில், நான்கேமுக்காற்கோடி ரூபா செலவிற் கட்டப்பட்டதாகும். இது மேட்டூர்க்கருகில் காவிரியாற்றில் கட்டப்பட்டுள்ளது. அவ்விடமே அணை கட்டுவதற்கு ஏற்றஇடமென்பது மேட்டூர் என்ற ஊர்ப்பெயரினாலேயே நன்கு விளங்கும்.

இந்தியாவிலுள்ள வற்றாத ஆறுகளிற் காவிரியும் ஒன்று. உலகிற் காலங்கண்ட மாறா ஒழுங்குகளில் எது மாறுபடினும், காவிரியாற்று நீரோட்ட வொழுங்கு எக்காலும் மாறுபடுவதில்லை என்பது பெரியோர் கூற்று. காவிரியாறு மேற்குத் தொடர்ச்சிமலையைச் சேர்ந்த **சகஸய** மலையில் **மேர்க்காரா** என்னுமிடத்தில் தோன்றுகிறது. சகஸ்யமலை குடகுநாட்டிலுள்ளது. காவிரியாறு அங்கிருந்து கிழக்கு நோக்கிச் சற்றேறக்குறைய ஐந்நூறு கல் தொலை சென்று வங்காள விரிகுடாவில் கடலோடு கலக்கிறது. குடகுநாட்டில் தோன்றுகிற இக்காவிரி மைசூர்நாட்டின் வழியோடி, மலைநாட்டு வழி

யாய் வந்து, மேட்டூர்க்கருகில் சமவெளியிற் பாய்கிறது. குடகு நாட்டில் ஆனி மாத முதல் புரட்டாசி மாத முடிய நல்ல மழை பெய்வதாலும், மைசூர் நாட்டில் ஆவணிமாத முதல் ஐப்பசி மாத முடிய விடாமழை பொழிவதாலும், மலை நாட்டில் ஐப்பசிமாத முதல் மார்கழிமாத முடியப் பெரு மழை பெய்வதாலும் காவிரி வற்றாத நீரோட்ட முடையதாக மிளிர்கிறது. அதனாலேயே, அதன் நீரும் ஆங்காங்குப் பயிர்த்தொழிலுக்குப் பெரிதும் பயன்படுவ தாகின்றது.

ஆயினும், குடகுநா டொழிந்த மற்றைய நாடுகளில் சில ஆண்டுகளில் பெய்யவேண்டிய காலமழை பெய்யாமற், காவிரி யில் நீர் குறைந்துபோவது முண்டு. அக்காலங்களிற் பயிர் களுக்குப் போதிய நீரின்றி விளைவு குறைந்துவிடும். நல்ல மழை பெய்யுங் காலங்களிலோ, காவிரியில் அளவுக்கு மிஞ்சியதாக வெள்ளம் புரண்டு சென்று, கடலில் வீணே சேர்த லுண்டு. ஆகவே, இவ்வீணான நீர்ச்செலவும், மழை யில்லாக் காலங்களிற் பயிர்த்தொழிலுக்கு நீரின்றி மக்கள் துன்புறுவதும் அறிஞர்கள் பலருள்ளத்திற் பதிந்து, அரசாங் கத்தார் கருத்தையுங் கவர்ந்தன. அறிவாளிகளும் அரசாங் கத்தாரும் வீணாகக் கடலிற் போய் விழும் நீரைத் தேக்கி வைத்து, வேண்டிய காலத்திற் பயிர்த்தொழிலுக்குப் பயன் படுத்தும் வழி யாதென்று ஆராயலானார்கள்.

அவ்வாறு ஆராய்ந்ததன் பயனாகக் காவிரியின் மேற்பகுதி யில் பெரிய தேக்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டுவது மிக இன்றியமையாததென்று தேர்ந்து முடிவு செய்யப்பட்டது. அம்முடிவின் பயனாகவே மேட்டூர் அணைக்கட்டு ஏற்பட்டது.

காவிரியாறு மேட்டூருக்கருகில் ஆயிரத்துநூறு அடி யகலத்தில் இருமலைகளுக்கிடையே சென்றுகொண் டிருக் கிறது. அவ்விரு மலைகளையும் எல்லைகளாகவைத்து நடுவில்

அணைகட்டினால், நீரை நிறையத் தேக்கிவைக்க முடியுமாக லின், அவ்விடத்தே பெரியதோர் அணைக்கட்டினை அரசாங்கத் தார் கட்டி முடித்தனர்.

மேட்டூர் அணைக்கட்டின் உயரம் கடல் மட்டத்திற்கு மேல் எண்ணூற்றோரடியாகும்; அகலம் இருபதரையடி; நீளம் ஒரு மைல் இருபதடி. இதனால் தேக்கப்படும் நீர் முப் பத்துமூன்று கல்தொலைக்கு யாற்றினை மேனோக்கி எதிர்த்து நிற்கும். இதற்குமுன் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களை விட ஏறக்குறைய மூன்று மடங்கு நிலங்கள் மேட்டூர் அணைக் கட்டு நீரால் பயிரிடப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மேட்டூரிலிருந்து மின்சார ஆற்றல் உண்டாக்கப்பட்டு, அதனால், மேட்டூர்க்கும் சென்னைக்கும் இடையிலுள்ள பல ஊர்களுக்கு மின்சார விளக்குகள் அமைக்கப்படவும் வசதி யுண்டாயிருக்கிறது.

## பயிற்சி

1. வேளாண்மை, கோருதல், அண்மை, கூற்று, பொழிதல், மிளிர்தல், கவர்தல், சாகுபடி, மின்சாரம்.
2. அணைக்கட்டு என்றால் என்ன? நீ நேரிற்கண்ட அணைக்கட்டு ஒன்றைப்பற்றிக் கூறு.
3. பொருள், இடம், காலம் ஆகிய இவைகளைக் காட்டும் பெயர்ச் சொற்கள் சில காண்க.
4. காவிரியாறு—இதனைப்பற்றிச் சிறு கட்டுரை யொன்று எழுது.

# ௧௦. இத்தாலி

நாம் வாழும் இந்நிலப்பரப்பு ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா என ஐந்து மாபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுளது. இப்பிரிவுகளுக்குக் கண்டங்கள் என்று பெயர். இத்தாலி என்ற நாடு ஐரோப்பா என்




னும் பெரும்பிரிவைச் சேர்ந்ததாம். அதை ஒரு தீபகற்பம் என்பர். அந்நாட்டிற்கு வடக்கில் மட்டும் ஸ்விட்ஸர்லாந்தும்,

ஆஸ்திரியா நாடும் இருக்கின்றன; மற்றைய மூன்று பக்கங்களிலும் கடல் சூழ்ந்திருக்கிறது.

இத்தாலிநாட்டின் படத்தைப் பார்த்தால், அது மக்கள் காலிற் போட்டுக்கொள்ளும் தோலுறை (Boots) போறக் காணப்படும். இந்நாட்டின் தென்பாகம் நீங்கலாக மற்றைய பாகங்களில் எரிமலைகள் பல இருக்கின்றன. படத்தில் இந்நாட்டின் அருகே காணப்படும் சிறு திட்டி (தீவி)ற்குச் **சிசிலி** என்று பெயர்.

போ, அடிகி, ஆர்னோ, டைபர், வால்டர்னோ என்னும் யாறுகள் பலவற்றால் இத்தாலி வளமுறுகின்றது. அவ்யாறுகளையன்றி, கார்டா, கோமோ, மாகியோர் என மூன்று ஏரிகளுமுள. இவ்வேரிகள், 'போ', என்ற யாற்றின் கிளைநதிகளாகிய மின்ஸியோ, அட்டா, டிஸினோ என்பவற்றால் வற்றாமல் நீர்நிறைக்கப் பெறுகின்றன. இத்தாலியின் வெப்பதட்ப நிலைகள் அடிக்கடி மாறுவனவாய் உள்ளன. வட பகுதியிற் குளிர்காற்றும், தென்பகுதியில் வெப்பக் காற்றும் வழங்கும். வானம் எப்பொழுதும் களங்கமின்றிக் காணலுறும். ஐரோப்பாவிலுள்ள ஏனையநாடுகளை நோக்க இத்தாலி வெப்ப மிகுந்த நாடாகவே கருதப்பட்டு வருகிறது.

இத்தாலியர்களிற் பெரும்பாலோர் உரோமானியர்களின் வழிவந்தவர்களே யாவர். இத்தாலிய மொழியும் இலத்தீனின் சிதைவாகவே கருதப்படுகிறது. இத்தாலியர்களிற் பலர் கத்தோலிக்கக் கிறித்தவர்களே. அவர்களுடைய மதகுருவான போப் வாழ்ந்து வருவதும் இத்தாலியிலுள்ள உரோமாபுரி என்ற நகரிலேதான். இத்தாலியர்கள் பொதுவாக இசையிற் பேர்பெற்றவர்கள். அவர்கள் எப்பொழுதும் ஐரோப்பா முழுமையும் சுற்றிக்கொண்டே இருப்பார்கள். அவர்களிற்

பெரும்பாலார் இப்பொழுது தென்னமெரிக்கா, ஆப்பிரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்று குடியேறுகின்றனர்.

இத்தாலியில் இரும்பு அகப்படுகிறது. இத்தாலியைச் சேர்ந்த சிசிலித்திட்டு (தீவு) கர்ப்பூரத்திற்குப் பேர்போனது. அங்குள்ள **அபினைன்ஸ்** மலையில் சலவைக் கற்கள் மிகுதியாக அகப்படுகின்றன. பட்டு ஐரோப்பாவிலுள்ள மற்றைய நாடுகளைவிட இந்நாட்டில்தான் மிகுதியாகக் கிடைக்கின்றது.

இத்தாலியின் தலைநகரம் உரோமாபுரியாகும். இது காலங்கண்ட பழைமையான நகரங்களில் ஒன்று. இந்நகர் பண்டைக் காலத்தில் ஏழு குன்றுகளின்மீது கட்டப்பட்டிருந்ததாம். இப்பொழுதோ, இது சமநிலத்தில் அமைந்திருக்கிறது. இந்நகரிற் பழைய பெருங்கட்டிடங்கள் இருந்தமைக்குரிய அறிகுறிகள் பல இன்னும் காணப்படுகின்றன. **காலிஸீயம்** என்ற உரோமாபுரிப் பேரரங்கைக்கண்டு வியவாதாரிலர். உலகத்திலேயே மிகவும் அழகிய கிறித்தவக் கோவில் என்று கருதப்படும் **செயின்ட் பீட்டர்** கோவில் இங்கேதான் உள்ளது.

**நேபிள்ஸ்** என்று மற்றொரு நகரமும் இந்நாட்டில் உண்டு. இதுவே இத்தாலி நாட்டிலுள்ள எல்லா நகரங்களிலும் பெரியது. அழகிற் சிறந்த நகரங்களில் தலைசிறந்ததாகக் கருதப்பட்டுவந்தது இந்நகரே. "இறப்பதற்குமுன் நேபிள்ஸ் நகரைப் பார்த்துவிட்டு இற," என்று பொருள்படும் ஆங்கிலப் பழமொழியொன்றும் வழக்கில் உள்ளது. இந்நகரம் உலகத்திலே பெயர்பெற்ற **வெசூவியஸ்** என்ற எரிமலைக்குப் பத்துக்கல் தொலைவிலுள்ளது. டூரின், ஜினோவா, மிலான், வெனிஸ், பிளாரன்ஸ், பைசா போன்ற பல சிறந்த நகரங்களும் இந்நாட்டில் உள்ளன. உலக ஏழு

பெருவிந்தைகளில் ஒன்ருகிய சாயுங் கோபுரம் இந்நாட்டிலுள்ள பைசா என்னும் நகரத்தில்தான் இருக்கிறது.

இத்தாலி ஒரு முடியரசு நாடாக இருந்தும், சென்ற ஐரோப்பியப் பெரும்போருக்குப் பிறகு பாஸிஸ்டு என்ற வல்லரசுக் கட்சியே உண்மையில் அங்கு அரசாளத் தொடங்கி விட்டது. பாஸிஸ்டு கட்சியின் தலைவரான முசோலினி என்பவரே உண்மையில் இத்தாலியின் ஆட்சித் தலைவராகவும், முதன் மந்திரியாகவும் விளங்குகிருர். இவரால் இத்தாலி நாடு பல வழிகளில் முன்னேறி வருகிறது. அண்மையில் இவர் அபிஸீனியா நாட்டின்மீது படையெடுத்துச் சென்று வெற்றியுற்ருர். அபிஸீனியா இத்தாலியர் ஆட்சியிற் சேர்க்கப்பட்டு விட்டது. இத்தாலிநாட்டு மக்கட்குத் தாய்நாட்டின்மீது பெரும்பற்றினை உண்டாக்கியவர் இவரே யென்று கூறலாம்.

## பயிற்சி

1. **தோலுறை, வளமுறுதல், தட்பவெப்பம், களங்கம், காலங் காணல், அறிகுறி, அரங்கு, எரிமலை, ஆட்சித் தலைவர், முன் னேறுதல்.**
2. **அபிசீனியா எங்கே இருக்கிறது? ஆங்குக் குறிப்பிடத் தக்க செய்தி அண்மையில் யாது நடந்தது?**
3. **உயர்திணை அஃறிணைப் பெயர்கள் சில காண்க.**
4. **உரோமாபுரி, நேபிள்ஸ், பைசா, முசோலினி—இப்பெயர்கள் ஒவ்வொன்றினைப் பற்றியும் உனக்கென்ன தெரியும்?**

# கக. இரவிவர்மா

புதுப்புதுக் கருத்துக்களைச் செய்யுளில் அமைத்துச் சிறக்கப் பாடுவார் கவிவாணர்; பாட்டுக்களைச் செவியினிக்க, உள்ள முவக்க ஓதுவார் இசைவாணர்; கண்களையும் மனத்தையுங் கவரும் படங்கள் வரைவார் ஓவியவல்லுநர். இம்மூவகையினரும் புலவரென்றே யழைக்கப்படுவர். அவர்களுள் இராசா இரவிவர்மா ஓவியப் புலவராவர்.

கடலும், காடும், மலையும், மலையருவியும், யாறுகளும், வானளாவிய மரங்களும் நிறைந்த காட்சிகள் இயற்கையிலேயே அமையப்பெற்றது சேர (மலையாள) நாடு; அச்சேர நாடே இரவிவர்மா பிறந்த நன்னாடாகும். இரவிவர்மா திருவிதாங்கூர் அரசர் குலத்தைச் சேர்ந்தவர். இவர்தம் முன்னோர்கள் ஓவியம் வரைவதில் பெரும்புகழ் பெற்றிருந்தார்கள். இவரும் இளமைப் பருவத்திருந்தே இயற்கை யமைப்புக்களை உற்று நோக்குவதிலும், படம் வரைவதிலும் பேரூக்க முடையவராய் இருந்தார். கையிற் கிடைத்த கரித்துண்டு, சுண்ணாம்பு முதலியவற்றைக் கொண்டு, தரைமீதும், சுவர்மீதும், திண்ணைகளின்மீதும் கண்டவர் வியக்கும் வண்ணம் இவர் அழகிய காட்சிகளையும், வடிவங்களையும் வரைந்துவைப்பார்.

இவருடைய இளமைப் பருவத்தில் இராசராச வர்மா என்ற திறமை மிக்க ஓவிய வல்லுநர் ஒருவர் திருவிதாங்கூரில் அரண்மனை ஓவியப் புலவராக இருந்துவந்தார். அவர் இரவிவர்மாது ஓவிய வன்மையைக் கண்டு வியந்து, இவரைத் தம்முடைய மாணவர்களில் ஒருவராகச் சேர்த்துக் கொண்டார். இரவிவர்மரும் தமது புலமையால் இராசராச வர்மாவின் மாணவர் பலருள் முதன்மையானவராக விளங்கினார்.



இராசா இரவிவர்மா

**தியோடோர் ஜேன்ஸன்** என்ற ஆங்கிலேயர் ஒருவர் அப்பொழுது இந்தியாவுக்கு வந்திருந்தார். அவர் புதிய முறைகளில் ஓவியம் வரைவதில் மிக்க தேர்ச்சி பெற்றவர். அவர் திருவிதாங்கூருக்குச் சென்றிருந்தபோது இரவிவர்மருக்கு இயல்பிலமைந்த ஓவிய வன்மையைக் கண்டு மகிழ்ந்து, வண்ணப் படங்கள் தீட்டும் வழியினை இவருக்குக் கற்றுக் கொடுத்தார். அதுவே இராசா இரவிவர்மரின் வாழ்க்கையை மேல் நிலைக்குக் கொண்டுவரக் காரணமாயிற்று. எண்ணெய் கலந்து தீட்டப்பட்ட வண்ணப் படங்களை முதன் முதல் இந்நாட்டில் எழுதிக்காட்டினவர் நம் இராசா இரவிவர்மரே யாவர்.

இரவி வர்மாவின் புகழ் கி. பி. 1874-ஆம் ஆண்டிலிருந்து வெளியிற் பரவத்தொடங்கியது. அவ்வாண்டில் இவர், சென்னையில் நடந்த கண்காட்சி யொன்றுக்கு, நாயர்குலப் பெண்ணொருத்தியைப் போன்று தம்மால் தீட்டப்பெற்ற படம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். கவர்னரால் ஏற்படுத்தப்பட்ட தங்கப் பதக்கமொன்று அதற்குப் பரிசாக இவருக்குக் கிடைத்தது. பின்னர் கி. பி. 1878-ஆம் ஆண்டில் சென்னையில் நடந்த மற்றொரு காட்சிக்கு, சகுந்தலையைப் போன்று தாம் வரைந்த ஓவியப் படமொன்றை இவர் அனுப்பினார். அதற்கும் முதற் பரிசாக இவர் கவர்னரின் பொற் பதக்கம் கிடைக்கப் பெற்றார். அடுத்த ஆண்டில் அவர், அக்காலத்திற் சென்னைக் கவர்னராக இருந்த பக்கிங்ஹாம் பிரபுவிற்கு மிக அழகாக அவருடைய உருவத்தை வரைந்து கொடுத்தார். அதுமுதல், இராசா இரவிவர்மரின் புகழ் நாடெங்கும் பரவலாயிற்று.

ஆகவே, திருவிதாங்கூர் அரசரும், பரோடா மன்னரும் இவரைத் தத்தம் அரண்மனைக்கு வரவழைத்துப் பல படங்

களைத் தம் விருப்பப்படியே எழுதுவித்துப் பலப்பல பரிசுகள் வழங்கினர். இவர் தீட்டும் படங்களுக்கு விலை மிகுதியாக இருந்தமையால் அக்காலத்தில் அரசருக்கும், பெருஞ் செல்வர்களுக்கும் மட்டுமே, அவை கிடைக்கக் கூடியனவாக இருந்தன. அதனை உணர்ந்த சர். டி. மாதவராவ் அவர்கள் நீள நினைந்து, இரவிவர்மர் தீட்டும் படங்களை அச்சிடுவித்து, எல்லோர்க்கும் குறைந்த விலையிற் கிடைக்கும்படி செய்தார்.

இரவிவர்மர் எழுதிய படங்கள் பல இப்பொழுதும் திருவிதாங்கூர் அரசாங்க ஓவியக் கல்லூரியிலும், மைசூர், பரோடா மன்னர்களின் அரண்மனைகளிலும் இருக்கின்றன. சென்னை, பம்பாய், சிம்லா, பூனா, கல்கத்தா, வியன்னா, இலண்டன், சிக்காகோ முதலிய நகரங்களில் நடந்த கண்காட்சிகளிலெல்லாம் இவர் படங்கள் வைக்கப்பட்டன. அதனால், இவருக்குப் பற்பல பதக்கங்களும், நற்சான்றிதழ்களும் கிடைத்தன.

இப்பெரியார் இப்பொழுது உயிரோடில்லாதிருந்தும், நம் நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும், தாம் வரைந்த படங்களின் வழியாய்த் தம்து புகழை விளக்கிக்கொண்டிருக்கின்றார்.

### பயிற்சி

1. வாணர், வல்லுநர், வானளாவுதல், முதன்மை, முறை, ஓவியம், வண்ணம் தீட்டுதல், பரிசு, நீளநினைத்தல், கல்லூரி, அரண்மனை, நற்சான்றிதழ்.
2. இரவிவர்மரின் புகழ் எவ்வாறு எங்கும் பரவிற்று?
3. ஐந்தாவது முதலாகிய வேற்றுமைகட்கு உதாரணங்கள் காண்க.
4. இரவிவர்மர் படங்கள் எவ்வாறு ஏழைகளாலும் வாங்க எளிதாயின?

## ௧௨. வெனிஸ் வணிகன்

இத்தாலிநாட்டைச் சேர்ந்த வெனிஸ்நகரத்தில், ஒரு காலத்தில், ஷைலக் என்ற செல்வனொருவன் இருந்தான். அவன் யூதர்கள் மரபைச் சேர்ந்தவன். ஆண்டில் முதியனு யினும் அவன் அறிவிற் குறைந்தவனுயிருந்தான். அவனிடத்தில் ஈகை, இரக்கம், பெருந்தன்மை முதலிய நற்குணங்கள் எள்ளளவுங் கிடையா. அவன் தொழில் பணத்தை வட்டிக்குக் கொடுத்து வாங்குதலேயாகும். அவனுக்குக் கிறித்தவ வணிகர்களைக் கண்டால், மிக்க வெறுப்பு அதனுல் அவன் அவர்களிடத்தில் மட்டும் கடுவட்டி வாங்குவான்.



ஷைலக்

வெனிஸ் நகரில், அதே காலத்தில், அந்தோனியோ என்ற கிறித்தவ வணிகன் ஒருவன் வாழ்ந்துவந்தான். அவன் ஆண்டிலே யன்றி, அறிவிலும் முதியவனுயிருந்தான். அவனிடத்தில் அன்பு, அடக்கம், பொறுமை, பிறர்க்குதவி, பெருந்தன்மை முதலிய பெருங்குணங்கள் பல நிறைந்திருந்தன. அவன் வட்டி வாங்குதல் மிகவுங் கேடுகெட்ட தொழிலென்று கருதியும், பேசியும், அதனை விலக்கியும் வந்தான். ஆகவே, அவனுக்கும் ஷைலக்கிற்கும் இரவும்பகலும் போன்று மிகுந்த வேறுபாடு இருந்தது.

அந்தோனியோவுக்கு, பஸானியோ என்ற நண்பனொருவன் இருந்தான். அவன் பெரிய குடும்பத்திற் பிறந்தவனுயினும், பொருள்வளமில்லாதவன். அவன் எப்பொழு

தும் நண்பர் பலருடன் கூடிக் காலத்தை மகிழ்ச்சியாகக் கழிப்பதிலேயே விருப்பங் கொண்டவன். அதனுல் அவனிட மிருந்த சிறு பொருளும் நாளடைவிற் கரைவதாயிற்று. செல் வங்குன்றியும் அவனிடம் இயற்கையாக விருந்த பெருந் தன்மை, உண்மை பேசுதல், வஞ்சகமின்மை முதலிய நற் குணங்கள் அவனை விட்டகன்றில. ஆகலின், அவனுடைய நண்பனுகிய அந்தோனியோ அவனைக் கைவிடாது, அவனுக்கு அவ்வப்போது பொருள் உதவி அவனைப் பாதுகாத்துவந்தான்.

பஸானியோவின் நண்பர்கள் பலரில் வெனிஸ் நகருக்கு அருகிலிருந்த பெல்மாண்டு நகரில் வாழ்ந்து வந்த பெருஞ் செல்வந்தர் ஒருவரும் இருந்தார். அவருக்குப் போர்ஷியா வென்னும் மிகுந்த அழகும், நிறைந்த கல்வியும், நுட்பமான அறிவும் வாய்ந்த ஒரு பெண் உண்டு. அவள் வீட்டிற்குப் பன்முறை விருந்தினனுகச் சென்று வந்துகொண்டிருந்த பஸானியோ போர்ஷியாமீது காதல் கொண்டிருந் தான். அவளும் அவனையே மணப்ப தென்று முடிவு செய்திருந்தாள். இருந்தாலும், அவ்விருவரும் தங்கள் கருத்தை ஒருவருக்கொருவர் வெளி யிடாம லிருந்து வந்தனர். இவ்வாறி ருக்கையில் போர்ஷியாவின் தந்தை திடுமெனக் காலமானுர். அவருடைய திரண்டசெல்வத்திற் குப் போர்ஷியாவே உரியவளானுள். ஆகவே, அவளைப் பெருஞ்செல்வர்கள் பலர் மணம்புரிந்துகொள்ள வேண்டி முயன்றுவந்தனர்.


பஸானியோ

ஆனால் இறக்குமுன், போர்ஷியாவின் தந்தையார் தம் மகளின் மணத்தைக் குறித்து ஓர் ஏற்பாடு செய்திருந்தார்: அஃதாவது, முறையே பொன்னாலும், வெள்ளியாலும், ஈயத்தாலும் மூன்று பெட்டிகள் செய்வித்து, அவற்றுள் ஒன்றில், போர்ஷியாவின் அழகிய படமொன்றை வைத்துப் பூட்டி, அப்படமுள்ள பெட்டியை எவன் எடுத்தவெடுப்பில் தேர்ந்து திறக்கின்றானோ அவனே போர்ஷியாவை மணக்க வேண்டும் என்பதே. அப்பெட்டிகளிற் பொற்பெட்டியின்மீது, "என்னை விரும்புவோன் பலர் விரும்புவதைப் பெறுவான்" என்றும், வெள்ளிப் பெட்டியின்மீது, "என்னை வேண்டுவோன் தன் பெருமைக்குத் தக்கதைப் பெறுவான்" என்றும், ஈயப் பெட்டியின் மேலே, "என்னை விரும்புவோன் தனக்குரியதையெல்லாம் அளிக்கவும், துறக்கவும் துணிதல்வேண்டும்" என்றும் அவர் எழுதச் செய்திருந்தார்.

தன் தந்தை செய்த ஏற்பாட்டைப் பின்பற்றுவதே முறையென்று முடிவுசெய்த போர்ஷியா அதன்படியே தான் மணமுடிக்கப் போவதாக விளம்பரப்படுத்தினாள். அவளைத் தேடிவந்த செல்வர்கள் பலர் உரிய பெட்டியைத் திறக்க வகை தெரியாமல், தோல்வியுற்றனர். பொற் பெட்டியைத் திறந்தவர் ஒரு மண்டையோட்டைக் கண்டனர். அதனோடு, "மின்னுவதெல்லாம் பொன்னல்ல" என்ற பழமொழி வரையப்பட்ட சீட்டொன்றும் காணப்பட்டது. வெள்ளிப் பெட்டியைத் திறந்தவரோ தலையில்லா ஒரு முழுமுண்டத்தின் படமொன்றையும், "வெள்வேடம் பூண்ட வெறியருமுண்டு" என்றெழுதப் பெற்ற சீட்டொன்றையுங் கண்டனர். ஆனால், அவர்கள் முதலிற் கொடுத்திருந்த உறுதிமொழியின்படி அவற்றைப் பிறர்க்கு வெளியிடாது மறைத்துப் போயினர்.

போர்ஷியாவின் தந்தை செய்துள்ள ஏற்பாட்டைக் கேள்வியுற்ற பஸானியோ தானும் முயன்று, "அவளை மணம் முடிப்பது ; இன்றேல்; மணமின்றி வாழ்நாளைக் கழிப்பது," என்று முடிவு செய்துகொண்டான். ஆயினும், பெருஞ்செல்வி யாகிய அவளை மணக்கச் செல்லும்போது, செல்வர்கட்கு வேண்டிய எடுபிடிகளோடு செல்வதே தகுதியென அவன் எண்ணினான். அவ்வாறு அவன் புறப்பட்டுப் போவதென்றால் குறைந்தது மூவாயிரம் வெண்பொற் காசுகளாவது பிடிக்கும். அவன் கையிலோ பணமில்லை. அவ்வப்போது உதவி செய்து கொண்டிருந்த உயிர்நண்பனாகிய அந்தோனியோவோ அக் காலை, தன் கைப்பொருளையெல்லாம் கப்பல் வாணிபத்தில் ஈடுபடுத்தியிருந்தான் ; அதனால், அவன் கையிலும் உடன் பெறக்கூடிய பெருந்தொகைக்கு வழியில்லை. ஆகவே, என்ன செய்வதென்று தெரியாமல் பஸானியோ திகைத்திருந்தான்.

ஆயினும், அவன் உட்கருத்தை எவ்வாறோ அறிந்து கொண்ட அந்தோனியோ தன் நண்பனுக்கு எவ்விதத்திலும் உதவி செய்ய வேண்டுமென்று கருதினான். ஆகவே, பஸானி யோவை அழைத்துக்கொண்டு, அந்தோனியோ ஷைலக்கினிடம் சென்று மூவாயிரம் வெண்பொற் காசுகள் உடனே வட்டிக்குத் தருமாறு அவனைக் கேட்டான். தன் பிறவியெதிரி யாகிய அந் தோனியோ தன் வலையில் எப் பொழுது விழுவானென்று காத் திருந்த ஷைலக் அவனை யொழிக்க அதுதான் தருணம் என்று கண்டுகொண்டான்.


அந்தோனியோ

ஆகலின், அவன் அந்தோனியோவிடம் மிகவும் பணிவுடன் பேசினான்; மேலும், அந்தோனியோ வட்டி யாதும் கொடுக்க வேண்டியதில்லை என்றும் சொன்னான்; இன்னும் ஒரு மாதத் தவணைக்குள் கொடுத்த தொகையை மட்டுந் திருப்பிக் கொடுத்து விட்டால் போதுமென்றும் புகன்றான். ஆனால், ஒரு மாதத் தவணைக்குள் கொடுக்கத் தவறினாலோ, அந்தோனியோவினது உடலில் தான் குறிப்பிடும் ஒரு பகுதியிலிருந்து ஓர் இராத்தல் தசையை அரிந் தெடுத்துக்கொள்ள ஒப்புக்கொள்ளவும் வேண்டுமென்ற ஒரு கட்டுப்பாட்டையும் ஷைலக் இறுதியில் மெல்ல வெளியிட்டான். அதனைக் கேட்ட பஸானியோ, தனக்கு மணமாகாவிட்டாலும் சரி, அம்முறையில் கடன் பெறல் வேண்டாவென்று அந்தோனியோவிடம் கூறினான். ஆனால், அந்தோனியோவோ, ஒரு மாதத்திற்குள் தன் கப்பல்கள் திரும்பி வந்துவிடக் கூடுமாதலால், அஞ்ச வேண்டியதில்லை எனக் கூறி, பஸானியோவைத் தேற்றினான். பிறகு ஷைலக் கூறியவாறே உறுதிமொழிச் சீட்டொன்று எழுதிக் கொடுத்து, மூவாயிரம் வெண்பொற் காசுகளை வாங்கி பஸானியோவிடம் கொடுத்தான்.



போர்ஷியா

தொகை பெற்ற பஸானியோ மணமகனுக்கு வேண்டிய பொருள்களை யெல்லாந் திரட்டிக்கொண்டு பெல்மாண்டுக்குப் புறப்பட்டான். அவனுடன் அவனுடைய நண்பர்களில் ஒருவனாகிய கிரேஷியானோ மாப்பிள்ளைத் தோழனாகச் சென்றான்.

பல நாட்கள் பயணஞ் செய்து, ஒருநாட் காலை இவர்கள் பெல்மாண்டு சேர்ந்து போர்ஷியாவின் மாளிகையை அடைந்தார்கள். பஸானியோவின் வருகையைக் கண்ட போர்ஷியாவின் மனம் மிகவும் மகிழ்வுற்றது. ஆயினும் தன் தந்தையின் ஏற்பாட்டின்படி பெட்டித் தேர்தலில் அவன் வெற்றியுற வேண்டுமே என்று அவள் மிகுதியும் கவலைகொண்டிருந்தாள்.

மறுநாட்காலை பஸானியோ பெட்டிகளிருக்குமிடஞ் சென்று, பொன்னையும், வெள்ளியையும் வெறுத்து, ஈயப் பெட்டியினைத் தேர்ந்து திறந்தான். திறந்ததும் அவன், அதன்கண் போர்ஷியாவின் அழகிய படமொன்றும், அதனுடன், "வெளியுருவைக் கண்டு மோசம் போகாதே!" என்று எழுதப்பெற்ற சீட்டொன்று மிருக்கக் கண்டான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த போர்ஷியா மனம் மிக மகிழ்ந்து, பஸானியோவை மணக்க இசைந்தாள். மணம் மிகச் சிறப்பாக முடிந்தது. பஸானியோவின் மாப்பிள்ளைத் தோழனான கிரேஷியானோ போர்ஷியாவின் தோழியாகிய நெரிஸாவை மணந்து கொண்டான்.

இவ்வாறு மணமுடிந்த சிலநாட்களுக்குப்பிறகு வெனிஸ் நகரத்திலிருந்து பஸானியோவுக்கு ஒரு கடிதம் வந்தது. கப்பல்கள் திசைதப்பிப் போய்விட்டனவென்றும், அதனால் தவணைப்படி ஷைலக்குக்குச் சேரவேண்டிய பொருளைத் தான் செலுத்த முடியவில்லையென்றும், அதன்மேல் ஷைலக் ஓரிராத்தல் நசை கிடைக்கவேண்டுமென்று வழக்குத் தொடுத்திருப்பதாகவும், தான் இறப்பதற்குமுன் பஸானியோவை ஒருமுறை காண விரும்புவதாகவும் அக்கடிதத்தில் அந்தோனியோ எழுதியிருந்தான்.

பஸானியோ அக்கடிதத்தைப் போர்ஷியாவிடங் காட்டி, நடந்த செய்திகளை யெல்லாம் விரிவாகச் சொன்னான். அதைக் கேட்ட போர்ஷியா மிக வருந்தியவளாய், வேண்டிய பொருளைத் தான் தருவதாகவும், அதனை எடுத்துக்கொண்டு போய் அந்தோனியோவை உடனே மீட்டுவரும்படியும் கூறினாள். அப்படியே பஸானியோவும், கிரேஷியானோவும் மிகுந்த பொருளுடன் வெனிஸுக்குச் சென்றார்கள்.

வெனிஸ் நகரத்திலோ ஷைலக்கின் வழக்கினைக் கண்ட அரசர் முதலிய எல்லோருந் திடுக்கிட்டனர். ஷைலக் தனக்கு வேண்டுவது தசைதான் எனப் பிடிவாதமாய் நின்றான். அவ் வமயம் அங்கு வந்துசேர்ந்த பஸானியோ, செலுத்தப்பட வேண்டிய தொகைக்குப் பன்மடங்குகொண்ட பொருள் தான் தருவதாக ஷைலக்கை மிகவும் வேண்டிக் கேட்டுக்கொண்டான். ஷைலக்கோ ஒரே பிடிவாதமாக அதனை மறுத்து விட்டான். ஆகவே, வழக்கு அந்நாட்டு அரசரால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்பொழுது, வழக்கறிஞருடைதரித்த அழகிய வாலிபரொருவர் அங்கு வந்து அரசரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தார். கடிதத்தைப் படித்துப் பார்த்த அரசர் அவ்வாலிபர் அந்தோனியோவின் சார்பில் வழக்குரைக்கலாமென்று விடை கொடுத்தார்.

அவ்வாலிப வழக்கறிஞர் ஷைலக்கினிடம் பலவகையில் எடுத்துரைத்து, கொடுத்த பொருளுக்கு மும்மடங்காகத் திருப்பி வாங்கிக்கொள்ளும்படி கூறினார். அவனோ அதற்குச் சிறிதும் இணங்கவில்லை. அதன்மேல் வழக்கறிஞர் உறுதி மொழிச் சீட்டின்படி ஷைலக் ஓரிராத்தல் தசையைமட்டும் அந்தோனியோவின் உடம்பிலிருந்து அரிந்துகொள்வதில் தமக்கு யாதொரு தடையுமில்லையென்றும், ஆனால், அவ்வாறு

அரியும்பொழுது ஒரு துளி இரத்தங்கூடச் சிந்தக்கூடாதென்றும், மேலும், ஓரிராத்தலுக்குக் கூடுதலாகவோ குறைத



வழக்குமன்றம்

லாகவோ தசை அரிந்தெடுக்க வொண்ணுதென்றும் ஷைலக்கிடம் கண்டிப்பாகத் தெரிவித்தார். இன்னும், அவ்வாறு செய்யத்தவறி, கிறித்தவ வணிகனுகிய அந்தோணியோவின் இரத்தம் ஒரு துளியேனும் உடம்பிலிருந்து வெளி வந்தால், உரோம சட்டப்படி ஷைலக்கினுடைய உடைமைகளெல்லாம் பறிமுதல் செய்யப்படுமென்றும், அவனும் தூக்கிலிடப்படுவா னென்றும் அவர் எடுத்துக் கூறினுர்.

அதுகேட்ட ஷைலக் திகைப்புற்று, "அப்படியானுல், தசை வேண்டுவதின்று, பொருள் கிடைத்தாற் போதும்,"

என்று வழக்கறிஞரை வேண்டினன். வழக்கறிஞரும் மற்றை யோரும் அதற்கிணங்கவில்லை. ஆகவே, ஷைலக் எதிர்பாராத வகையில் தோல்வியுற்று, உறுதிமொழிச் சீட்டை உதறி யெறிந்துவிட்டு, உள்ளங்கலங்கி நின்றான். இதனைக் கண்ட அரசர் ஷைலக்கை ஒருவாறு மன்னித்து வெறுங்கையோடு அனுப்பிவிட்டனர். இவ்வாறு அந்தோனியோவின் உயிர் காப்பாற்றப்பட்டது.

வாலிபராக வந்து வழக்காடிய அவ் விளைஞர் யாரென்று உங்கட்குத் தெரியுமா? அவர்தான் பெல்மாண்டுப் பெருஞ் செல்வியும், பஸானியோவின் மனைவியுமாகிய போர்ஷியா. அவரே மாற்றுடை யணிந்து திறமையுடன் வழக்காடியவர். இவ்வுண்மையுணர்ந்த பஸானியோவிற்கும், அந்தோனியோ விற்குமுண்டான மகிழ்ச்சியை அளவிட்டுரைக்க இயலுமோ?

## பயிற்சி

1. பொருள்வளம், நாளடைவு, பன்முறை, எடுத்த வெடுப்பு, பின் பற்றுதல், உரிமை, எடுபிடி, ஈடுபடுத்தல், தேர்தல், பிறவி யெதிரி, வழக்கறிஞர், வழக்குரைத்தல், இயலல், இணங்குதல்.
2. அந்தோனியா பஸானியோவுக்கு உயிர் நண்பன் - எப்படி?
3. வணிகன் - இதனை எட்டு வேற்றுமைகளிலும் எழுதிக் காட்டு.
4. போர்ஷியாவின் கூரிய அறிவாற் கண்ட சீரிய பயன் யாவை?



## ௧௫. மக்கட்பேறு

படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே.

—**பாண்டியன் அறிவுடைநம்பி.**

### இதன் பொருள்

(மக்கட் செல்வம் ஒன்று தவிர்ந்த ஏனைய நிலபுலம், வீடு, மனைவி, சுற்றத்தார் முதலிய) பலவகையான செல்வ நிலைகளும் வாய்க்கப்பெற்று, உண்ணும்போதெல்லாம் (உறவினர்,

நண்பர், விருந்தினர் என்ற முப்பிரிவினரிற்) பலருடன் கூட வுண்ணும் திரண்ட செல்வந்தராயினும், இடையிடையே தத்தித் தத்தி நடந்து சிறிய கைகளை நீட்டிக் கலத்திலுள்ள நெய்யோடு கூடிய உணவைக் கீழே இறைத்தும், பிசைந்தும், வாய் நிறைய அள்ளியிட்டும், துழாவியும், உடம்பின்மேற் சிதறிக்கொண்டும் (இவ்வாறாக, உண்போர் அறிவை இன்பத் தால்) மயக்கும் மக்களைப் பெறாதவர்களுக்கு (மற்றைச் செல் வங்களால்) அவர்களுடைய வாழ்நாளில் (அவர்கள் பெறப் போகிற உண்மையான) பயன் என்ன? ஒன்றுமில்லை.

[புறப்பொருளாவது இல்லற துறவற வாழ்க்கைகளாகிய அறத்தையும், பொருள் தேடும் வழியினையும், இவற்றுக்கு இன்றியமையாத அரசியல் முறைகளையும் எடுத்துச் சொல் வதாகும். புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட ஓர் அருமையான நூல் **புறநானூறு** என்பது. இது சங்ககாலத்து நூல்களில் ஒன்று. இதன்கண் உள்ள நானூறு பாடல்களும் சங்ககாலத்தில் இருந்த பெரியோர்கள் பலரால் தனித்தனியாகப் பாடப்பட்டனவாகும். இச்செய்யுட் களால் அக்காலப் பழக்க வழக்கங்கள், உயரிய கருத்துக்கள் ஆகிய பலவற்றை அறியலாம். மேற்காணும் செய்யுள் அவற்றுள் ஒன்று.]

## பயிற்சி

1. படைப்பு, இடைப்பட, தழத்தல், அடிசில், விதிர்த்தல், பயக்குறை.
2. **புறநானூறு**—இதனைப்பற்றி உனக்கென்ன தெரியும்?
3. படைப்பு, படைத்து, உடை, இடை, நடந்து, நெய்யுடை, மெய்பட, பயக்குறை—இவை என்னென்ன சொற்கள்?
4. இப்பாட்டின் கருத்தென்ன?

# கசு. மாணிக்க நாயக்கர்

தமிழ்நாட்டின் ஒரு பகுதி சேலம் ஜில்லாவாகும். அந்த ஜில்லாவைச் சேர்ந்தது பாகற்பட்டி. அவ்வூரிற் சிறப்பு மிக்க பெருங்குடி யொன்றில் வந்தவர் வேங்கடசாமி நாயக்கர் என்பார். அவருக்கு இரண்டாவது மகனாக, 1871-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ஆம் நாள், மாணிக்க நாயக்கர் பிறந்தார். இளமையிலிருந்தே நாயக்கர் நினைவாற்றல் மிக்கவராயும் பிள்ளைமைக் குறும்பு நிறைந்தவராயுங் காணப்பட்டார். தம்முடைய பன்னிரண்டாவது வயது வரையில் முறையாக எந்தப் பள்ளிக்கூடத்திலும் அவர் சேர்ந்து கல்வி பயிலவில்லை.

பன்னிரண்டு வயதிற்குமேற் கல்விப் பயிற்சி குறித்து நாயக்கர் சேலத்திற் கனுப்பப்பட்டார். பள்ளியிற் சேர்ந்தது முதல் அவர் மிகவுங் கூர்மையாகவே தம் பாடங்களைப் படித்துவரலானார். இரண்டு ஆண்டுகளில் அவர் தமிழிற் செய்யுள்செய்யுந் திறம் வாய்க்கப்பெற்றார்; சோதிட நூலிலும் பெரிதும் வல்லவராக விளங்கினார். பதினாறும் வயதில் தம்முடைய வாழ்க்கைக் குறிப்பைச் சோதிட நூல் முறைப்படி தாமே எழுதப்புகுந்து ஐம்பத்தொன்பது வயது முடிவாகுங் காலம் வரையில் அதனை எழுதி முடித்தார். அவர் அப்பொழுது எழுதிய அக்குறிப்புக்கள் இம்மியளவுந் தவறாமல் பிற்காலத்தில் உண்மையில் நிகழ்ந்தேறின என்பதும், ஐம்பத்தொன்பது முடிந்து அறுபதாம் ஆண்டிலேயே அவர் இவ்வுலக வாழ்வை நீத்தார் என்பதும் வியக்கத்தக்கன வல்லவோ!

நாயக்கர் பிறந்தது சிறப்புவாய்ந்த பெருங்குடியே யாயினும், அவர் பிறந்த காலத்தில் அக்குடி வறுமையால் வாடி-

யிருந்தது; நாயக்கருடைய கல்விச் செலவிற்குப் போதிய வருவாயில்லை. ஆனாலும் அத்தகைய வறுமைமேலீட்டால் அவருடைய கல்விப்பயிற்சி நின்றுவிடவில்லை. இளமையிலேயே அவர் காட்டிய அறிவுமிகுதியையும் ஆற்றலையுங் கண்ட பாகற்பட்டி மிட்டாதாரும், முனுசாமி நாயுடு என்னும் பெரியார் ஒருவரும் அவர் கல்விச்செலவிற்கு வேண்டிய பொருளைச் சிறிதுகாலம் ஈந்துவந்தனர். பள்ளியில் உடன்பயிலும் மாணவர்கள் பலரும் அவருக்குப் பலவகையிற் பொருளுதவியதுண்டு. அவ்வாறிருந்தும் சிற்சில சமயங்களிற் பாடநூல்களை வாங்க வியலாதுபோகவே, அவற்றைக் கையால் அவர் எழுதிப் படித்தது முண்டு. தையல் வேலையிலும் இசைப் பயிற்சியிலும் நாயக்கருக்கு மிகுந்த விருப்பம். அதனைக் கண்ட பாதிரியார் ஒருவர் அவருக்கு "பிடில்" ஒன்றும், தையல் தைக்கும் பொறி ஒன்றும் வாங்கிப் பரிசளித்தார்.

நாயக்கர் சேலம் கல்லூரியில் எப். ஏ. வகுப்புவரையிற் படித்துப் பட்டமும் பெற்றார். அக் கல்லூரித் தலைவர் நாயக்கரின் திறமையைக் கண்டு அவர்பால் அன்புமிக்கு "எஞ்சினீயரிங்" என்னும் பொறித்துறைக் கல்லூரியிற் சேர்ந்து படிப்பதற்கான உதவிகளைச் செய்தார். அக் கல்லூரியிலும் நாயக்கர் திறமையுடன் படித்துத் தேர்ந்து பல பரிசுகளைப் பெற்றார். அதன்பின், 1896-ஆம் ஆண்டில் அவர் அரசாங்கத்தில் உதவிஎஞ்சினீயர் வேலையி லமர்ந்தார்.

அமர்ந்த அலுவலில் மிக்க திறமையுடனும், கண்டிப்புடனும், ஊக்கத்துடனும் நாயக்கர் பணியாற்றிவந்தார். அத்துறையில் அவர் பெரிய மேதாவியாகவே விளங்கினார். அதுவரையிற் கண்டுபிடிக்கப்படாத அறுபதுக்கு மேற்பட்ட புதுப்புது வழிகளை அவர் தாமாகக் கண்டுபிடித்துச்



மாணிக்க நாயக்கர்.

செயன்முறையிற் கொண்டுவந்தார். அவற்றுள், "கால்க்யுலோகிராப்" என்ற சுருக்குவழிக் கணக்குமுறையும் ஒன்றாகும். இம்முறை டாக்டர் அன்வின், காம்பியன், கார்னெட் முதலிய மேனாட்டறிஞர்கள் பலராற் புகழ்ந்து பாராட்டப்பட்ட தொன்றாகும். உலகத்திலேயே சிறந்த பெரிய அணைக்கட்டாக இக்காலை கருதப்பட்டுவரும் மேட்டூர்த் திட்டத்தைப்பற்றிய கருத்தை முதன்முதலாகச் சென்னை யரசாங்கத்தாருக்கு எடுத்துக்கூறிப் பதியவைத்தவர் நாயக்கரே.

தம்முடைய முப்பத்தைந்தாம் வயதில் அதாவது 1906-1907-ல், நாயக்கர் சென்னை யரசாங்க எக்ஸிகியூடிவ் எஞ்சினீயர்களில் ஒருவராக உயர்த்தப்பட்டார். 1912-ல் அவர் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தார். அவ்வாறு சென்றிருந்த காலையில்தான், அவர் முற்கூறிய "கால்க்யுலோகிராப்" என்ற முறையைக் கண்டுபிடித்து வெளியிட்டதாகும். 1915-ஆம் ஆண்டிலிருந்து சென்னை எஞ்சினீயரிங் கல்லூரியில் ஸிவில் எஞ்சினீயரிங் பேராசிரியராக அமர்த்தப்பட்டார். அவ்வலுவலில் 1919-ஆம் ஆண்டு வரையிலிருந்து, பின் அரசாங்கப் பொதுமராமத்துத் துறையில் மீண்டும் சூப்பரின்டெண்டிங் எஞ்சினீயரானார். அவ் வேலையிலிருந்து விடுதி பெற்று இரண்டோராண்டு கழிந்தபின், 1931-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ஆம் நாள் இரவு அவர் திடுமென இரத்தக்கொதிப்பினால் உயிர்நீத்தார்.

மேற்கொண்ட அலுவலைத் திறம்படச் செய்துவந்த நாயக்கர் தமிழ்க் கல்வியிலும், நுணுகிய தமிழ்நூல் ஆராய்ச்சியிலும் இடையிடையே மிகவும் ஈடுபட் டுழைத்துவந்திருந்தார். ஆராய்ச்சி உண்மைகள் நிறைந்த கட்டுரைகள் எழுதுவதிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதிலும் 'நாயக்கர் தேர்ந்த

ஒருவராகத் திகழ்ந்துவந்தார். தமிழ்நெடுங்கணக்கு அறிவு வளர்ச்சிக்கேற்ற முறையில் இயல்பாக அமைக்கப்பட்டிருப்ப தொன்றாகும்; அதனால் அம்மொழி உலகத்திலுள்ள மற்றெல்லா மொழிகளுக்கும் அடிப்படையா யிலங்கக்கூடிய ஆற்றல் வாய்ந்ததொன்றாகும் என அறிவியல்முறையில் தக்க ஆதாரங்களுடன் எடுத்துவிளக்கி அவர் பெரும் புகழெய்தினார். தமிழ்நூல்களிற் சிறந்தனவாகக் கருதப்படும் தொல்காப்பியம், திருக்குறள் என்ற இரு பெருநூல்களையும் அண்மைக்காலத்தில் எழுத்தெண்ணிக் கற்ற ஆங்கிலம் வல்ல தமிழ்நாட்டுப் பெரியார்களில் நாயக்கர் சிறந்தவராகக் கருதப்பட்டுவந்தார்.

## பயிற்சி

1. நினைவாற்றல், பிள்ளைமைக் குறும்பு, செய்யுள், இம்மி, வருவாய், மேலீடு, பொறி, பரிசு, பணியாற்றுதல், மேதாவி, செயன்முறை, புகழ்ந்து பாராட்டுதல், பேராசிரியர், நீத்தல், கட்டுரை, சொற்பொழிவு, நிகழ்தல், திகழ்தல், நெடுங்கணக்கு, இலங்குதல், எழுத்தெண்ணிக் கற்றல்.

2. மாணிக்க நாயக்கரின் சோதிடநூல் வன்மை எவ்வாறு அறியப்பட்டது?

3. இப்பாடத்தில் ஐம்பாற் பெயர்களுக்கெல்லாம் உதாரணங்கள் உண்டா?

4. மாணிக்க நாயக்கா கண்டுபிடித்துக் காட்டிய தமிழ்மொழி யாற்றலின் சிறப்பென்ன?

# கரு. பேராசை பெருங்கேடு

## (ஒரு பண்டைக்காலக் கட்டுக்கதை)

சோணையூரில் குடியானவன் ஒருவன் இருந்தான். அவ்வூரிற் குடியிருந்த நூறுநூற்றைம்பது குடியானவர்களில் அவனே மிக்க ஏழை. அதனால், அவனை அவ்வூரார் ஏளனமாக நடத்திவந்தார்கள். ஏழையென்றால் மோழையும் பாயுமன்றோ? மேலும், அவனுடைய முன்பற்களில் ஒன்று ஒரு சாண் வெளியே நீண்டுவந்திருந்தது. கேட்பானேன்! அவ்வூரிலுள்ள பெரியவர்கள்முதல் சிறுபிள்ளைகள்வரை யாவரும் அவனை ஏளனம் பண்ணிவந்தார்கள்.

ஆயினும், ஏழையாயிருந்த சாண்பல்லனைப் பழித்து வந்த அளவிற்கு, அவன் வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் வசித்துவந்த முழம்பல்லனை அவ்வூரார் இகழ்வதில்லை. பல்லளவு மிகுதியாய் விட்டதென்று கருதி, அவர்கள் விட்டு விட்டதாக நீங்கள் எண்ணிவிட வேண்டாம். பல் முழநீளமிருந்தாலும், அவன் சிறிது செல்வமுடையவனாயிருந்தான். பணம் பாதாளமட்டும் பாயுமன்றோ? மேலும், முழம்பல்லன் சினமிகுந்தவன்; சினமுண்டாக்கப் பட்டால், அகப்பட்டவர்களைப் பல்லாலேயே கரண்டிக் கொன்றுவிடக்கூடிய முரடன். ஆகவே, அவன் பேச்சிற்கு யாரும் போவதில்லை.

வாயிளைத்தவனான சாண்பல்லன்மனைவிக்கோ இந்நிலைமை பொறுக்கக்கூடாத துன்பமாக இருந்தது. அவள் நெடுநாளாய் இதனை எண்ணி யெண்ணி ஏங்கினாள். ஒருநாள் இரவு சட்டென்று அவளுக்கு ஒரு நினைவெழுந்தது. அவ்வூருக்கு அருகிலுள்ள மலைக்குகை யொன்றில் யாரோ பெரியார் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் அரிய பல காரியங்களைச்

செய்து முடிக்க வல்லவரென்றும் அவள் கேள்விப்பட்டிருந்தாள். ஆகவே, தன் கணவனை அவரிடம் அனுப்பிச் சாண் பல்லைப் போக்கிச் சரியான பல்லைப் பெறச் செய்யலாமென்பதே அவள் மனத்திடை எழுந்த நினைவாகும். உடனே அவள் வீட்டிலிருந்த புளித்த மோரையும், பழஞ் சோற்றையும் பிசைந்து கட்டுச்சோறு கட்டினாள். பொழுது விடிந்ததும், அதை அவள் கணவனிடங் கொடுத்துத் தன் கருத்தையும் விளக்கிக்கூறி அவனை வழியனுப்பினாள்.

சாண்பல்லனும் தடையொன்றுங் கூறாமல் சோற்று மூட்டையைத் தோளிற் போட்டுக்கொண்டு புறப்பட்டான்; நடையாக நடந்து, உச்சிப்பொழுதிற் குறிப்பிட்ட மலைக் குகையைவந்தடைந்தான். அடைந்தவன் குகையினுள் எட்டிப் பார்க்கவே, அப்பெரியார் கடவுளை எண்ணியபடியே கண்களை மூடி மோன நிலையி லிருக்கக்கண்டான். ஆகவே, அச்சமயம் அவருடன் பேசுவது தவறு என்று நினைத்து, குகைக்கெதிரிலுள்ள மரத்துநிழலிற் போய் நின்றான். அவனுக்கு நடந்த நடையால் மிகுந்த களைப்பு உண்டாயிருந்தது. எனவே, சோற்றுப் பொதியை மரக்கிளை யொன்றிற் கட்டிவிட்டு, அதற்கு நேராகக் கீழே அவன் படுத்துக்கொண்டான். படுத்தவன் விரைவில் அயர்ந்து உறங்கிவிட்டான்.

வழக்கம்போல் உச்சிப்பொழுதானவுடன், எல்லாம் வல்ல சித்தரான அப் பெரியார் வெளியில் வந்தார்; மரத்தடியில் ஒருவன் படுத்திருப்பதைக் கண்டார். அவன் வாயிலிருந்து வெள்ளையாய் ஒரு சாண் நீண்டிருந்த ஒரு பொருள், கைகாட்டிமரத்துக் கையைப்போன்று, மேலே மரக்கிளையிற் கட்டியிருந்த சோற்று மூட்டையைச் சுட்டிக் காட்டுவதையும் அவர் கண்டார். கண்டவர்

அவன் வரவின் காரணத்தை, "ஞான திருஷ்டியால்," தெரிந்து, சாண் பல்லை நீக்கிச் சரியான பல் உண்டாகச் செய்தார். பின், அவர் சோற்று மூட்டையை அவிழ்த்



தெடுத்து அதிலுள்ள சோற்றைக் குளத்திற் கொட்டிவிட் டார்; சிறுகண்ணாடி யொன்றையும், மரச்சிமிழொன்றையும் அம்மூட்டைக்குள் வைத்துக் கட்டிவிட்டுக் குகைக்குட் போய் விட்டார்.

நெடுநேரம் வரை தூங்கிக்கிடந்த சாண்பல்லன் மெது வாக எழுந்து சாப்பிட உட்கார்ந்து மூட்டையை அவிழ்த் தான்; மூட்டையினுள்ளே சோற்றுக்கு மாறாகக் கண் ணாடியும் சிமிழும் இருக்கக் கண்டான். கண்டவன், "ஐயோ, பாவம்! யாரோ நம்மைவிடப் பசி மிகுதியாய் இருந்தவர் கள் சோற்றைச் சாப்பிட்டுவிட்டார்கள்போ லிருக்கிறது!

போனால் போகட்டும்," என்று சொல்லிவிட்டுக் கண்ணாடியை எடுத்து, அதில் தன் முகத்தைப் பார்த்தான். பார்த்ததுதான்; அவன் பசியெல்லாம் பறந்துவிட்டது. என்? சாண் பல்லைக் காணவில்லை. அஃதிருந்த விடத்திற் சரியான பல்லொன்று வளர்ந்திருந்தது. மகிழ்ச்சி மிக்கவனாய் அவன் சிமிழைத் திறந்தான். அழகான சிறுமி ஒருத்தி அச் சிமிழிலிருந்து வெளியே வந்து ஓரிலை போட்டு, இலைநிறையப் பலவகை உணவுகளைப் பரிமாறினாள். அதனைக் கண்ட அவன் தன் சாண்பல் போய்விட்டதுபோலக் கண்களும் போய் விட்டனவோ என்று முதலில் ஐயுற்றான். பின் ஒருவாறு தெளிந்து, "அம்மா! நீ யார்?" என்று அடக்கமாகக் கேட்டான்.

உடனே, அச்சிறுமி, "ஐயா! நான் அந்தச் சிமிழுக்குள் இருக்கும் அணங்குகள் பலரில் ஒருத்தி. சிமிழைத் திறக்கும் போதெல்லாம் திறக்குமிடத்தில் இருக்கும் எல்லோருக்கும் வயிறார உணவு படைத்துப் பரிமாற வேண்டியது எங்கள் வேலை. திறக்கும்போதே நீர் ஒருவர்தாம் இங்கு இருக்கிறீர் என்பது எங்களுக்குத் தெரியுமாதலால், நான் மட்டும் வந்தேன். ஆயிரம் பேரிருந்தால், அதற்கேற்ற தொகையினர் வருவோம். நூறாயிரம் பேர் இருந்தாலும் அதற்கேற்ற தொகையினராக நாங்கள் வந்து பரிமாறுவோம். எந்தச் சமயத்தில் எத்தனை பேரிருந்தாலும் ஒன்றுங் குறைவில்லாமல் நாங்கள் உணவுபடைத்தல் வேண்டுமென்பது இக் குகையிலுள்ள சித்தர் கட்டளை," என்று இனிய குரலிற் கூறி விட்டுச் சிமிழுக்குள் மறைந்தாள்.

பல்லன் அகமிக மகிழ்ந்து, விரைவில் இலையிலிருந்தவற்றை உண்டுவிட்டுச் சிமிழையும் கண்ணாடியையும் மூட்டை

யுள் வைத்துக் கட்டிக்கொண்டு புறப்பட்டான். புறப்பட்டவன் கொள்ளுத் தின்ன ஓடுங் குதிரையைப்போல விரைந்தோடி வீடுசேர்ந்தான்.

வீடு சேர்ந்ததும், அவன், நிகழ்ந்தவற்றை யெல்லாம் தன் மனைவியிடம் விரித்துக் கூறினான். அது கேட்ட அவள் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. மறுநாட் காலையில் இருவரும் நீராடிப் பட்டுடுத்திக்கொண்டு, வீடுவீடாய்ச் சென்று தங்கள் வீட்டுக்கு விருந்துக்கு வரும்படி அவ்வூராரை அழைத்தார்கள். அவ்வூர் மக்கள் சாண்பல் சரிப்பட்டதைக் கண்டு பல்லனை வியந்து பாராட்டினார்கள்; பின்னர் அழைப்பிற்கிணங்கி யாவரும் அவன் வீடு வந்துசேர்ந்தார்கள். முழம் பல்லனும் அவன் மனைவியுங்கூட அவ்விருந்துக்கு வியப்புடன் வந்திருந்தார்கள்.

பல்லன் அவர்களை யெல்லாம் வரிசையாக உட்கார வைத்துவிட்டு, ஓரறைக்குட் சென்றான்; சிமிழை எடுத்துச் சித்தரைத் துதித்துத் திறந்தான். உடனே மணவீட்டுக்கு வரிசை எடுத்து வருபவரைப்போல அழகிய பெண்கள் பலர் வெளியே வந்தார்கள்; அங்குள்ள எல்லோர்க்கும் அவர்கள் இலை போட்டுப் பலவகை உணவுகளைப் பரிமாறினார்கள். விருந்தினர் யாவரும் மிகுந்த வியப்புடன் வயிறார உண்டு, வாயாரப் பல்லனை வாழ்த்திச் சென்றார்கள்.

முழம்பல்லனுக்கு மட்டும் அன்றிரவு உறக்கம் பிடிக்கவில்லை. சாண்பல் போன வகையை அறிந்துகொண்டு தன் பல்லைச் சரிசெய்துகொள்வதுடன், முடியுமானால், பல்லனிடமுள்ள சிமிழையும் ஏன் கவர்ந்துகொள்ளக் கூடாதென்று அவன் கருதினான். எனவே, பொழுது புலர்ந்ததும், அவன் பல்லனிடம் வந்து, சாண்பல் போய்ச் சரியான பல் வந்தது

எப்படி என்று கேட்டான். சூதொன்றுமறியாத பல்லன் நிகழ்ந்த செய்திகளை நிகழ்ந்தவாறே சொன்னான். அதைக் கேட்ட முழம்பல்லன் ஆசை மிகுந்தவனாய், வீட்டுக்கு ஓடோடியும் வந்து, கட்டுச்சோறு கட்டிக்கொண்டு உடனே புறப்பட்டு மலைக்குகையை அடைந்தான்.

அடைந்தவன், சோற்றுமூட்டையை மரக்கிளையிற் கட்டிவிட்டு மரத்தடியிற் படுத்துக்கொண்டான். ஆனால், அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அவன் விழித்தபடியே படுத்திருந்தான். உச்சிப்பொழுதில் வழக்கம்போற் சித்தர் குகையை விட்டு வெளியே வந்தார். வரவே, முழம்பல்லன், “சாமி! சாமி! இதோ நான் படுத்திருக்கிறேன். என் முழம்பல்லை எடுத்து நேற்று வந்த பயலுக்கு ஒட்டவைத்து விடுங்கள். அவனிடமிருக்கும் சிமிழையும் எனக்கு வாங்கிக்கொடுங்கள்,” என்று பேராசையும், பொறாமையும் தோன்ற வேண்டிக்கொண்டான். சித்தர், “உனக்கு வேண்டியதைச் செய்துவிட்டேன்,” என்று கூறிக் குகைக்குள் சென்றுவிட்டார்.

முழம்பல்லன், “ஆகா! போய்விட்டாரே!” என்று வருந்திக் குகைக்குள் ஓடினான்; ஓடியும் சித்தரைக் கண்டிலன். வெளியில் வந்து, அவன் மரத்தின் கிளையிலிருந்த சோற்றுமூட்டையை அவிழ்த்துப் பிரித்தான். அதில், சோற்றுக்கு மாறாக ஒரு கண்ணாடியும் ஒரு சிமிழும் இருக்கக் கண்டான். கண்ணாடியில், அவன் தன் முகத்தைப் பார்த்தான். பார்த்தவன் திடுக்கிட்டுப் போனான். ஏன்? முன் ஒரு முழமிருந்த பல்லுடன் மற்றொரு சாண்பல் ஒன்று வந்து ஒட்டிக்கொண்டு இரண்டும் சேர்ந்து ஒன்றரை முழம் நீண்டிருந்தன. “கறுப்பன் பெரிய கறுப்பன் ஆன கதைபோல் ஆயிற்றே,” என்று அவன் மனம் வருந்தினான்; இருந்தாலும், எதிரே இருக்கிற

சிமிழைக் கண்டதும், ஒருவாறு மனந்தேறி விரைந்து வீடு திரும்பினான்.

அவன் மனைவி ஒன்றரைமுழப் பல்லைக் கண்டு, "இஃதென்ன வெட்கக் கேடு?" என்று வினவினாள். அவன் அவளுடைய வினாவைக் காதில் வாங்கிக்கொள்ளாமலே, "நாளைக்கு ஊரார் எல்லோர்க்கும் நம் வீட்டில் விருந்து என்று சொல்லிவா!" என்றான். அவளும் அப்படியே சென்று எல்லோர்க்கும் விருந்திற்குச் சொல்லி வந்தாள். மறுநாள் பகற்போதில் ஊரார் எல்லோரும் முழம்பல்லன் வீட்டில் வந்து வரிசையாய் உட்கார்ந்து, விருந்துச் சாப்பாட்டை எதிர்பார்த்தார்கள். முழம் பல்லன் தனியறை ஒன்றிற் சென்று சிமிழினைத் திறந்தான். அதற்குள்ளிருந்து அம்பட்டர் பலர் வெளிவந்து, அங்குள்ள எல்லோருடைய தலைகளையும் மொட்டையடித்து விட்டார்கள். முழம்பல்லனும், அவன் மனைவியுங்கூட மொட்டை யடிக்கப்பட்டார்கள். பேராசைக்கேற்ற பயனைப் பெற்றான் முழம்பல்லன்.

## பயிற்சி

1. ஏளனம், மோழை, கரண்டுதல், நடையாக நடத்தல், மோன நிலை, சித்தர், ஞான திருஷ்டி, ப்ரிமாறல், நிகழ்தல், பொழுது புலர்தல்.
2. கறுப்பன் பெரிய கறுப்பன் ஆன கதையைக் கேட்டறிக.
3. நடந்த நடை—இது போன்ற சில தொடர்கள் சொல்லு.
4. 'உனக்கு வேண்டியதைச் செய்துவிட்டேன்'—இதற்கு இரண்டு பொருள் கூறு.

## கசு. சமயத்தலைவர்கள்

**மகாவீரர் :**—இவர் சமணசமயத் தலைவராவர். இவர் வடநாட்டிலுள்ள குந்தபுரத்தில் பிறந்து வளர்ந்தவர். குழந்தைப் பருவத்தில் பெற்றோர்களால் இவருக்கு இடப்பட்ட பெயர் **வர்த்தமானர்** என்பதாகும். இவருடைய தந்தையார் பெயர் சித்தார்த்தர். அவர் இலச்சவி என்ற அரசமரபைச் சேர்ந்த பெருஞ் செல்வர்; ஞாத்பிரிகர் என்ற கூட்டத்தினருக்குத் தலைவர். வர்த்தமானருடைய தாய் திரிசலா தேவி. வர்த்தமானர் வயது வந்தபின், ஓர் அழகிய பெண்ணை மணந்து வாழ்ந்துவந்தார். அவருக்குத் தம் முப்பதாவது வயதில் உலக வாழ்வில் வெறுப்புத் தோன்றி வீட்டைவிட்டு வெளியேறினர். வெளியேறியவர் ஆராய்ச்சிகள் பல செய்து சமயக்கொள்கைகள் பலவற்றைக் கண்டுபிடித்து உலக மக்களுக்கு எடுத்தோதினர். அக் கொள்கைகளைப் பின்பற்றியவர்களே **சமணர்** அல்லது சைனர் எனப்படுவார்கள். பின்பு, அவருக்கு **மகாவீரர்** என்ற பட்டப்பெயர் உண்டாயது. சைனர்கள் வட இந்தியாவில் பம்பாய், குஜரத் முதலிய இடங்களில் வசிக்கிறார்கள்.



மகாவீரர்

உலகம் ஒருவரால் படைக்கப்பெறவில்லை; பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உண்டாயது; ஒருவருக்குந் தீங்கு செய்யக் கூடாது; பொய்யுரைத்தல் கூடாது; பிறர் பொருளை வஞ்சித்துத் தனக்கெனக் கொள்ளக்கூடாது; அகத்தூய்மையும் புறத்தூய்மையும் வேண்டும்; தனக்கென வாழாது

பிறர்க்கென வாழல்வேண்டும் என்ற இவையும் இவைபோன்ற பிறவும் இவருடைய கொள்கைகள்.

**புத்தர்**:—இவர் புத்த சமயத் தலைவராவர். இவர் வடநாட்டில் **கபிலவஸ்து** என்னும் நகரிற் பிறந்து வளர்ந்தவர். இவருடைய தந்தை சுத்தோதனன். இவன் உத்தரகோசலமென்ற நேபாள நாட்டின் அரசன்; கோதமர் மரபினுதித்தவன். புத்தருடைய தாயார் மாயாதேவி. புத்தருக்குக் குழந்தைப் பருவத்தில் வைக்கப்பட்ட பெயர் **சித்தார்த்தர்**. இவருடைய காலம் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்னாகும். மகாவீரரும் இவரும் முன்பின்னாக அமைந்த ஒரு காலத்தவர் என்பர். சித்தார்த்தருக்கு வயது வந்தபின் மணமுடிக்கப்பட்டது. இவருடைய மனைவி பெயர் **யசோதரை**. இவருக்கு ஓர் ஆண் குழந்தையும் உண்டு. இவர் உலகத்துன்பங் கண்டு தன் மனைவியினையும், மகனையும், வீடுவாசலையுந் துறந்து காட்டிற்குச் சென்றார்.



புத்தர்

புத்தர் உயிர்களிடத்து அன்பு மிக்கவர். ஆடுகளும், குதிரைகளும், பசுக்களும் வேள்விகளில் பலியிடப்படுவதைத் தம் அறிவுரைகளால் தடுத்தார். எவ்வுயிரும் தன்னுயிர் போல் எண்ணி யிரங்கும் கருணையே இவர் கொள்கைகளில் முதன்மையானதாகும். இவர் கொள்கைகளை மேற்கொண்டவர்கள் **புத்தர்கள்** எனப்படுவார்கள். சிங்களவர்களும், பர்மியரும், சீனர்களும், ஜப்பானியர்களும் இவர் கொள்கைகளைப் பெரும்பான்மையோராகப் பின்பற்றுகிறார்கள்.

இயேசுநாதர்:—இவர் கிறித்தவ சமயத் தலைவராவர். இவர் பாலஸ்தீன் என்ற நாட்டிற் பிறந்தவர்; யூதர் வகுப்பைச் சேர்ந்தவர். இவர் தந்தை பெயர் யோசேப்பு; தாய் பெயர் மேரியம்மை. இவர் எளிய மக்களுக்கு இனிய நல்லுபதேசங்கள் பல செய்தார். அற்புதங்கள் பல இவரால் செய்யப்பட்டன. ஆனால், அந்நாட்டரசன் இவருக்கு எதிரியாய் நின்று இவரைச் சிலுவையில் அறைந்து கொல்வித்தான். இவர் இறக்குங்கால், குற்றம் செய்த அரசன் முதலியோரை மன்னிக்கும்படி கடவுளை வேண்டிக் கொண்டார். இவர் இறந்த மூன்றும் நாள் கல்லறையிலிருந்து வெளிவந்து, தம்மைப் பின்பற்றிய மாணவர்களுக்குத் தம் கொள்கையைப் பரப்பும்படி கட்டளையிட்டுப் பரலோகம் சென்றார் என்று சொல்லப்படுகிறது.



இயேசுநாதர்

இவருடைய மாணவர்கள் இவர்தங் கொள்கைகளை நாடெங்கும் பரப்பினார்கள். இவருடைய கொள்கைகளைப் பின்பற்றியோர் கிறித்தவர் எனப்படுவர். இவர் வகுத்தமைத்த கிறித்து சமயம் இப்பொழுது உலகெல்லாம் பரவி நிற்கிறது. இவர் காலம் இற்றைக்கு ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தேழு ஆண்டுகட்கு முன். இவர் கொள்கை கடவுள் ஒருவர் என்பது ; அக் கடவுள் பரமண்டலத்திலுள்ளவராய் எல்லோருக்கும் பிதா ஆவர் ; இவர் அவருடைய முதற் பிள்ளை ; இவர் மூலமாகவே அவரை அடைதல்வேண்டும்.

முகம்மது நபி:—இவர் இஸ்லாமிய சமயத் தலைவர் ; அரேபிய நாட்டில் மக்காநகரிற் பிறந்துவளர்ந்தவர். இவர்தம்

தந்தையாரின் பெயர் அப்துல்லா; தாயார் அமீனு. இவர் கி. பி. 576-ஆம் ஆண்டிற் பிறந்தவர். இவர் இளமையிலேயே நற்குணங்கள் பல வாய்ந்தவராய் இருந்தார். இவருடைய மனைவியார் மக்காவிலிருந்த பெருஞ் செல்வியான கதீஜா என்பவர். முகம்மது தமது நாற்பதாம் வயதில் ஆண்டவனது திருவருள் கைவரப் பெற்றார்; கடவுட் பற்றில் திளைத்திருந்த இவர் ஆழ்ந்து ஆலோசித்து, உயரிய கொள்கைகளைக்கொண்ட இஸ்லாமிய மதத்தை நிறுவினார். இவர் தம் அறுபத்துமூன்றாம் வயதிற் காலமானார்.

கடவுள் ஒருவரே; அவரை நாளொன்றிற்கு ஐந்து முறை தொழுதல் வேண்டும்; மதுவை அருந்துதல் கூடாது; ஆண்டிற் கொருமுறை ஒரு திங்கள் முழுவதும் பகலில் உண்ணு நோன்பு காத்தல் வேண்டும். மக்கட் பிறப்பில் உயர்வுதாழ்வு பாராட்டுதலை அறவே ஒழித்தல் வேண்டும் என்பன இவருடைய கொள்கைகளிற் சிறந்தனவாம்.

சங்கராச்சாரியார்:—இவர் அத்துவித சமயத் தலைவர். இவர் கேரளநாட்டுத் தென்கன்னடத்தைச் சேர்ந்த காலடி என்னும் ஊரிற் பிறந்தவர். இவருடைய தந்தையார் பெயர் சிவகுரு என்பது. இவர் தாயார் ஆரியாம்பாள். இவர் இளமையிலேயே துறவுநிலை பூண்டனர். இவருடைய ஞானசிரியர் கோவிந்த யோகியார். இவர் வடநாடு சென்று வியாசர் அருளால் பிரம சூத்திரத்துக்குப் பொருளாக அத்துவிதமதத்தைப் பரப்பினார்.



சங்கராச்சாரியார்

இவருடைய கொள்கை, கடவுள் ஒன்றே உண்மைப் பொருள்; உயிர், உலகம் என்ற மற்றைய வெல்லாம் உண்மையானவையல்ல; உயிர்கள் மூலப்பொருளான கடவுளிடமிருந்து பிரிந்து உலக இன்பதுன்பங்களில் உழன்று இறுதியில் மூலப்பொருளையே சென்றடைகின்றன; அவ்வாறு மீண்டுஞ் சேர்ந்து ஒன்றுதலே வீடு என்பதாம்.

**இராமாநுஜர்:**—இவர் வைணவ சமயத்தலைவர். இவர் ஸ்ரீபெரும்பூதூர் என்ற தொண்டை நாட்டுப் பேரூரிற் பிறந்து வளர்ந்தவர். இவர் காலம் கி. பி. பதினோராம் நூற்றாண்டு. இவர் தந்தையார் கேசவ சோமயாஜி; தாயார் காந்திமதியம்மை. இவர் இளமையிலேயே அறிவுக்களஞ்சியமாய் விளங்கினார். இவர் மனைவி தங்கம்மாள். இவருடைய ஞானாசிரியர் யாதவப் பிரகாசர். இவர் வைணவ சமயத்தைத் தமிழ்நாடெங்கும் சீர்திருத்தமான முறையிற் பரப்பினார். பல வகுப்பாரும் சாதி வேற்றுமையின்றி இவர் காலத்தே அச்சமயத்திற் சேர்வாராயினர்.



இராமாநுஜர்

இவர் கொள்கை, கடவுளும் உயிர்களும் வெவ்வேறாகக் காணப்படினும் கடவுளது வடிவத்தின் பகுதியே உயிர்களும் உலகமும் என்பதாம்.

**மெய்கண்டார்:**—இவர் சைவசமயத் தலைவர். இவர் ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகட்கு முன் இருந்தவராவர். இவர் திருமுனைப்பாடி நாட்டில், திருப்பெண்ணாகடம் என்னும் ஊரிலே பிறந்து வளர்ந்தவர். இவர் தந்தையார் அச்சுத

களப்பாளர். சுவேதவனப் பெருமாள் என்பது மெய்கண்டார்க்குப் பெற்றோரால் குழந்தைப் பருவத்தே யிடப்பட்ட பெயராகும். இவர் இளமையிலேயே அறிவுச் செல்வராய் விளங்கினார். இவருடைய ஞானாசிரியர் பரஞ்சோதி முனிவர். இவர் சைவசமயக் கருத்துக்களை விளக்கிச் சிவஞானபோத மென்ற அரிய சமய நூலொன்று செய்துள்ளார்.



மெய்கண்டார்

இவருடைய கொள்கை கடவுள், உயிர், உலகம் என்ற மூன்றும் உண்மையான பொருள்கள் ; உயிர்கள் தாம் புரியும் நன்மை தீமைகளுக்கு ஏற்ப உலகத்தில் இன்ப துன்பங்களை நுகர்கின்றன ; இறுதியில் கடவுளருளால் அவை கடவுளிடஞ் சேர்கின்றன என்பதாம்.

## பயிற்சி

1. மரபு, ஆராய்ச்சி, கொள்கை, துறத்தல், வேள்வி, பலி, அற்புதம், சிலுவை, கல்லறை, பூணுதல், மூலப்பொருள், அறிவுச் செல்வர், நுகர்தல்.
2. வெவ்வேறு சமய நூல்கள் சில சொல்லு.
3. அடைமொழி கொண்ட பெயர்ச்சொற்கள் காண்க.
4. இங்கே காணும் சமயங்களின் கொள்கைகளைப் பற்றி உனக்குத் தெரிந்தவரையிற் சொல்லு.

## கஎ. திருக்குறள்

### (ஓர் உரையாடல்)

**மகன் :**—அப்பா, திருக்குறள் தமிழ்மொழிக்குத் தனிச் சிறப்பினைத் தரும் ஓர் உயர்ந்த நூல் என்று பலர் சொல்லுகிறார்களே, அஃதெப்படி?

**தந்தை :**—ஆமாம், அஃதோர் ஒப்புயர்வற்ற நூல். அந்த நூல் ஒன்றைப் படித்தாலே மற்றைய தமிழ்நூல்களெல்லாம் படித்ததுபோலாகும். எல்லாப் பொருளும் அதன் கண் உள; அதன்கண் இல்லாத பொருள் ஒன்று மில்லை.

**மகன் :**—அப்படியா! திருக்குறள் படித்துவிட்டால் ஒருவன் தமிழ்ப்புலவனாய்விடலாமோ?

**தந்தை :**—அதற்கோர் ஐயமுமின்று: ஆயிரத்து முன்னூற்று முப்பது குறட்பாக்களையும் ஆராய்ந்தறிந்த பின் வேறு நூல்கள் படிக்க வேண்டியதில்லை; அவ்வாறு செய்கிறவன் புலவனேயாவன் என்று அக்காலத்துப் புலவரொருவரே சொல்லியிருக்கின்றார்.

**மகன் :**—ஆயிரத்து முன்னூற்று முப்பது பாக்களா! சிறிது சுருக்கமாய்ப் பாடலாகாதோ?

**தந்தை :**—எல்லாப் பொருள்களையும் முற்ற வெடுத்து மொழிந்திருப்பதை நோக்கின் திருக்குறள் அவ்வளவு பெரிதன்று. அந்நூல் குறள்வெண்பா என்னும் இரண்டு சிறிய அடிகளைக் கொண்ட பாக்களினாலேயே ஆக்கப்பட்டிருக்கின்றது. சிலவாகிய சொற்களால் பலவாகிய பொருள்களை அமைத்துக் காட்டியிருக்கின்றார்

அந்நூல் செய்த **திருவள்ளுவர்.** ஆதலால் எல்லாப் பொருள்களையும் தெளிவாகத் தெரிவித்திருக்கும் சுருக்கமான நூலேயாகும் அது.




**மகன்** :—அப்பா! அதில் பெரியவர்களுக்கு வேண்டிய பொருள்களே கூறப்பட்டிருக்கின்றனவாமே! அதன்கண் என்போன்ற சிறுவர்கட்கு ஒன்றுஞ் சொல்லப் படவில்லையாமே! அப்படித்தானா?

**தந்தை** :—பிள்ளாய்! அப்படிச் சொல்லுவது தவறு. உன் போன்ற சிறுவர்களுக்கும், மற்றும் பல துறைகளில் இறங்கி வேலை செய்பவர்களுக்கும், தோட்டிமுதல் தொண்டைமான்வரைக்குமுள்ள யாவருக்கும் அவரவர் களுக்கு வேண்டிய ஒழுக்கமுறைகள் ஒன்றுவிடாமற்

சொல்லப்பட் டிருக்கின்றன. குறள்நூலைப் பயிலும் போது அவையெல்லாம் உனக்கு நன்கு தெரியவரும்.

மகன் :—திருக்குறள் எம்மதமும் சம்மதமெனக் கொள்ளும் நூல் என்கிறார்களே! அதன் கருத்தென்ன?

தந்தை :—திருக்குறள் கடவுள்வாழ்த்தில் கடவுளைப்பற்றிப் பொதுவாகவே வாழ்த்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. சிவன், விட்டுணு, அருகன் முதலிய கடவுளர்களின் பெயர்கள் அவ்வதிகாரத்திற் காணப்படவில்லை. மேலும், அந்நூலின்கண் எச்சமயத்தாரும் மெச்சி யேற்றுக் கொள்ளத்தக்க பொருள்களே கூறப்பட்டிருக்கின்றன.

மகன் :—அந்நூலின்கண் வள்ளுவர் எச் சமயத்தையும் மறுத்துக் கூறவில்லையோ?

தந்தை :—இல்லை, இல்லை! வள்ளுவர் தெளிந்த அறிவுடைப் பெரியார். அவர் சாதி சமயச் சண்டைகளை அறவே வெறுத்தவர். அவர் அந்நூலின்கண் மக்களுக்குப் பொது வாக வேண்டிய நல்வழிகளையே விரித்துக் கூறியுள்ளார். அந்நூலின் ஒப்புயர்வற்ற தன்மையைக் கண்டன்றோ மேனாட்டார்களிற் சிறந்த அறிஞர்கள் பலர் அதனைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள்!

மகன் :—என்ன, அப்பா! நமது திருக்குறளை மேனாட்டார் எவ்வாறு போற்றிப் புகழ்ந்தனர்? அவர்கள் ஒரு தமிழ்ப் பெருநூலின் கருத்துக்களை எவ்வாறு ஆராய்ந் தறிந்தனர்?

தந்தை :—மேனாட்டாரிற் சிலர் நமதுநாட்டுக்கு வந்து நந்தந் தமிழைக் கசடறக் கற்றுத் தேர்ச்சியடைந்து இத்திருக் குறளையே யல்லாமல் வேறு சில நூல்களையும் மேனாட்டு மொழிகளிற் பெயர்த்தெழுதினர். அவற்றை மேனாட்

டறிஞர்களிற் பலர் படித்துப் பார்த்து அந்நூல்களின் கருத்துக்களை யறிந்துகொண்டனர்.

**மகன்** :—திருக்குறளைப் போன்ற நூல்கள் வேறெவையு மில்லையோ?

**தந்தை** :—மக்கள் ஒழுகலாறுகளை அவ்வளவு திட்டப்படுத்தி, பசுமரத்தாணிபோன்று மக்கள் உள்ளத்தில் அவற்றைப் பதியச் செய்யும் நூல் வேறொன்று நம் தமிழ் மொழியிலுமில்லை, வேறெம் மொழியிலு மில்லையென்று எண்ணக் கிடக்கிறது. நமது திருக்குறளுக்குள்ள தனிப் பெருமைகளில் இஃது ஒன்று.

**மகன்** :—ஓகோ! இன்னும் எவ்வெவ்வாறு நமது திருக்குறள் பெருமை யடைந்திருக்கின்றது?

**தந்தை** :—திருக்குறளிற் சொல்லாத பொருளில்லை யென்றும் அஃது ஒரு பொதுநூ லென்றும் முன்னமே சொல்லி யிருக்கின்றேன். திருக்குறள் பெருமை யடைந்திருப்பதற்கு அதற்கென ஏற்பட்டிருக்கும் ஏனைய காரணங் களையும் சொல்லுகின்றேன் கேள் :

முதலாவது—நீதி நூல்களுக்கெல்லாம் அது முந்திய தொன்றாகும். அத்தகைய நூல் அதற்கு முன்னும் இல்லை, பின்னும் இல்லை.

**மகன்** :—என் அப்பா! வள்ளுவரைப் போன்ற ஒரு பெரியார் இனிமேல் பிறக்கமாட்டாரோ?

**தந்தை** :—பிறக்கலாம்; ஆனால் அவர் சொன்னதைச் சொல்லிக் கொண்டிருப்பாரோ! வள்ளுவர்தான் முக்காலத்துமுள்ள பொருள்களைத் திரட்டிச் சேர்த்து வைத்துவிட்டாரே!

**மகன்** :—சரி, இரண்டாவது என்ன?

**தந்தை** :—இரண்டாவது—திருக்குறள் மிகப்பழையகாலத்து நூல். இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் நூல்களில் தொல்காப்பியம் முதல்நூல்; திருக்குறள் இரண்டாவதுநூல்; ஏனைய நூல்களெல்லாம் இவைகட்குப் பிற்பட்டவையே. திருக்குறள் எழுதி இரண்டாயிரமாண்டு ஆகின்றது.

**மகன்** :—சரி, மூன்றாவது என்ன?

**தந்தை** :—மூன்றாவது-ஐம்பெருங்காவியங்கள் எழுதின சங்கநூற் புலவர்களும், அவைகட்கு விரிவுரைகள் வகுத்த ஆசிரியர்களும், கம்பன், சேக்கிழார், வில்லி உள்ளிட்ட பெரும் புலவர்களும் திருக்குறட் பாக்களையும், கருத்துக்களையும் எடுத்தாண்டுகொண் டிருக்கின்றது மன்றி, வள்ளுவரையும் பற்பலவாறு புகழ்ந்து கொண்டாடியு மிருக்கின்றனர்.

**மகன்** :—சரி, நான்காவது?

**தந்தை** :—நான்காவது—உலகிற் பிறந்தமக்கள் அறத்தைக் கடைப்பிடித்து, நல்வழியிற் பொருளை ஈட்டி, இவ்விரண்டினாலு மாகிய இன்பத்தை இவ்வுலகின்கண் அடைந்து,முடிவு என்பதில்லாத வீட்டினைப் பெறவேண்டும். இதற்கேற்ற வழிகளையெல்லாந் திட்டப்படுத்தித் திருக்குறளில் காட்டியுள்ளார் நந் **திருவ**ள்ளுவனார்.

**மகன்** :—திருக்குறள் வீட்டுக்கே வழிகாட்டியாய் விட்டபோது, இன்னும் என்ன பெருமை அதற்கு வேண்டும்! இன்னும் ஏதாவதுண்டோ, அப்பா?

**தந்தை** :—இன்னும் எவ்வளவோ உண்டு! அவற்றையெல்லாம் நீ அந்நூலைப் படித்துப் படித்து ஆராய்ச்சி செய்யும்போது அறிந்துகொள்வாய். ஆனால் எல்லாவற்றி

லும் சிறந்ததாகிய ஒன்றினை யுனக்கு எடுத்துக் காட்ட ஆவலுறுகின்றேன்.

மகன் :—அஃதென்ன சொல்லுங்கள், அப்பா !

தந்தை :—திருக்குறள் தோன்றியதும் மக்கள் எல்லோரும் அதனைத் தமிழ்மறை யென்றும், பொதுமறை யென்றும் போற்றினர். அதனை எவரும் படிக்கலாம்; எவருக்கும் படிப்பிக்கலாம். அதனைப் படிக்கப் படிக்க உளத்திற் கல்விச் சுவை யூறும் ; அதனைச் சொல்லச் சொல்ல ஆற்றல் வீறும். திருக்குறள் கற்றால் உலகத்தை யறியலாம்; வாழ்க்கையைச் செவ்வையுற நடத்தலாம்.

மகன் :—அப்பா ! இப்படிப்பட்ட தனிச்சிறப்பு வாய்ந்த நூலினை எழுதித்தந்த திருவள்ளுவர் எத்தகைய பேரறிவாளரோ!

தந்தை :—பெரியவர் என்றால் அவர்தான் பெரியவர்! அறிவாளர் என்றால் அவர்தான் அறிவாளர் ! புலவர் என்றால் அவர்தான் புலவர். அவரே தெய்வப்புலவர்! அவரே பெருநாவலர் ! அவரே முதற்பாவலர் !

பயிற்சி

1. தனிச்சிறப்பு, ஒப்புயர்வு, தொண்டைமான், போற்றிப் புகழ்தல், ஒழுகலாறு, ஏற்றம், பேரறிவாளர், பெருநாவலர், முதற்பாவலர்.
2. திருக்குறள் என்னும் நூலில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றது ?
3. மூவிடப் பெயர்கட்கும் உதாரணங்கள் காண்க.
4. திருக்குறளின் தனிச்சிறப்புக்கள் எவை ?

## ௧௮. திருவள்ளுவ மாலை

அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார். 1.

பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச்—சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால். 2.

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம். 3.

ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு. 4.

எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பால்
இல்லாத எப்பொருளு மில்லையால்—சொல்லால்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை. 5.

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய வின்குறள்வெண் பா. 6.

## பயிற்சி

1. அறம் பொரு ளின்பம் வீடு, திறம், பார், வல்லார், பாயிரம், வீற்றிருத்தல், உள்ளுதல், மாண்பு, சுரத்தல், இருவினை, நாப்புலமை, பன்னுதல்.
2. இம் மாலையிலுள்ள ஒவ்வொரு பாட்டும் எவ்வெவர் பாடியது?
3. முதல் நான்கு வேற்றுமைகட்கு உதாரணங்கள் காண்க.
4. இதில் திருவள்ளுவரைப் பற்றியும் திருக்குறளைப் பற்றியும் என்னென்ன சொல்லப்பட்டிருக்கின்றன?

---

## கசு. சிவப்பிரகாசர்

ஏறக்குறைய இருநூற்றைம்ப தாண்டுகட்கு முன் (அஃதாவது கி. பி. பதினேழாம் நூற்றாண்டில்) காஞ்சிபுரத்தில் குமாரசுவாமி தேசிகர் என்ற மூதறிஞ ரொருவ ரிருந்தார். அவர் தொண்டை மண்டல வேளாளர் வகுப்பினருக்குச் சமய குருவாக விளங்கியவர். திருவண்ணாமலையில் ஆண்டுதோறுங் கார்த்திகைத் திங்களில் நடைபெறும் "கார்த்திகை விளக்கீடு" காண்பதற்காக அவர் ஒருமுறை அவ்வூருக்குப் புறப்பட்டார். புறப்பட்டுச் செல்லும் வழியில், நாடோறும் இயற்றிவரும் சிவபூசையைச் செய்து முடிக்க அவர் நந்தவனமொன்றிற் றங்கிப் பூசையை முடித்தபின், திருவண்ணாமலையை மறுநாட் காலை சென்றடைந்தார். ஆங்கடைந்ததும், ஈசான்ய தீர்த்தத்திற்குச் சென்று நீராடி, பூசை செய்யப் புகுந்த அவர் தம் பூசைப்பெட்டியைக் காணவில்லை. வேலையாட்களை எங்கென்று அவர் வினவவே, அவர்கள் முதனாள் தங்கிப் பூசை செய்த நந்தவனத்தில் வைத்து மறந்து வந்திருக்கலாமெனக் கூறி, விரைந்து சென்று அதனை எடுத்து வந்தார்கள். அவர்கள் வருகிறவரையில் உணவு கொள்

ளாமலிருந்த தேசிகர், வந்தபின் தம் பூசையை முடித்துக் கொண்டு அதன் பிறகுதான் உணவருந்தினர். ஆயினும் அன்றுமுதல் ஒரு சிறு பேழையில் சிவலிங்கத்தை வைத்து மூடி அதனை உடலிலேயே தரித்துக்கொள்வா ராயினர். இவ்வாறு தரித்துக் கொண்டமையால் அவரை மக்கள் வீரசைவரென்றும், "இலிங்கங்கட்டி" என்றும் அழைப்பாராயினர். தொண்டை மண்டல வேளாளர் பலர் அவரைப் பின்பற்றி வீரசைவர்களானார்கள். இதுவே தென்னாட்டில் வீரசைவ சமயம் கால்கொண்ட வரலாறாகும்.

குமாரசாமி தேசிகருக்கு ஆண்பிள்ளைகள் மூவரும் மகளொருத்தியும் பிறந்தார்கள். அவர்களுக்கு முறையே **சிவப்பிரகாசர்**, வேலாயுதர், கருணைப்பிரகாசர், ஞானம்பிகை என்று பெயரிடப்பட்டது. அவர்களது இளமைப் பருவத்திலேயே குமாரசுவாமி தேசிகர் காலமாய்விட்டார். பிறகு மூத்தவராகிய சிவப்பிரகாசர் தம்முடன்பிறந்த மூவரையும் அழைத்துக்கொண்டு, காஞ்சியை அகன்று, திருவண்ணாமலை சேர்ந்து, அங்கிருந்த தம் தந்தையாரின் குருவின்பக்கல் அடைந்தார். அடைந்து, அக்குருவினிடமே அவர் கல்வி பயின்றுவரலானார்.

ஒருவாறு கல்விப் பயிற்சி முடிந்தவுடன், தென்னாடு சென்று பேரிலக்கண இலக்கியங்களைக் கற்கவேண்டுமென்ற அவா சிவப்பிரகாசருக்கு உண்டாயிற்று. உண்டாகவே குருவினிடம் விடைபெற்றுத் தம் உடன்பிறந்தார்களுடன் துறைமங்கலம் என்ற தென்திருப்பதி யொன்றை யடைந்தார். ஆங்குச் சிவபக்தியிற் சிறந்து விளங்கிய அண்ணாமலை ரெட்டியார் என்ற செல்வர் அவர்களை அன்புடன் வரவேற்று ஆதரித்தார்; அன்றியும் மடமொன்று கட்டுவித்து அவர்களை

அதிலேயே தங்கியிருக்குமாறுஞ் செய்தார். உளம் மிக உவந்த சிவப்பிரகாசர் அவ்விடமே சிலகாலந் தங்கி ரெட்டியாருக்கு நன்னெறி புகட்டிக் காலங் கழித்துவந்தார். அதனாலேயே அவர் **துறைமங்கலம் சிவப்பிரகாசர்** என்று அழைக்கப் படுவாரானார்.

ஏறக்குறைய இரண்டாண்டுகள்வரை அவ்விடம் தங்கியிருந்த அவர், அதன் பின்னர், தம் உடன்பிறந்தாரோடு திருநெல்வேலிக்குச் சென்றார். அவர் சென்ற காலையில், தாமிரபர்ணி யாற்றங்கரையிலுள்ள சிந்துபூந்துறையில் தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த வெள்ளியம்பலத் தம்பிரான் சுவாமிகள் எழுந்தருளி யிருந்தார். இதையறிந்த சிவப்பிரகாசர் உடனே சிந்துபூந்துறை சேர்ந்து அடிகளைக் கண்டு வணங்கித் தமக்குத் தமிழ்க்கல்வி யூட்டுமாறு இறைஞ்சினர். சிவப்பிரகாசருடைய ஆற்றலை ஒருவாறு ஆராய்ந்தறிந்த தம்பிரான் சுவாமிகள் மிக்க மகிழ்ச்சியுடன் ஐந்திலக்கணங்களையும் அவருக்கும் அவருடைய உடன்பிறந்தார்கட்கும் இரண்டு வாரங்களிற் கற்பித்தார். கல்வி முடிந்ததும் சிவப்பிரகாசர் தமக்கு வழிச்செலவிற்கென்று அண்ணாமலை ரெட்டியார் கொடுத்திருந்த முந்நூறு பொன்னையும் தம்பிரான் திருவடிகளில் காணிக்கையாக வைத்து வணங்கினார். தம்பிரானோ அதனை ஏற்றுக்கொள்ள மறுத்து, "திருச்செந்தூரில் 'கடலே யனையம்யாங் கல்வியா லென்னும்' செருக்கி லாழ்ந்து கிடக்கும் புன்புலவ னொருவனுளன்; அவனை வாதிட்டு வென்று வருதி" என்று கட்டளையிட்டார். இட்ட கட்டளைப்படியே சிவப்பிரகாசர் திருச்செந்தூர் சென்று "நிரோட்டக யமக அந்தாதி" பாடி அப் புன்புலவரை வென்றார்; வென்று, அவரை அடிமைப்படுத்தி யழைத்து வந்து தம் குருநாதனை அடிபணியச் செய்தார்.

அதன்பின்னர், தம்பிரான் சுவாமிகளிடம் பிரியாவிடை பெற்றுக்கொண்டு சிவப்பிரகாசர் தம் உடன்பிறந்தார் சூழ முன்போலவே துறைமங்கலம் சென்று மடத்தில் தங்கினர். தங்கியவர், தாங்கற்ற கல்வி உலகோர்க்குப் பயன்படுமாறு திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கைக் கோவை முதலிய பல நூல்களை இயற்றியருளினர். சில நாட்களுக்குப்பின், அப் பெரியார், இல்லற வாழ்க்கையை வெறுத்தவராகித் துறவு பூண்டார். பூண்டாராயினும் அவர் "பிறர்க் குறூஉம் வெங்குறை" தீர்க்கும் விழுமியோராதலின் தம் உடன் பிறந்தார்களுக்கெல்லாம் அண்ணமலை ரெட்டியாரின் உதவி கொண்டு முறையே மணமுடித்து வைத்தனர். அவர் தங்கை யாகிய ஞானம்பிகையைப் பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் என்னும் சைவப் பெரியாருக்கு மணமுடித்து வைத்ததுங் குறிப்பிடத் தக்கதாகும்.

மாசற்ற நெஞ்சுடையராய் விளங்கிய சிவப்பிரகாசர் பொம்மபுரம் சிவஞான பாலைய சுவாமிகளைக் கண்டு வணங்கி ஞானக்கல்வி பெற்றுவரலானர். அவ்வாறு பொம்மபுரத்தில் ஞானம்பெறுவான் தங்கியிருந்த காலையில், ஒருநாள் கடற் கரைக்குச் சென்றிருந்த அவர், மணற்பரப்பில் நன்னெறி என்று நீதிநூலாக இப்பொழுது போற்றப்படும் நாற்பது வெண்பாக்களையும் எழுதிவைத்தார். அப்பாட்டுக்களை அவர் இளவலான கருணைப்பிரகாசர் ஏட்டிலெழுதிச் சுவடியாக்கினர்.

பின்னர், சிவப்பிரகாசர் பல திருப்பதிகளுக்குச் சென்று வணங்கி வரும்போது வீரமாமுனிவர் என்ற சிறப்புப்பெயர் பெற்ற பெஸ்கி என்ற கிறித்தவப் பாதிரியாரைக் கண்டு அவரோடு வாதிட்டு, "ஏசுமத நிராகரணம்" என்ற நூலைச் செய்தருளினர். இவ்வாறு கல்வியைப் பெருக்கும் நல்லறமே

இல்லறமாகக் கொண்டு திகழ்ந்துவந்த இச் சான்றோர் தம் முப்பத்திரண்டாம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## பயிற்சி

1. நூற்றாண்டு, தேசிகர், மூதறிஞர், சமயம், ஆதீனம், தீர்த்தம், பேழை, காலமாதல், இலக்கியம், அவா, திருப்பதி, வரவேற்றல், பக்கல், தம்பிரான், அடிகள், இறைஞ்சுதல், கால்கொள்ளல், காணிக்கை, விழுமியோர், இளவல், நீத்தல்.
2. நன்னெறி—இதைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?
3. வினைச்சொற்கள் பன்னிரண்டு காண்க.
4. சிவப்பிரகாசரின் நற்பண்புகள் எவை?

---

# உ0. நீர்மேற்செலவு

நீரைக் கண்டாலே அச்சமுறுவர் மக்களில் ஒரு சிலர்; சிறுகுளங் குட்டைகளில் இறங்குவதற்கும் நடுங்குவர் ஒரு சிலர்; பெரிய ஏரிகளிலும் யாறுகளிலும் இறங்க அஞ்சுபவரோ மிகப் பலர். இவர்களெல்லாம் பெரிய நீர்நிலையாகிய கடலினைக் கண்டால் யாது செய்வார்களோ? இஃதொருபுறமிருக்க, கடலாகிய பெரிய நீர்நிலையில் ஆயிரக்கணக்கான மக்களையும் மூட்டைகளையும் தாங்கி மிதந்து செல்லுங் கப்பலொன்றைக் காணின் அவர்களெய்தும் வியப்பிற்களவுமுண்டோ!

முற்காலத்தில், மக்களில் கூர்ந்த அறிவுடைய ஒரு சிலர் ஆழமுள்ள ஏரி, குளம், ஆறு முதலியவற்றைக் கடத்தல் எவ்வாறு என்று எண்ணிப் பார்த்திருத்தல் வேண்டும். நீரில் சில பொருள்கள் மிதப்பதுஞ் சில அமிழ்வதும் அவர்கள் கருத்திற்பட்டிருக்கும்; அதனால், நீரைவிட இலேசான

பொருள்கள் மிதக்குமென்றும், பளுவான பொருள்கள் அமிழும் என்றும் அவர்கள் ஊகித்திருக்கலாம். அன்றியும் நாய், மாடு, குதிரை முதலிய விலங்குகள் நீரில் அமிழாது நீந்துவதெப்படி என்றும் அவர்கள் சிந்தித்திருக்கலாம். அதனால், அவை மூச்சை யடக்குவதால் தம் உடல்எடையைக் குறைத்து, நீரிலும் இலேசான பொருள்களாக மாறி, மிதந்து நீந்துகின்றன என்று ஊகித்துணர்ந்திருப்பார்கள்; உடனரவே



நீந்தல்

தாமும் அவ்வாறு அடுத்து முயன்றிருத்தல் கூடும். மக்கள் முதலில் நீரில் நீந்திச் செல்லும் பழக்கம் இவ்வாறு இயற்கையாயுண்டாயிருத்தல் வேண்டும் என்று எளிதில் ஊகிக்கலாம்.

பின்னர், இவ்வாறு நீந்துவதால் சிறிது தொலை மட்டுமே ஒரு நீர்நிலையைக் கடக்கமுடியுமென்பது தெரிந்தவுடன் நெடுந்தொலை நீந்தவோ அன்றி அக்கரை சேரவோ யாது வழி என்று அவர்கள் கருதியிருத்தல் வேண்டும். அக்கருத்தெழவே, நீரைவிட எவ்வெப்பொருள் எடை குறைவாக இருக்கும் என்பதை அவர்கள் கண்டுபிடித்திருத்தல் வேண்டும். காற்றடைத்த தோற்பைகள், மரங்கள் முதலியவற்றி னுதவியைக் கொண்டு நீரைக் கடந்து செல்லுதல் கூடுமென அவர்கள் முதலிற் கண்டிருப்பார்கள். இவை நீரில் மிதக்கக் கூடியவையாயிருந்தமையாலும், இவற்றைப் பற்றிக்கொண்டு மக்கள் மிதந்து நீந்துதல் எளிதாயிருந்தமையாலும் இவ்வாறு பயன்பட்டுவந்த இப்பொருள்கள் **மிதவைகள்** என்று அழைக்கப்பட்டன போலும்!



மிதவை

மரக் கட்டைகளைப் பற்றிக்கொண்டு நீரில் நனைந்து நீந்தி வந்தவர்கள், உருண்டு திரண்ட முழுக்கட்டைகளைப் பற்றி நீந்திச்செல்வதைவிட, அவற்றைக் குடைந்தெடுத்துக் குழிவாக்கி அப்பகுதியினுள் உட்கார்ந்து கைகளாலோ அல்லது கைபோன்ற துடுப்புகளினாலோ நீரைத் தள்ளி முன்செல்வது எளிதெனக் கண்டுகொண்டார்கள். திருந்தாத காட்டுமிராண்டி மக்கள் என்று கருதப்படும் சில வகுப்பினரால் இத்தகைய குடைந்த மரங்கள் இன்றும் தோணிகளாகப் பயன்படுத்தப்பட்டுவருதல் வரலாற்றுண்மையாகும்.



தோணி

இனி, தனி மரத்தைக் குடைந்தெடுத்து அதைத் தோணியாகப் பயன்படுத்துவதைவிட, உருட்சியுடைய கட்டைகளைப் பலகைபோன்ற தட்டை வடிவினவாக அறுத்து இரண்டு மூன்றாகப் பிணைத்துக் கட்டப்பட்ட "கட்டுமர"த்தின்மீது செல்வது வசதியானதெனப் பின் கண்டுகொண்டனர். கடற்கரையில் வாழும் நெய்தனில மக்களாகிய வலைஞர் இன்றும் இத்தகைய கட்டுமரங்களைத் தம் தொழிலாகிய மீன்பிடித்தற்குப் பயன்படுத்தி வருவதைக் காணலாம்.



கட்டுமரம்

இனி, பண்டங்களை ஏற்றிச் செல்லவும், நெடுந்தொலை கெடுதியின்றிச் செல்லவும் இக்கட்டுமரங்கள் போதாவென்று கண்டபொழுது மக்கள் குடைமரத்தையும் கட்டுமரத்தையும்

ஒப்பிட்டு நோக்கியிருத்தல் வேண்டும். அதன்பயனாகச் சிறு சிறு பலகைகளைப் பிணைத்துக் கட்டப்பட்ட படகு உண்டாயிருத்தல் வேண்டும். இப்படகு பலர் ஏறிச் செல்லவும் பண்டங்களைத் தாங்கிச்சென்று அக்கரை சேர்க்கவும் பயன்படுவதாயிற்று! மக்கள் ஊரை விட்டு ஊர் செல்வதற்கும், பொருள்களை விலைப்படுத்துவதற்கும், இப்படகு நன்கு பயன்பட்டுவந்தது.



படகு

ஏனினும், வேகமாய்ச் செல்லக்கூடிய ஆறுகளில் இப்படகுகள் நீரை எதிர்த்துச் செல்லக்கூடாதனவாயிருந்தன. அன்றியும், ஏரி போன்ற பெரு நீர்நிலைகளிலோ இவை விரைவின்றி மெதுவாகவே சென்றன. ஆகவே, விரைவோடு செல்லவும் நீரை எதிர்த்துச் செல்லவும் வழி யாதென்ற கேள்வி பிறந்திருத்தல் வேண்டும். அக்கேள்வியின் பயனே பாய்மரத்தோடுகூடிய பெரும் படகும், பாய்மரக் கப்பலுமாகும். பாய் என்பது காற்றினைக்கொண்டு விரிந்துநிற்கும் முரட்டுத் துணி. பாய்மரத்தோடு கூடிய கப்பல்கள் மரக்கலங்கள் என்றும், நாவாய்கள் என்றும் பெயர் பெற்றன.



பாய்மரப்படகு

இப்பாய்மரக் கப்பல்களே தொலைநாடுகளுக்குச் சென்று வரப் பெரிதும் பயன்படுவவாயின. சீனரும், எகிப்தியரும்

இந்தியருமே இம்முறையை முதலிற் கையாளத் தொடங்கி வாணிகம் நடத்தியவர்க ளாவார்கள். மேல் நாட்டவர்களும் இத்தகைய கப்பல்கள்மூலஞ் சென்றே ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலிய பெருநிலப் பகுதிகளை முதன்முதலாகக் கண்டுபிடித்தனர்.

பதினெட்டாம் நூற்றாண்டில் நீராவியின் துணைகொண்டு கப்பல்களை விரைவாகக் கடன்மீது செலுத்தலாம் என்ற உண்மை சர் ஐஸாக் நியூட்டன் என்பவராற் கண்டுபிடிக்கப் பட்டது. அதனைப் பலர் பலநாள் ஆராய்ந்து வந்தனர். துடுப்புக்களுக்கு மாறாகக் கப்பல்களி னிருபுறங்களிலும் உருளைகளை யமைத்து அவற்றை நீராவி யால் உருளச் செய்தால் விரைந்தசெலவு கைகூடும் என்பது ஆயிரத்தெண்ணூற் றேழாம் ஆண்டிற் கண்டுபிடிக்கப்பட்டது. அம்முறையால் வந்ததே பாய்மர மொழிந்த நீராவிக் கப்பல். இந்த நீராவிக் கப்பல் மக்கள் கடற் செலவையும், கடல் வாணிகத்தையும் எத்துணை வளர்த் திருக்கிறது என்று கூறவேண்டுவதில்லை!


நீராவிக்கப்பல்

நீராவிக் கப்பல் செய்யும் முறையில் மிகவுங் கைதேர்ந்த தொழிலாளர்களாற் கட்டப்பட்டு எல்லாவித வசதிகளையு முடையதாயும், கப்பற் செலவினாலுண்டாகும் கெடுதல்களைத் தடுப்பதற்கான பல முறைகளைக் கொண்டதாயும், எல்லா நாட்டு மக்களாலும் "நாவாய் நாயகம்" எனக் கருதிப் போற்றப்பட்டு வருவதாயும் இக்காலை திகழ்வது ஆங்கிலேயர் கட்டியுள்ள "குவீன் மேரி" என்ற மாபெருங் கப்ப லாகும்.

## பயிற்சி

1. ஊகித்தல், நெடுந்தொலை, மிதவை, காட்டுமிராண்டி, வரலாற்றுண்மை, நெய்தல்நிலமக்கள், வலைஞர், குடைமரம், நீர்நிலை, வாணிகம், பெருநிலப் பகுதி, கடற் செலவு, நாவாய்நாயகம்.
2. 'குவீன் மேரி' என்பது என்ன? அதனைப் பற்றித் தெரிந்ததைச் சொல்லு.
3. வினைமுற்றைக் கொண்டு முடியும் சொல்லோ, தொடரோ நாலைந்து சொல்லு.
4. இப்போது நீ பார்க்கும் கப்பல் முதலிலிருந்து எவ்வெவ்வாறு மாறுதல்கள் அடைந்து இந்நிலைக்கு வந்தது.

---

## உக. நயவஞ்சக நரி

### (அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

(க) துன்னிய காடொன்(று) அங்கே
துரைத்தனம் பண்ணும் சிங்க



மன்னவன் வாயி லுக்கு
மந்திரிஓரி ஒன்(று). அங்(கு)
அன்னவன் வயிற்றில் நோவாய்,
**சிங்கம்:** "அமைச்சனே! கழுதை ஈரல்,

உன்னியே கொடுவா!" என்ன,
ஓரியோர் ஊரை நாடிச்

(உ) சென்றொரு வண்ணான் தப்பும்
செழும்புனல் சுனையின் பக்கம்
நின்றது. பொதியைத் தள்ளி,
நெடுங்கயிற் றாலே காலை
ஒன்றிடத் தளைந்து, வண்ணான்
ஓட்டினன் கழுதை தன்னை.
வென்றிகொள் ஓரி சேர்ந்து, "உன்
ஓரி: மேனிஏன் இளைத்தது?" என்னச்

(ங) கூறவே, கழுதை,
கழுதை: "வண்ணான்
கொண்டநாள் முதல்எந் நேரம்
சீறியே அடித்த லானும்
தீனிபோ டாமை யானும்,
ஏறியே பொதியும் என்மேல்
ஏற்றியே தள்ளிப் பின்னை
மாறுகால் பிணைத்த லானும்
வருந்திநான் இளைத்தேன்" என்ன,

(ச) அந்தவோ ரியுந்தான் கேட்டே,
ஓரி: "ஐய! நீ வந்தாய் ஆகில்
சிந்தையுள் மகிழ்ந்தே எங்கள்
சிங்கமன் னவன்தன் பக்கல்
மந்திரி யாக உன்னை
வைத்தர(சு) ஆள்வன்; நீயும்

சுந்தர அமைச்சன் ஆகிச்
சுகத்துடன் இருப்பாய்'' என்ன,



**கழுதை:**

(௫) "சிங்கமோ விலங்கை எல்லாம்
தின்னுமே" என்ன

**ஓரி:** "ஆகா,
எங்களை எல்லாம் நான்வைத்(து)
இரட்சைசெய் திலனோ! மன்னன்
வெங்களிற் றியானை அல்லால்
வேறொரு விலங்கைத் தீண்டான்.
அங்கவன் ஆணை தப்பான்
அதற்குநான் பிணையே" என்றான்.

(௬) கழுதையும் நல்ல தென்ன,
காலினில் தளைத்தி ருந்த
பழுதையை ஓரி மெள்ளப்
பல்லினால் கடித்து விட்டே
வழிசொலி அழைத்துப் போய்த்தன்
மன்னவன் முனம்வி டுக்க,

பழிபடு மன்னன் தானும்
பற்றியே பிடிக்க வந்தான்.

(எ) கண்டது கழுதை தானும்
கதறியே திரும்பி ஓட்டம்
கொண்டது. சிங்கம் நோவு
கொண்டதால் ஓடமாட்டா(து)
அண்டையில் நிற்க, ஓரி,
ஓரி: "ஐய! நீ பதறி விட்டாய்.
கொண்டுநான் வந்துன் கையில்
கொடுத்தபின் வதைக்க!" என்ன,

(அ) பின்னையும் ஓரி சென்று,
ஓரி: "பேதையாய் இருந்தாய்! அந்தோ!!
மன்னவன் உன்னைக் கண்ட
மகிழ்ச்சியால் தழுவி மோந்து,
தன்னரு(கு) இருத்திக் கொண்டு,
தான்உனை அமைச்சன் ஆக்க
உன்னினன். என்னே நீயே
ஓடிஇங் குற்றாய்!" என்றும்,

(கூ) "கணக்கிலாப் பாவம் பண்ணிக்
கழுதையாய்ப் பிறந்து, வண்ணன்
பிணக்கினால் அடியும் பட்டுப்
பெரும்சுமை சுமந்தாய். நல்ல
இணக்கம்நான் செய்தேன். அந்த
இணக்கம்நீ அறியாய், மூட
குணத்தினால் பயந்தாய்" என்றும்,
கூறிடக் கழுதை கேட்டே,

கழுதை:

(௰) "உன்னது பேச்சை நம்பி
உற்றனன். கிட்டும் முன்னே
மன்னிய சிங்கம் கொல்ல
வந்தது. தப்பி வந்தேன்.
இன்னம் ஏன் வந்தாய்?" என்ன,
இருநிலம் தொட்டுக் கையால்
தன்னிரு காது மூடிச்
சத்தியம் சொல்லு மாபோல்,

ஓரி:

(௧௧) "ஐயையோ! பாவம்!! பாவம்!!!
அரசன்அப் படிச்செய் வானோ?
பொய்யுரை சொல்ல வேண்டாம்.
போடுநீ இந்தப் பேச்சை!
வையகம் போற்றும் சிங்க
மன்னவன் வார்த்தை தப்பான்.
மெய்யிது தானே" என்று
வேந்தன்மேல் ஆணை இட்டே,

ஓரி: (௧௨) "தன்னிலே வரும் செல்வத்தைத்
தள்ளுவார் ஒருவர் காணேன்.
உன்னையே கண்டேன் இப்போ(து)
உன் தலை விதியோ?" என்றே
தன்னிலே அதிச யித்தே,

ஓரி: "தான் இதை விட்டு நீநான்
சொன்னதைக் கேட்டு வந்தால்
சுகமெலாம் வருமு னக்கே.

(௧௩) இருவரா நாமே கூடி
இருந்தனம் ஆகில், வேறங்(கு)

ஒருவரால் ஆவ துண்டோ ?
உலகெலாம் நமதே'' என்ன
வெருவிய கழுதை தானும்
விரும்பியே இதன்பின் செல்லக்
கருதிய ஓரியும் சிங்
கத்தின்முன் விட்ட தம்மா ;



(கச) கழுதையார் தம்மைச் சிங்கம்
கண்டுதன் கைகள் ஆரத்
தழுவியே மோந்து, கண்டம்
தன்னையும் முறித்துப் போட்டே,
"பழுது நாம் செய்தோம், சந்தி
பண்ணிஇம் மருந்தைக் கொள்வோம்.
கழுதையைப் பழுதுறாமல்
காத்து நீ இருப்பாய்!'' என்றே,

(கரு) ஓரியைக் காவல் வைத்தே
ஒருசுனை அருகில் சென்று

பாரிய சிங்கம் சந்தி
பண்ணியங்(கு) இருக்கும் முன்னே
ஓரியும் மருந்தோ! என்றங்(கு)
உற்றதன் கண்ணும் காதும்
ஈரிரண்(டு) உறுப்பும் தின்றே
இருந்தது பயந்து தூர.

(கசு) சிங்கமும் சந்தி பண்ணிச்
சிங்: சென்(று), "இதன் கண்கள் எங்கே?
இங்கிதன் செவிகள் எங்கே?"
என்றுதான் முடுகிக் கேட்க,
ஓரி: "அங்கமேல் லாமுண் டாகில்,
அகப்பட்டும் திரும்பிப் போய்ப்பின்
மங்கிட, இறக்க இங்கே
வரநினைந் திடுமோ?" என்ன,

(கஎ) சிங்கமும் கழுதை ஈரல்
தின்னவும் இல்லை வீணாய்
அங்கொரு நரிதான் வஞ்சித்(து),
அழைத்துப்போய்க் கொல்லு வித்துத்
தங்குல வோரிக் கெல்லாம்
தான்இரை கொடுத்த தன்றே!
பங்கமாய் அறிவில் லாமற்
பட்டது கழுதை தானே!

—பஞ்சதந்திரப் பாடற்கதை.

பயிற்சி

1. ஓரி, புனல், வென்றி, மேனி, மாறுகால், இரட்டை, களிற்றி யானை, பழுதை, பிணக்கு, இணக்கம், உற்றல், மருந்து, சந்தி
2. நரி செய்த தந்திரங்கள் எவை?

3. செயப்படுபொருள் உள்ள வாக்கியங்கள் இரண்டும், இல்லாத வாக்கியங்கள் இரண்டும் எடுத்தெழுது.
4. இந்தக் கதையைச் சுருக்கமாக எழுது.

---

## உஉ. மார்த்தாண்டன் மணம்புரிதல்

### I

முன்னொரு காலத்தில் கலியாணபுரம் என்ற ஊரில் வீரவர்மன் என்றோர் அரசனிருந்தான். அவனுக்கு மனைவியரிருவர். அவருள் மூத்தவள், முத்துநகை என்ற பெண்மகவொன்றைப் பெற்றபின் நோய்வாய்ப்பட்டிறந்துவிட்டாள். இறந்துவிடவே, அப்பெண்மகவை அரசனும், இரண்டாம் மனைவியாகிய வீரையும் மிகுந்த கருத்துடன் வளர்த்துவந்தார்கள். அக்குழந்தையும் அறிவிற்சிறந்து அழகே உருவாய் விளங்கிவந்தது. இவ்வாறிருக்கையில், குழந்தை முத்துநகைக்குப் பன்னிரண்டாவது வயதுவந்தபோது, வீரவர்மன் எதிர்பாராத வகையில் ஒருநாள் திடீரென மாரடைப்புக் கண்டு இறந்துவிட்டான். பருவமடையாத முத்துநகையின் சார்பாக வீரை நாட்டைப் பரிபாலித்துவந்தாள்.

தன் மாற்றாளின் மகளான முத்துநகை தன்னிலும் அழகிற்சிறந்து பொலிவது கொடுசூரியாகிய வீரையின் கண்ணை உறுத்திற்று. அதிலும், பிறநாட்டு அரசிளங்குமரர்கள் முத்துநகையை மணக்க விரும்பிச் செய்திமேற் செய்தியனுப்பிவந்தமை, வீரைக்கு எரிகிற கொள்ளியை ஏறத்தள்ளுவதுபோ லிருந்தது. "யாராயிருந்தாலுஞ் சரி! நான் இடுகிற மூன்று கட்டளைகளை நிறைவேற்றிவைக்கிற ஒருவன்தான் முத்துநகையை மணக்கமுடியும்; ஆனல், நிறைவேற்றிவைக்க ஒப்புக்கொண்டு முன்வந்து நிறைவேற்றத்

தவறினாலோ தலைபோய்விடும்" என்று பெண்கேட்க வருப வர்களுக்குக் கண்டிப்பாய்த் தெரிவித்துவிடுமாறு கட்டளை யிட்டனள். இக்கட்டளைக் கிணங்கி முன்வந்து ஒரு சில இளவரசர்கள் உயிரிழந்தனர்; அதன்பின் முத்துநகையை மணம்புரிய வருபவர் தொகை வரவரக் குறைந்துவந்தது. இது நிற்க.

கலியாணபுர ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர்கள் பலருள் பரிதிபுரக் குறுநில மன்னனுமொருவன். அவனுக்கு மார்த் தாண்டன் என்றொரு பிள்ளையிருந்தான். அப்பிள்ளை இள மையிலிருந்தே அஞ்சாநெஞ்சு படைத்த ஆண்மகனாயிருந்து வந்தான். அழகிலுங் கல்வியிலுஞ் சிறந்தவனாகவும் அவன் விளங்கினான். கலியாணபுரத்திலுள்ள முத்துநகையின் வர லாற்றைத் தன் நண்பனொருவன் ஒருநாள் சொல்லக்கேட்ட மார்த்தாண்டன் அவளையே தேடிச் சென்று மணமுடிப்ப தென உறுதிசெய்துகொண்டான். இதனையறிந்த அவன் தந்தை எவ்வளவோ தடுத்தான்; தடுத்தும் பயனென்ன? தன்னந்தனியனாய் மார்த்தாண்டன் ஒருநாட் காலை கலியாண புரம் நோக்கிப் புறப்பட்டுவிட்டான்.

புறப்பட்டு வரும்வழியில், அவன் தனக்கெதிரே சிறு குன்றொன்று அசைந்து புரள்வதுபோல் தோற்றக் கண்டான். கண்டவன் வியப்படைந்து அதனருகிற்சென்று பார்த்தான். அவன் கருதியதுபோன்று அசைந்து புரண்டது குன்றன்று; குன்றுபோன்ற ஒரு மனிதனே! நன்றாகப் பருத்துக் கொழுத்திருந்த குண்டனொருவனே!!

மார்த்தாண்டன்:—"அடே நீ யார்? எங்கிருப்பது? உன் பெயரென்ன?"

அம்மனிதன்:—"நான் ஓர் அயல்நாட்டான்; என் பெயர் மலைவிழுங்கி."



மார்த்தாண்டனும் அவன் நண்பர்களும்

மார்த்:—"பொருத்தமான பெயர்தான்! நீ என் தூங்காமற் புரண்டுகொண் டிருக்கின்றாய்?"

மலைவிழுங்கி:—"காலையிற் சிறிது உணவு கிடைத்தது; அதனை உண்டதும் தூக்கம் வருவதுபோலிருந்தது; படுத்தேன். ஆனால், சிறிது நேரந் தூங்குவதற்குள் பசி வந்துவிட்டது; தூக்கம் பிடிக்கவில்லை; புரண்டுகொண்டிருக்கிறேன்."

மார்த்:—"பாபம்! சரியான உணவில்லைபோலிருக்கிறது. என்ன உணவு கிடைத்ததோ?"

மலைவிழுங்கி:—"என்ன உணவு! இரண்டண்டாச் சோறும், நாலைந்து மாடுகளுமே. அவை என் கடைவாய்க்குக்கூடக் காணவில்லை."

மார்த்:—"ஆ! எனக்குச் சரியான துணைவன் நீதான். நான் கலியாணபுரத் தரசன்மகளை மணமுடிக்கப் போகிறேன். நீ என்னுடன் வந்தால் உனக்கு ஏற்ற வேலையும் உணவுங் கொடுப்பேன்."

மலைவிழுங்கி:—"ஓ! நல்லது; வருகிறேன்."

மார்த்தாண்டன் மலைவிழுங்கியை அழைத்துக்கொண்டு புறப்பட்டான். புறப்பட்டுச் சிறிதுதொலை போவதற்குள் சாலையில் ஒருவன் தன் இடக்காதைத் தரையின்மீது வைத்துக்கொண்டு எதனையோ உற்றுக்கேட்பதுபோற் படுத்திருக்கக் கண்டான்.

மார்த்:—"அடே, நீ யார்? எதை உற்றுக்கேட்கிறாய்?"

அம்மனிதன்:—"நான் முறஞ்செவியன். மரங்கள் வளரும் ஒலியையும், எழுகடலுக்கப்பாலுள்ள திட்டொன்றிற் பறவைகள் இன்னிசையுடன் பாடி யொலிப்பதையுங் கேட்டுக்கொண்டிருக்கிறேன்."

மார்த்:—“அப்படியா? கலியாணபுரம் அரண்மனையில் இப்பொழுது முத்துநகை என்ன செய்கிறாள் என்று அறிந்து சொல்ல முடியுமா?”

முறஞ்செவியன்:—“இதோ கேட்டுச் சொல்கிறேன்... ஆம்; முத்துநகை அழுதுகொண்டிருக்கிறாள். யாரோ தன்னை மணக்கவிரும்பிவந்த ஓரரசன் தலையிழந்து விட்டானாம்.

மார்த்:—“சரி, நீயும் என்னுடன் வா! நல்ல வேலை கொடுக்கிறேன்.”

இதைக் கேட்ட முறஞ்செவியன் மறுமொழி கூறாமல் எழுந்து மார்த்தாண்டனைப் பின்தொடர்ந்தான். மூவரும் சிறிது தொலை நடந்து சென்றார்கள். அப்பொழுது எதிரே சாலையின்குறுக்கே இரண்டு மரங்கள் விழுந்து கிடக்கக் கண்டார்கள். அவற்றினருகே சென்று பார்த்தபோதோ அவை மரங்களல்லவென்றும் ஒரு மனிதனுடைய கைகளே என்றுங் கண்டார்கள். கண்டவர்கள் பெருவியப் பெய்தியவர்களாய் அக்கைகளோரமாகவே மேனோக்கிச் சென்று பார்த்தபோது அம்மனிதனுடைய தலை தெரிந்தது.

மார்த்தாண்டன்:—“அப்பா! வஞ்சனையின்றி வளர்ந் திருக்கிறாயே!”

அம்மனிதன்:—“ஆம். உருவத்தில் வளர்ந்திருப்பது மட்டுமன்று; நினைத்தால் என் கைகளை எத்துணை தொலை வேண்டுமானாலும் நீட்டவல்லேன்.”

மார்த்:—“அப்படியா! உன்பெயரென்னவோ?”

அம்மனிதன்:—“பனைமரத்தான்.”

மார்த்:—“சரியான பெயர்தான்! நீ எங்களுடன் வந்தால் உனக்கு ஏற்ற வேலை பார்த்துக்கொடுப்பேன்.”

இதுகேட்ட பனைமரத்தானும் ஒப்புக்கொண்டு புறப் பட்டான். நால்வரும் கலியாணபுரம் நோக்கி விரைவாக நடந் தனர். சிறிதுதூரம் சென்றபோது எதிரில் ஒரு மனிதன் தன்னிரு கண்களில் ஒன்றைத் துணிகொண்டு இறுக்கிக் கட்டிக்கொண்டு மற்றொரு கண்ணுல்பட்டும் பார்த்தவண்ணம் வந்துகொண்டிருக்கக் கண்டார்கள். அவனை மார்த் தாண்டன் யாரென்று வினவினன். தன் பெயர் **பூதக்கண் ணன்** என்றும், ஒரு கண்ணைக் கட்டிக்கொண்டு பார்த்தா லன்றி அவனல் அருகிலுள்ள பொருள்களைப் பார்க்கமுடியா தென்றும், கட்டியிருக்கிற கண்ணைத் திறந்தாலோ, உலகத் தில் எப்பகுதியிலுள்ள எப்பொருளையும் பார்க்கமுடியுமென் றும் அவன் விடை பகர்ந்தான். அவனையும் உடனழைத்துக் கொண்டு மார்த்தாண்டன் மேற்சென்றான்.

வழியில் ஒருவன் போர்வைமேற் போர்வையாக ஏழு போர்வைகளைப் போர்த்துக்கொண்டு கூனிக்குறுகி உட் கார்ந்த நிலையில், "ஐயையோ குளிர் நடுக்குகிறதே! பொறுக்க முடியவில்லையே !!" என்று முணுமுணுத்துக்கொண்டிருந் தான். அவனைக் கண்ட மார்த்தாண்டன், "எங்களுக்கு இந்த வெயிலில் மேலே துணிபோட முடியவில்லை; சூரியன் சுட்டுப் பொசுக்குகிறன். நீ என்னவோ குளிர் பொறுக்கமுடிய வில்லை என்று கூறுகிறாயே!" என்று வியப்புடன் கூறி னன். "ஐயா! உங்களுக்கு வெயில் சுட்டுப் பொசுக்குவது போலிருக்கலாம். எனக்கோ குளிர் பொறுக்கமுடியவில்லை. என்மேலுள்ள ஏழு போர்வைகளில் ஒன்றை நீக்கினேனே, பனி பெய்யத் தொடங்கிவிடும்; மற்றொன்றை நீக்கினேனுல் உலகமே குளிர்ந்துவிடும்; மூன்றாவது போர்வையை எடுத் தேனுல் நீரும் உம் நண்பர்களும் குளிரில் விறைத்து விடுவீர்கள். அதனாலேயே என்னைப் பனிபெருக்கி என்று

அழைக்கின்றார்கள் !" என்று மறுமொழி கூறினான் அம் மனிதன். அவனையுங்கூட அழைத்துக்கொண்டு அறுவரும் விரைந்து நடந்து மாலைப்பொழுதிற் கலியாணபுரம் சேர்ந்தனர்.

## பயிற்சி

1. நோய்வாய்ப்படல், மாற்றான், கொடுசூரி, அஞ்சா நெஞ்சு, தன்னந்தனியன், உற்றுக்கேட்டல், எழுகடல், முணுமுணுத்தல், பொசுக்குதல், துளிர்ந்து விடுதல்.
2. பருவமடைதல், கண் உறுத்தல், தலை போய்விடுதல், குறுநில மன்னன், ஆண்மகன், மறுமொழி கூறல், பார்த்தவண்ணம், சுட்டுப் பொசுக்கல், விறைத்து விடுதல்—இவை ஒவ்வொன்றுக்கும் சரியான வேறு தொடர்மொழிகள் சொல்லு.
3. அறிவில்+சிறந்த, வரவர+குறைந்தது, மணம்+முடிக்க, ஓர்+அரசன்—இவை ஒவ்வொன்றையுஞ் சேர்த்தெழுதிக் காணப்பட்ட விகாரங்கள் என்னென்னவென்றுஞ் சொல்லு.
4. மார்த்தாண்டனுடன் கூடின நண்பர்கள் எவரெவர்? ஒவ்வொருவனின் வல்லமை என்ன?

---

## உ௯. மார்த்தாண்டன் மணம்புரிதல்

### II

கலியாணபுரம் வந்துசேர்ந்த மார்த்தாண்டன் தன் நண்பர்கள் ஐவரையும் நகரெல்லையிலேயே ஓரிடத்தில் தங்கியிருக்கச் செய்து, சற்றுந் தாமதியாமல் நேரே அரண்மனைக்குச் சென்றான். சென்று, அரசியைக் கண்டு, "நான் இளவரசியை மணக்க விரும்புகிறேன்; தாங்கள் எனக்கிடுங் கட்டளைகள் எவையாயினும் செய்து முடிப்பேன். அவை

என்ன என்பதை அருள்கூர்ந்து தெரிவியுங்கள்" என்று அவன் பணிவுடன் கூறினான்.

அரசி :—" ஓகோ! பரிதிபுர இளவரசரல்லரோ நீர்! வாரும்; இவ்விருக்கையில் அமரும். கட்டழகு வாய்ந்த இளங் காளையாகிய நீர், ஏன் வீணே உயிர்துறக்க விரும்புகிறீர்? வேண்டாம், வேண்டாம். உம் தந்தை எனக்கு மிகவும் வேண்டியவர். இம் முத்துநகைக்கு மாறாக அழகிற்சிறந்த வேறு பெண் ஒருத்தியை நானேபார்த்து மணமுடித்து வைக்கிறேன். என்ன சொல்லுகிறீர்?"

மார்த் :—" அம்மணி! தாங்கள் என்மாட்டுக் காட்டும் அளவிலா அன்பிற்கு நான் எழுமையுங் கடப்பாடுடையேன். ஆனாலும், முத்துநகையை மணப்பது என்பதொன்றில் மட்டும் தங்கள் அறிவுரைக்கு நான் இணங்கமுடியாதிருப்பதை மன்னித்தருளுங்கள். இப்பொழுது நானிருக்கிற நிலையில் தாங்க ளிடப்போகுங் கட்டளைகளைத் தவிர வேறெதையும் காதிற் போட்டுக்கொள்ள முடியாதவனாயிருக்கிறேன்."

அரசி :—" ஓகோ! அப்படியானால் சரி. என் கையில் இருந்த மணிக்கணையாழி நேற்று மாலை இந்நகரருகிலோடும் ஆற்றினுள் நழுவி விழுந்துவிட்டது. அதை இன்று மாலை பகலவன் மறைவதற்குள் கொண்டுவந்து சேர்ப்பிக்கவேண்டும். இன்றேல் நாளைக் காலை உம் உயிரை மேலுலகஞ் சேர்த்துவிடுவேன். இதுவே என் முதற்கட்டளை; செல்லும் உடனே!"

கட்டளை பெற்ற மார்த்தாண்டன் செய்வதின்னதென்று தெரியாது திகைப்புண்டவனாய்த் தன் நண்பர்களிடம் வந்து சேர்ந்தான். சேர்ந்தவன், தனக்கு அரசியிட்ட கட்டளையைத்

தெரிவித்துவிட்டு, "பரந்தோடும் இப்பேராற்றில் நேற்று விழுந்த கணையாழியை இன்று மாலைக்குள் எங்கென்று தேடுகிறது?" என்று பெருமூச்சு விட்டான். "இஃது ஒரு பெரிய காரியமா?" என்று கூறிய பூதக்கண்ணன் தன் கண் கட்டை அவிழ்த்துவிட்டு ஆறிருந்த பக்கம் திரும்பி உற்று நோக்கினன். நோக்கினவன், "ஆ! அதோ ஆற்றின் நடுவிற் கிடக்கும் ஒரு சிறு கல்லின்மீது அம் மோதிரம் விழுந்துள்ளது" என்றான். "என் கண்களுக்கு மட்டும் அது புலப்பட்டால்..." என்று இழுத்தாற்போற் கூறினன் பனைமரத்தான். அவ்வளவுதான்; மலைவிழுங்கி விரைந்து ஆற்றோரம் சென்று வாயைத் திறந்து ஆற்றுநீரை அடியோடு குடித்துவிட்டான். ஆற்றுநடுவே கிடந்த மோதிரம் மாலை வெயிலில் பளிச்சென்று மின்னிற்று. தன் பெருங் கையை நீட்டி மோதிரத்தை எடுத்து மார்த்தாண்டனிடங் கொடுத்தான் பனைமரத்தான். மோதிரம் பெற்ற மார்த்தாண்டன் அரண்மனைக்கு விரைந்தோடி அதை அரசியிடஞ் சேர்த்துத் திரும்பினன்.

அரசிக்கு இரவெல்லாம் தூக்கம் பிடிக்கவில்லை. இத்துணை எளிதாகக் கட்டளையை மார்த்தாண்டன் நிறைவேற்றி வருவானென்று அவள் நினைக்கவில்லை; ஆகவே, செயற்கரிய காரியமொன்றைச் செய்யுமாறு ஏவவேண்டும் என்று முடிவு செய்துகொண்டாள். மறுநாட்காலை மார்த்தாண்டன் வந்ததும், "அரண்மனை மாட்டுத் தொழுவத்தில் ஏறக்குறைய முந்நூறு மாடுகள் இருக்கின்றன; அவற்றையெல்லாம் இன்று உச்சிப் பொழுதிற்குள் நீர் விழுங்கித் தீர்த்துவிட வேண்டும்; ஒரு துண்டுகூட மீதிவிடக் கூடாது." என்று அவள் இரண்டாங் கட்டளை பிறப்பித்தாள்.

மார்த்தாண்டன்:—"ஓ! இது பெருங் கட்டளை யாக இருக்கிறதே! இருந்தாலும் அக்கறையில்லை. என் நண்பர்களில் ஒருவனை நான் துணைக் கழைத்துக் கொள்ள இசைவீர்களோ?"

அரசி:—"வேண்டுமானால் ஒரேயொருவனைத் துணைக்கு வைத்துக் கொள்ளலாம்"

இது கேட்ட மார்த்தாண்டன் அகமிக மகிழ்ந்தவனாய் ஓடோடியும் வந்து, மலைவிழுங்கியைப் பார்த்து, "உனக்கு நல்ல வாய்ப்பு; வா என்னுடன்" என்று அழைத்துச் செய்தியைத் தெரிவித்தான். மலைவிழுங்கியும் உடனே புறப்பட்டுச் சென்று, இரண்டொரு நொடியில் தொழுவத்திலுள்ள மாடுகள் யாவற்றையும் தின்றுமுடித்தான்; பின்னர், அங்கிருந்த ஆடு, கோழி, வாத்து, மான், குதிரை முதலிய எல்லாவற்றையும் விழுங்கி ஒரு பெரிய ஏப்பமிட்டான்.

இஃதறிந்த அரசிக்குச் சினம் மிகுந்தது; தீர ஆலோசித்து அவள் ஒரு முடிவு செய்துகொண்டாள். மார்த்தாண்டன் இரண்டாவது கட்டளையை நிறைவேற்றிய செய்தியறிவிக்க வந்ததும், "சரி, நீர் கட்டளையை நிறைவேற்றிவந்ததையறிவேன்; உம்திறமையை மெச்சுகிறேன். இன்றிரவு நீர் என்னுடன் விருந்துண்ணல் வேண்டும். உண்டு முடிந்தபின் முத்துநகையுடன் நீர் நான்கு நாழிகை நேரம் உரையாடலாம். விருப்பந்தானா?" என்று அவள் கேட்டாள்.

மார்த்தாண்டன்:—"அதற் கையமென்ன! நானாகக் கேட்பதுபோய்த் தாங்களாக அருள்புரியும்போது வேண்டாமென்றுஞ் சொல்வேனா!"

அரசி:—"ஆனாலொன்று. உரையாடிக் கொண்டிருக்கையில் தப்பித்தவறித் தாம் தூங்கிவிடக்கூடாது. தூங்கிவிட்

டால் நான் முத்துநகையை அழைத்துச் சென்றுவிடுவேன். சென்றபின் குறித்த நான்குநாழிகை நேரங்கழித்து நான் திரும்பிவந்து பார்ப்பேன். அவ்வாறு பார்க்கும்போது தம்முடன் முத்துநகை இல்லாதிருந்தால் உம் பாடு முடிந்தது!"

**மார்த்**:—"என்ன தூங்குவதா? நான் மணமுடித்துச் செல்லும்வரை தூங்குவதாக இல்லை."

அரசி:—"சரி, அப்படியானால் இரவு எட்டு நாழிகைக்குச் சரியாக அரண்மனைக்கு வாரும்!"

பட்டுக் கடங்கா மகிழ்ச்சிகொண்ட மார்த்தாண்டன் உடனே புறப்பட்டுச் சென்று தன் நண்பர்களிடம் நிகழ்ந்தவற்றை உரைத்து, இரவு அவர்கள் யாவரும் அரண்மனைக் கருகில் வந்து காத்திருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். இரவிற் குறிப்பிட்ட வேளை வந்ததும் மார்த்தாண்டன் சிறக்க உடுத்திக்கொண்டு அரண்மனை சேர்ந்தான். உணவுவகைகள் நிறையப் பரிமாறப் பட்டிருந்தன. குடிநீர்வகைகள் கணக்கற்றனவாய்க் காணப்பட்டன. அரசியுடன் பேசிக்கொண்டே உணவுண்ட மார்த்தாண்டன், அரசியால் மயக்கந்தரு மருந்தொன்று கலக்கப்பட்டிருந்த ஒரு குவளை நீரையுங் குடித்துவிட்டான்.

உண்டு முடிந்தவுடன், அரசி அவனை இளவரசியின் அறைக்கு அழைத்துச் சென்றாள். அவ்வறை அரண்மனையின் மேன்மாடியிலிருந்தது. அவ்வறைக்கு ஒரே சாளரந்தான். அதைத்திறந்தால் கண்ணிற்கு எட்டினமட்டும் ஒரே நீர்ப்பரப்பாகத்தான் காணப்படும். ஆற்றோரத்தில் அவ்வறை கட்டப்பட்டிருந்ததுபோலும்! அவ்வறையின் நடுவே அழகிய இருக்கையொன்றில் முத்துநகை களிதுளும்பும் மதிமுகத்துடன் அமர்ந்திருந்தாள். இன்பக்கடலில் அமிழ்ந்தவ

ளுய், மார்த்தாண்டன் அவளெதிரே யிருந்த இருக்கையொன்றில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தான். அரசியும் வெளி



யே சென்றாள். சற்று நேரத்தில் மார்த்தாண்டனுக்கு அவனையும் அறியாமல் தூக்கம் வந்தது. அவன் கண்கள் தாமாகவே

மூடிக்கொண்டன். இருந்த இருப்பிலேயே அவன் அயர்ந்து விட்டான். மயக்கமருந்து தன் வேலையைச் செய்துவிட்டது!

ஒரு நாழிகை கழித்து அவன் கண்ணைத் திறந்து பார்த்தான்; முத்துநகையைக் காணவில்லை. அரசியிட்ட கட்டளை நினைவிற்கு வந்தது. சட்டென்றெழுந்து சாளரத்தருகேயோடி எட்டிப் பார்த்தான். எதிர்க்கரையில் மலைவிழுங்கியும் முறஞ்செவியனும் உட்கார்ந்திருந்தது பால் போற்காய்ந்த வெண்ணிலவில் இவனுக்கு நன்றாகத் தெரிந்தது; கையைத் தட்டி, "இளவரசி ஓடிவிட்டாள்; இன்னும் இரண்டு நாழிகைப் பொழுதில் அவளை மீண்டுங் கொண்டுவராவிட்டால் நான் ஒழிந்தேன்." என்று உரக்கக் கூவினன். மலைவிழுங்கி உடனே பனைமரத்தானைக் கூப்பிட்டு இளவரசனிருக்குமிடத்தைக் காட்டினன். அவன் ஓரே எட்டாக எட்டி இளவரசனைத் தூக்கி மலைவிழுங்கி இருந்தவிடத்திற் கொண்டுவந்து சேர்த்தான். மார்த்தாண்டன் முறஞ்செவியனை நோக்கி, "அவளிருக்குமிடத்தை உன்னாலறிந்து சொல்லமுடியுமா?" என்று கேட்டான். அவனும் இடது காதைத் தரைமீதுவைத்துச் சற்றுநேரம் கேட்டபின், "ஆம் இவ்வூருக்கருகிலுள்ள கடல் நடுவில் ஒரு திட்டிருக்கிறது. அத்திட்டின் நடுவில் காலங்கண்ட மரமொன்று இருக்கிறது. அதன் நடுவில் இருக்கும் பொந்தில் இளவரசி உட்கார்ந்து, 'மார்த்தாண்டரே! நான் இங்கிருக்கிறேன். என்னைக் காப்பாற்றும்' என்று அழுதுகொண்டிருக்கிறாள்" என்றான். உடனே, பூதக்கண்ணன் மூடியிருந்த கண்ணைத் திறந்து, "அவளிருக்குமிடம் நன்றாகத் தெரிகிறது. ஆனாலும் இவ்வாற்றையும் கடலையும் கடக்கக் கப்பலின்றி என்னசெய்வது?" என்றான். அதுகேட்ட பனிபெருக்கி தன் போர்வைகளில் இரண்டு மூன்றை விலக்கினன். ஒரு நொடியில்

ஆறுங் கடலும் பனிமூடி உறைந்துவிட்டது. மார்த்தாண் டன் விரைந்தோடி இளவரசியை அழைத்துவந்தான். பனை மரத்தான் இள வரசியையும் இளவரசனையும் தூக்கி மேன்மாடி அறையில் விட்டான். அறைக் கதவுந் திறந்தது; அரசி உள்ளே வந்தாள். வந்தவள் இருவருமிருக்கக் கண்டதும் திடுக்கிட்டாள். இருந்தாலும் தன் ஏமாற்றத்தை வெளிக் காட்டாமல், "இளவரசரே! நீரன்றோ வீரர்! இனி நீர் இவ் வேளைக்குமேல் எங்கு செல்லப் போகிறீர்? உம் நண்பர் களையும் இங்கே வரவழைத்துப் படுத்துக்கொள்ளச் சொல் லும். உங்கட்கென ஒரு தனியறை ஒழித்துவிடச் செய் திருக்கிறேன்." என்று சொல்லி, முத்துநகையை அழைத் துச் சென்றாள்.

மார்த்தாண்டனும் தன் நண்பர்களை அரண்மனைக்குள் வரச்செய்து, அவர்களோடு அரசி குறிப்பிட்ட அறையிற் சென்று படுத்துக்கொண்டான். அவ்வறை இரும்புத் தகட்டி னாற் சமைக்கப்பட்டதொன்று. இதைக்கண்ட மார்த்தாண்டன் எதற்காக இவ்வறையிற் படுக்கச்செய்தாள் அரசி யென்று உன்னினான். இதற்குள் அறை முழுதும் வெப்பம் மிகுந்து வந்தது. சுவர்த்தகடுகளும், நிலத்தகடும் சூடுமிகுந்தன. மார்த் தாண்டன் எழுந்தோடிக் கதவு வழியாகப் பார்த்தான். வெளி யில் அரசி நின்றுகொண்டு அவ்வறையின் நாற்புறங்களிலும் கட்டைகளை யடுக்கித் தீமூட்டச் செய்துகொண்டிருந்தாள். அரசியின் சூழ்ச்சியை யுணர்ந்த மார்த்தாண்டன் விரைந் தோடி,பனிபெருக்கியின் மீதிருந்த போர்வைகளில் இரண்டை நீக்கிவிட்டான். உடனே அறை மீண்டுங் குளிர்ந்துவிட்டது.

இருப்பறைக்குள் சூட்டினால் அறுவரும் வெந்து போ யிருப்பார்கள் என்று நினைத்துக்கொண்டே அரசி வந்து கத

வைத் திறந்தாள். "அம்மணி! நானும் என் நண்பர்களும் சாகவில்லை; உயிருடன்தான் இருக்கிறோம். உம்முடைய மூன்று கட்டளைகளையும் நிறைவேற்றிவைத்த என்னை இவ்வாறு சூழ்ச்சிசெய்து கொல்ல நினைந்த உம்மை இப்பொழுதே கொன்றுவிடுவேன். ஆயினும் நீர் ஒரு பெண்பிள்ளையாயிற்றே என்று மன்னிக்கிறேன். உடனே இவ்வூரை விட்டு ஓடிவிடும்! இஃது என் கட்டளை" என்றான் மார்த்தாண்டன். அரசியும் மறுமொழி கூறாது நகரைவிட்டு நீங்கினாள். முத்துநகைக்கும் மார்த்தாண்டனுக்கும் சிறப்பாக மணம் நடைபெற்றது. மார்த்தாண்டன் கலியாணபுர அரசனானான். அவன் நண்பர்கள் அவனுக்கு மந்திரிகளாக இருந்து பேருதவி புரிந்துவந்தார்கள்.

[இது கிரிம்ஸ் மாயா விநோதக் கதைகளிற் கண்டதொரு கதையைத் தழுவி எழுதப்பட்டதாகும்.]

பயிற்சி

1. கட்டழகு, உயிர் துறத்தல், எழுமை, கடப்பாடு, இழுத்தாற்போல், வாய்ப்பு, அருள்புரிதல், தப்பித்தவறி, மட்டு, சானாம், இருக்கை, களிதுளும்பல், மதிமுகம், உன்னல்.
2. எழுமையும் கடப்பாடுடையேன், உம் பாடு முடிந்தது, இன்பக் கடலில் அமிழ்ந்தவன், காலங்கண்ட மரம்—இவற்றை விளக்கு.
3. தங்கி + இருத்தல், எவை + ஆயினும், பிடிக்க + இல்லை, ஒரே + ஒரு, முடியாதவனாய் + இருக்கிறேன்—ஒவ்வொன்றையுஞ் சேர்த்து எழுது.
4. (a) மார்த்தாண்டன் நண்பர்கள் ஒவ்வொருவரும் அவனுக்கு என்னென்ன உதவி செய்தார்கள்?
   (b) மார்த்தாண்டன் கடைசியாக அரசியிடம் சினந்துகொண்ட காரணம் என்ன?

# ௨௪. செய்யுட் பாடம்

## I

## தனிப்பாடல்கள்

### தேங்காய்க்கும், நாய்க்கும் சிலேடை

ஓடும் இருக்கும் அதன் உள்வாய் வெளுத்திருக்கும்
நாடும் குலைதனக்கு நாணாது—சேடியே!
தீங்காய(து) இல்லாத் திருமலைரா யன்வரையில்
தேங்காயும் நாயும்இணை செப்பு. (௧)

### அத்தைமகள் கறிசமைத்த அழகு

கரிக்காய் பொரித்தாள், கன் னிக்காயைத் தீத்தாள்
பரிக்காயைப் பச்சடியாய்ப் பண்ணி—உருக்கமுள்ள
அப்பைக்காய் நெய்துவட்டல் ஆக்கினாள். அத்தைமகள்;
உப்புக்காண் ! சீ ! சீ ! உமி ! (௨)

### இடிமேல் இடி

குரங்கனலில் வீழ்ந்து, வெறி கொண்டு, தேள்கொட்ட
கரஞ்செறியப் பாம்(பு), அலவன் கவ்வ,-விரைந்துபேய்
பற்றவே, கள்ளுண்டு, பச்சைமிள கைக்கடித்தால்
எத்தனைபார்! சேட்டைக் கிடம். (௩)

### மோர்க்காரியின் மோசம்

காரென்று, பேர்படைத்தாய், ககனத் துறும்போது;
நீரென்று பேர்படைத்தாய், நெடுந்தரையில் வந்ததற்பின்;

பாரொன்று மென்கூந்தல் பாலிடைச்சி கைப்பட்டு,
மோரென்று பேர்படைத்தாய்; முப்பேரும் பெற்றாயே! (௪)
—**காளமேகப் புலவர்.**

## பயனற்றவை

மாடில்லான் வாழ்வும், மதியில்லான் வாணிபமும்,
நாடில்லான் செங்கோல் நடாத்துவதும்—கூடும்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டும்
விருந்தில்லா வீடும் விழல். (௫)

## இன்னாரோடு இன்னது கெடும்

தாயோ(டு) அறுசுவைபோம்; தந்தையொடு கல்விபோம்;
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்—ஆயவாழ்வு
உற்றார் உடன்போம்; உடன்பிறப்பால் தோள்வலிபோம்;
பொற்றாலி யோ(டு) எவையும் போம். (௬)
—**ஔவையார்.**

## அம்பட்டன் சிறப்பு

ஆரார் தலைவணங்கார் ? ஆரார்தாம் கையெடார்
ஆரார்தாம் சத்திரத்தில் ஆறாதார் ?—சீரரும்
தென்புலியூர் மேவும் சிவனருள்சேர் அம்பட்டத்
தம்பிரான் வாசலிலே தான். (௭)

## வண்ணான் சிறப்பு

சிரம்பார்த்தான் ஈசன்;அயன் தேவி தனைப்பார்த்தான்;
கரம்பார்த்தான் செங்கமலக் கண்ணன்;-உரஞ்சேர்

மலைவெளுத்த திண்புயத்து வன்றூன்சீ ராமன்
கலைவெளுத்த நேர்த்திதனைக் கண்டு. (அ)

—கம்பர்.

அடக்கமான உணவு

சற்றே துவையலரை, தம்பி! ஒரு பச்சடிவை,
வற்றலே தேனும் வறுத்துவை;—குற்றமில்லை,
காயமிட்டுக் கீரைகடை கம்மென்ன வேமிளகுக்
காயரைத்து வைப்பாய் கறி. (கூ)

—சிவஞானயோகிகள்.

---

II

## நன்னெறி

அன்பே அனைத்திலும் சிறந்தது

இல்லானுக்(கு) அன்பிங்(கு) இடம்பொருள் ஏவல்மற்(று)
எல்லாம் இருந்துமவற்(கு) என்செய்யும்?—நல்லாய்!
மொழியிலார்க் கேது முதுநூல்? தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு? (க)

இன்சொல் இயம்பு

இன்சொலால் அன்றி, இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய்! பொங்கா(து) அழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல். (உ)

### பெரியோர் சார்பு

மெலியோர் வலிய விரவலரை அஞ்சார்
வலியோர் தமைத்தாம் மருவில்—பலியேல்
கடவுள் அவிர்சடைமேல் கட்செவியஞ் சாதே
படர்சிறையப் புள்ளரசைப் பார்த்து. (ந)

### இறப்பதற்கு முன்னே அறஞ்செய்க

கொள்ளும் கொடுங்கூற்றம் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளம் கனிந்தறம் செய்(து) உய்கவே-வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்,
பெருகுதற்கண் என்செய்வார் பேசு. (ச)

### புகழ்கருதா உதவி

என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீ(து)அற்றோர்—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ
நாவிற்(கு) உதவும் நயந்து? (ரு)

### கைம்மாறுகருதா உதவி

கைம்மா(று) உகவாமல், கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாம்செய்வர்—அம்மா!
முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று. (சா)

### தன்னலம் மறுத்த உதவி

தங்குறைதீர்(வு) உள்ளார், தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் - திங்கள்

கறையிருளை நீக்கக் கருதா(து) உலகில்
நிறையிருளை நீக்குமேல் நின்று. (எ)

### தக்கார்க்கு ஒன்று ஈகை

தக்கார்க்கே ஈவர்; தகார்க்களிப்பார் இல்லென்று
மிக்கார்க்(கு) உதவார் விழுமியோர்—எக்காலும்,
நெல்லுக்(கு) இறைப்பதே நீரன்றி, காட்டுமுளி
புல்லுக்(கு) இறைப்பரோ போய்? (அ)

### ஈயாதார் செல்வம்

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம், வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. (கூ)

### செல்வச் செருக்கு

தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோம் என்று,
தலையா யவர்செருக்குச் சார்தல்—இலையால்;
இரைக்கும்வண்(டு) ஊதுமலர் ஈர்ங்கோதாய்! மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு. (ய)

### ஆறுவது சினம்

உள்ளம் கவர்ந்தெழுந்(து) ஓங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ? விளம்பு! (கக)

### பிறப்பால் உயர்வில்லை

ஆக்கும் அறிவான் அலது பிறப்பினுல்
மீக்கொள் உயர்(வு) இழிவு வேண்டற்க!—நீக்கு
பவரார் அரவின் பருமணிகண்(டு)? என்றும்
கவரார் கடலின் கடு. (கஉ)

### இலக்கணக்கல்வியின் இன்றியமையாமை

எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்தறிவார் காணின் இலையாம்;—எழுத்தறிவார்
ஆயும் கடவுள் அவிர்சடைமுன் கண்டளவில்
வீயும் சுரநீர் மிகை. (கஙு)

### கற்ருேரைக் காமுறுவர் மேன்மக்கள்

கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்;
மற்றையர்தாம் என்றும் மதியாரே;—வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள்விழியாய்! வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம். (கச)

### கல்விச் செருக்கின் கேடு

கடலே அனையம்யாம் கல்வியால் என்னும்
அடலே(று) அனையசெருக்(கு) ஆழ்த்தி—விடலே;
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். (கரு)

—சிவப்பிரகாசர்.

# செய்யுட் பாடக் குறிப்புக்கள்

I (க) சிலேடை—இருபொருள் பட மொழிகளைச் செய்யுட்களிற் றொடுப்பது. ஓடு-ஓடு, ஓடுதல். குலை-வாழைக்குலை; நாய் குரைத்தல். நாணாது-வளையாது; தளராது. வரை-மலை. மூன்று மடி மன்னன் சிறப்பு.

(உ) கரி-யானை (அத்தி); கரிக்காய் - அத்திக்காய். கன்னி-பெண் (அரம்பை); அரம்பை-தெய்வலோகப் பெண்; வாழை; கன்னிக்காய் - வாழைக்காய். தீத்தாள்-வறுத்தாள். பரி-குதிரை (மா); பரிக்காய்-மாங்காய். பை-படம் (பாம்பு); கத்திரி யென்பது ஒருவகைப் பாம்பு; அப்பைக்காய்-அந்தக் கத்திரிக்காய்.

(ங) காஞ்செறிய - கையில் சுற்றிக்கொள்ள. அலவன்-நண்டு.

(ச) ககனம்-வான். பாரொன்று — தரையைத் தொடும்.

(ரு) மாடு-செல்வம். மதி-அறிவு, விழல்-வீண்.

(சு) ஓடு, உடன், ஆல்-இவ்வுருபுகள் நீக்கப் பொருளன.

(எ) தலைவளைத்தல்-கை தூக்குதல்; கும்பிடல். சத்திரம்-குடில், கத்திச் சிகிச்சை. தென்புலியூர்-சிதம்பரம். தம்பிரான் - தம்பிபுகான் என்பது பாடம்.

(அ) ஈசன் சிரத்திலுள்ளது கங்கை வெள்ளம். அயன்-பிரமன், அவன் தேவி வெள்ளைக் கலையுடுத்த கலைமகள். செங்கமலக் கண்ணன் திருமால்; அவன் கையிலுள்ளது வெண் சங்கு.

(கூ) அடக்கம்-எளிமை.

II நன்னெறி—நல்ல நீதி நெறிகளை யெடுத்துக்காட்டும் நூல்

(க) அன்பு இல்லானுக்கு. ஏவல்-ஏவலாட்கள். நல்லாள் முதல் வேற்றுமை; நல்லாய், விளி. மொழி-வாய்ப்பேச்சு.

(உ) இருமை-பெருமை. வியன்-பரப்பு. பொன் - மூன்றன் தொகை. அதிர்தல்-ஒலித்தல். வளை-வளையல். வளையாய் என்பதை நல்லாய் என்பதைப் போலக் கொள்க. அழற் கதிர்-சூரியன். தண் என் கதிர்-சந்திரன்.

(ங) விரவலர்-பகைவர். பலி-பூசை. அவிர்தல்-விளங்குதல். கட்செவி பாம்பு-சிறை இரக்கை. புள்ளரசு-கருடன்.

(ச) உயிர் கொள்ளும். கூற்றம்-யமன். கொல்வான்-கொல்ல, குறுகுதல்-கிட்டிவருதல். கனிதல்-அன்புமிகல்.

(ரு) முகமன்-மகிழச் செய்யும் இன்சொல். இயம்பல்-சொல்லல். துன்றுதல் - மிக்குடையதாயிருத்தல். பூ-அழகு. நயத்தல்-அன்புடைமை, கை (தன்னை) (நா) புகழவோ துன்று சுவையை (யுடைய பொருட்களை) நாவிற்கு நயந்து உதவும்? (அன்று)

(சு) எயிறு-பல். முதிர்தல்-மிகல். வலியன-கடின பொருள்கள் எயிறு-வலியன மென்று நாவிற்கு சுவை விளக்கும் என்க.

(எ) தீர்வு-தீர்தல். உறுதல்-பொருந்தல். விழுமியோர்-பெரியோர். திங்கள்-சந்திரன். கறை-கறுப்பு. மேல்-விண்.

(அ) மிக்கார்-அறவழி கடந்தவர். முளிதல்-உலர்தல்.

(கூ) வேறு-அயலாராகிய. (...ஆக்குபவர்). செய்யார் செல்வம் ஆக்குபவருடையதாகும். பெய்யா-பெய்து. கடல் செய்யாருக்கும், புயல் ஆக்குபவர்க்கும் ஒப்பு.

(ய) செல்வத் தோற்றத்தோம்-செல்வ முண்டானவர்களாயிருக்கின்றோம். ஈர்ங்கோதை - குளிர்ச்சி பொருந்திய பூமாலை, ஒரு காலத்தில் சிவன் மேருமலையை வில்லாக வளைத்தான்.

(கக) கவர்தல்-வயப்படுத்தல். உள்ளம், சினம் - இரண்டன் தொகைகள். காத்தல்-தடுத்தல். தடம்-பரப்பு.

(கஉ) ஆக்கும்-உயர்வு இழிவுகளை உண்டாக்கும், மீக்கொள்-மேலாகக் கொள்ளப்பட்ட, கவர்தல்,-கொள்ளல். கடு-நஞ்சு; கடலும் அரவும்-உயர்விழிபுளார்கட்கும், நஞ்சும் மணியும்-அறிவிலார் அறிவுளார்கட்கும் முறையே ஒப்பாகக்கொள்க.

(கங) எழுத்து-இலக்கணம், கல்வி. வீதல்-அழிதல். மிகை - வெள்ளம், சுரநீர்-வான்கங்கை. ஒருகாலத்தில் வான்கங்கை வெள்ளம் சிவபெருமான் சடையில் அடங்கி ஒடுங்கிப்போயிற்று.

(கசு) காமுறுதல் விரும்பல். மற்றையர்-கீழ்மக்கள். நெடும் வெற்றி - வேல். நெடுமை நீட்சி, பெருமை. வேல் விழியை வேண்டுதல் - அது தன்னைப்போல் கொடுஞ்செயலுடைமைபற்றி. வாழைப் பழத்தைப் பால் வேண்டும், காடி வேண்டாது. பால்-மேன்மக்கள், காடி மற்றையார், வாழைப்பழம்-கற்ற அறிவினர்.

(கரு) அடல் ஏறு-கொல்லும் சிங்கம். செருக்கு - ஏழன் தொகை. முனிக்கரசு-அகத்தியர். கடல் முகந்து உண்ணப்படும்.

# அருந்தொடர்மொழிப் பொருளகராதி.

அணங்கு - தெய்வப்பெண்.
அரங்கு - சபை கூடுமிடம்.
அளாவளாவுதல் - கூடிமகிழ்தல்
அறிகுறி - அடையாளம்.
அறிவியல்-விஞ்ஞானம்: Science.
அறிவுரை-நீதிமொழி.
அற்றார் - ஏழைகள்.
அற்று - அத்தன்மைத்து.
ஆக்கம் - செல்வம்.
ஆற்றல் - வல்லமை.
இகல் - பகைமை.
இசைதல் - பொருந்தல்.
இணங்கல்-ஒத்துக்கொள்ளுதல், சேர்தல்.
இம்மி - 10,75,200ல் ஒரு பங்கு; அற்பம்.
இருநிலம் - பூமி (இரு - பெரிய)
இருவினை - நல்வினை தீவினைகள்
இலங்குதல் - விளங்குதல்.
இறைஞ்சல் - வணங்கல்.
இறைவன் - கடவுள்.
இன்றியமையாமை - இல்லாமல் முடியாமை.
ஈடுபடுதல் - ஐக்கியமாதல்.
ஈட்டுதல் - தேடிச்சேர்த்தல்.
உய்த்தல் - செலுத்துதல், சேர்த்தல்.
உரையாடல் - பேசுதல்.
உழி - இடம்.
உள்ளுதல் - எண்ணுதல்.
உறுதல் - நேரிடுதல், பொருந்தல்.
உறைதல் - குடியிருத்தல், இறுகுதல்.
உன்னுதல் - எண்ணுதல்.
ஊகித்தல் - உத்தேசித்தல்.
ஊழி - நெடுங்காலம்.
எய்தல் - உண்டாதல், அடைதல்.
எழுமை - எழ்பிறப்பு.
ஏதிலார் - ஏழைகள், பகைவர்
ஏலுதல் - பொருந்துதல். மிகுதல், கூடுதல்.
ஒறுத்தல் - வருத்துதல்.
ஒன்னார் - பகைவர்.
ஓரி - நரி.
ஓவியம் - படம்.
கசடு - ஐயந்திரிபு.
கடப்பாடு - கடமை.
கட்டழகு - உடல் வனப்பு.
கண்ணுறுத்தல் - பொறாமை யுண்டாதல்
கரண்டல் - சுறண்டல்
கரி - சான்று, சாட்சி.
கழைத்தல் - உருண்டு திரளுதல்.
களிற்றி யானை - ஆண்யானை.
காட்சி - தோற்றம், அறிவு.
காதல் - அன்புப் பெருக்கம்
கால்கொள்ளல் - துவக்கல்.
காளை - ஆண்மகன்
குலவுதல் - அளாவளாவுதல்
குறுநில மன்னர் - சிற்றரசர்.
கூகை - கோட்டான்.
கொடுசூரி - மிகக் கொடியவள்.
கோகம் - சக்கரவாகப்புள்.
கோருதல் - விரும்புதல், வேண்டுதல்.
சகோரம் - நிலாமுகிப்புள்.

சந்தி - காலை மாலை மந்திர மோதல்.
சாலுதல் - போர்துதல்.
செய்ய - செம்மையாகிய.
செற்றல்-கோபித்தல், கொல்லல்.
சொற்பொழிவு - பிரசங்கம்.
சோகாத்தல் - வருந்துதல்.
ஞானதிருஷ்டி - முன்னறிதல்.
தகைமை - தகுதி.
தம்பிரான் - திருக்கூட்டத்தலைவன், மடாதிபதி.
தலைநிற்றல் - உறுதியாகநிற்றல்.
தளைதல் - கட்டுதல்.
திகழ்தல் - விளங்குதல்.
திறம் - வகை, வன்மை.
தீட்டுதல் - எழுதுதல்.
துழத்தல் - துளாவுதல்.
துன்னுதல் - நெருங்குதல்.
தே - தெய்வம்.
தேர்தல் - ஆராய்ந்தெடுத்தல்.
தொன்றுதொட்டு - மிகப் பழைய காலமுதல்.
நற்சான்றிதழ்-Certificate.
நிகழ்தல் - நேரிடுதல் நடத்தல்.
நிராகரணம் - மறுத்தல்.
நிரோட்டகம் - (உதடுகளால்) தடைபடாது செல்லுதல்.
நெடுங்கணக்கு - அரிச்சுவடி.
நெய்தனிலம் - கடல் சார்ந்த நிலம்.
பகலவன் - சூரியன்.
பசுமரம் - பச்சைமரம்.
படைப்பு - செல்வம்.
பயக்குறை - பயன்.
பழுதை - கயிறு.
பாயிரம் - முகவுரை.
பிணக்கு - மாறுபாடு.
புகலிடம் - தஞ்சம்.
புலமை - அறிவு.
புனல் - நீர்.
பேறு - செல்வம்.
பொலிதல் - விளங்குதல்.
பொறித்துறை - Engineering.
பொன்றல் - சாதல்.
மதி - சந்திரன், அறிவு.
மரபு - பரம்பரை.
மறம் - பாவம், கொடுமை.
மன்னுதல் - நிலைபெறுதல்.
மிளிர்தல் - ஒளிர்தல்.
மேலீடு - மிகுதல்.
மேதாவி - பேரறிவாளன்.
மோழை - மொட்டையெருது.
மோனம் - சும்மாவிருக்குமறிவு.
யமகம் - வந்தசொல்லேபொருள் வேறுபட்டு ஒரே செய்யுளில் வருதல்.
யாக்கை - உடல்.
வரைதல் - எழுதல்.
வள்ளல் - வரையாது கொடுப்போன்.
வாய்ப்பு - பேறு.
வியத்தல் - ஆச்சரியப்படல்.
விழுமியோர் - சிறந்தோர்.
விளக்கீடு - விளக்குவைத்தல்.
விறைத்தல் - மரத்துப்போதல்.
வைப்புழி - வைக்குமிடம்.